# 5

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

## 5.1 பொதுநோக்கு

வெளிநாட்டுத்துறை 2014இல் முன்னேற்றமடைந்து மொ.உ.உற்பத்தியில் 2.7 சதவீதம் என்ற குறைந்த அளவான நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையினையும் சென்மதி நிலுவையில் ஐ.அ.டொலர் 1,369 மில்லியன் என்ற மிகையினையும் பதிவு செய்தது. வணிகப்பொருள் இறக்குமதிகளின் அதிகரித்த வளர்ச்சியின் மூலம் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையின் விரிவாக்கத்திற்கு மத்தியிலும், பணிகள் வர்த்தகம் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான உட்பாய்ச்சல்கள் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை குறைப்பதற்கு உதவின. அதேவேளை, வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் அரசாங்கம், வங்கிதொழில் மற்றும் தனியார் துறைகளுக்கான பெறுகைகள் போன்ற நியதிகளில் நிதியியல் கணக்கிற்கான தொடர்ச்சியான உட்பாய்ச்சல்களுடன் சேர்ந்து மேம்பாடடைந்த நடைமுறைக்கணக்கு நிலுவைகளால் ஆதரவளிக்கப்பட்டு சென்மதி நிலுவை உயர்ந்தளவானதொரு மிகையினை பதிவு செய்தது. அதன்படி, 2014 இன் இறுதியில் பன்னாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 8.2 பில்லியனுக்கு முன்னேற்றமடைந்ததுடன் இது 5.1 மாதங்களுக்கான பொருட்களின் இறக்குமதிக்கு சமனாகவிருந்தது. அதேவேளை, உயர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் உள்ளடங்கலாக உயர்ந்த உட்பாய்ச்சல்களுக்கு மத்தியில் ஆண்டின் முதலரைப் பகுதியில் இலங்கை ரூபா உயர்வடைந்திருந்தது. ஆனாலும், இப்போக்கானது, முக்கியமாக இறக்குமதியின் மீதான அதிகரித்த செலவினம் மற்றும் அரச பிணையங்கள் சந்தைகளின் வெளிநாட்டு முதலீகளுடன் இணைந்துள்ள தேறிய வெளிப்பய்ச்சல்கள் என்பவற்றின் காரணத்தினால் ஆண்டின் இரண்டாவது அரைப்பகுதியில் நேர்மாறாகியது. இதன் காரணமாக, 2014 இல் இலங்கை ரூபா ஒப்பீட்டு ரீதியில் உறுதியாக காணப்பட்ட வேளையில், உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் ஆண்டுக்காலப்பகுதியில் உயர்வடைந்தன.

**வெளிநாட்டு பக்கத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் அவதானிக்கப்பட்ட போதிலும், இலங்கையின் வெளிநாட்டு துறை உலகலாவிய மற்றும் உள்நாட்டு துறை காரணிகளின் காரணமாக 2014இன் இறுதியில் சில குறிப்பிடத்தக்க சவால்களுக்கான சாத்தியம் பற்றி எடுத்துக்காட்டுகின்றன.** இத்தகைய சவால்கள் செலாவணி வீதத்தின் மீதும் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் மீதும் சில அழுத்தத்தை தோற்றுவித்து, எதிர்காலத்தில் எழக்கூடிய மோசமான அபிவிருத்திகளுக்கெதிரான தீர்க்கமான கொள்கை வழிமுறைகளினூடாக தாங்கிருப்பினைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையையும் அதன் மூலம் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேண வேண்டிய தேவையினையும் எடுத்துக்காட்டுகிறது. குறிப்பாக, வெளிநாட்டுத் துறையில் அதிகரித்துவரும் சமநிலையற்ற தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்காக 2012இன் தொடக்கப் பகுதியில் மத்திய வங்கியினாலும் அரசினாலும் 2012இல் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகளின் சாதகமான தாக்கம் இறக்குமதிகள் மீதான சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை, குறைக்கப்பட்ட உலகளாவிய வளர்ச்சி மரபுவழியற்ற நாணயக் கொள்கையுடன் தொடர்பட்ட வழிமுறைகளினால் தூண்டப்பட்ட அதிகரித்த உலகலாவிய சந்தைத் தளம்பல்கள் என்பனவற்றின் காரணமாக 2014 இறுதியில் மிதமடைந்தன. வெளிநாட்டுச்செலாவணிக்கான உயர்ந்த

**அட்டவணை 5.1 சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை (பிபீஎம்6 இன்படியான வெளிப்படுத்துகை வடிவமைப்பு)**

| வகை | ஐ.அ.டொ. மில்லியன் | | ரூபா மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2013 (அ) | 2014 (ஆ) | 2013 (அ) | 2014 (ஆ) |
| **நடைமுறை கணக்கு** | **-2,541** | **-2,018** | **-323,961** | **-263,428** |
| **வர்த்தக நிலுவை** | **-7,609** | **-8,287** | **-979,074** | **-1,081,987** |
| ஏற்றுமதி | 10,394 | 11,130 | 1,344,054 | 1,453,176 |
| இறக்குமதி | 18,003 | 19,417 | 2,323,128 | 2,535,163 |
| **பங்களிப்பு (தேறிய)** | **1,180** | **1,880** | **152,521** | **245,496** |
| பெறுகைகள் | 4,685 | 5,605 | 605,104 | 731,863 |
| கொடுப்பனவுகள் | 3,505 | 3,725 | 452,583 | 486,367 |
| **முதன்மை வருமானம் (தேறிய)** | **-1,751** | **-1,839** | **-226,086** | **-240,065** |
| பெறுகைகள் | 132 | 153 | 17,003 | 20,040 |
| கொடுப்பனவுகள் | 1,883 | 1,992 | 243,090 | 260,104 |
| **இரண்டாந்தர வருமானம் (தேறிய)** | **5,639** | **6,227** | **728,678** | **813,128** |
| இரண்டாந்தர வருமானம்: வரவு | 6,428 | 7,046 | 830,407 | 920,035 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 6,407 | 7,018 | 827,689 | 916,344 |
| அரசாங்க மாற்றல்கள் | 21 | 28 | 2,718 | 3,691 |
| இரண்டாந்தர வருமானம்: செலவு | 788 | 819 | 101,728 | 106,906 |
| **மூலதன கணக்கு** | **71** | **58** | **9,188** | **7,684** |
| மூலதன கணக்கு: வரவு | 90 | 73 | 11,596 | 9,586 |
| மூலதன கணக்கு: செலவு | 19 | 15 | 2,409 | 1,903 |
| **நடைமுறை மற்றும் மூலதன கணக்கு** | **-2,470** | **-1,960** | **-314,773** | **-255,744** |
| **நிதியியல் கணக்கு** | **3,064** | **1,936** | **388,700** | **252,409** |
| **நேரடி முதலீடு : சொத்துக்கள்** | **65** | **67** | **8,399** | **8,725** |
| **நேரடி முதலீடு : பொறுப்புக்கள்** | **933** | **944** | **120,817** | **123,304** |
| **சொத்துப் பட்டியல் முதலீடு: சொத்துக்கள்** | **...** | **...** | **-29** | **-29** |
| படுகடன் பிணையங்கள் | ... | ... | -29 | -29 |
| **சொத்துப் பட்டியல் முதலீடு: பொறுப்புக்கள்** | **2,068** | **1,996** | **265,723** | **260,728** |
| பங்கு மூலதனம் | 226 | 184 | 29,048 | 24,063 |
| படுகடன் பிணையங்கள் | 1,843 | 1,812 | 236,676 | 236,665 |
| **நிதியியல் பெறுமதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு: சொத்துக்கள்** | **-191** | **688** | **-24,531** | **89,993** |
| நாணய மற்றும் வைப்புக்கள் | -459 | 276 | -58,839 | 36,115 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணம் | 225 | 98 | 29,128 | 12,795 |
| கிடைக்கவேண்டிய ஏனைய கணக்கு | 42 | 314 | 5,181 | 41,082 |
| **ஏனைய முதலீடு: பொறுப்புக்கள்** | **1,048** | **1,298** | **137,452** | **169,506** |
| நாணய மற்றும் வைப்புக்கள் | 108 | -292 | 14,960 | -38,152 |
| கடன்கள் | 1,118 | 1,847 | 144,640 | 240,985 |
| மத்திய வங்கி | -453 | -719 | -57,683 | -93,904 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 124 | 1,358 | 15,940 | 177,243 |
| பொது அரசாங்கம் | 841 | 646 | 108,284 | 84,199 |
| ஏனைய துறைகள் | 605 | 563 | 78,099 | 73,447 |
| வர்த்தக கொடுகடனும் முற்பணங்களும் | -235 | -407 | -30,495 | -53,256 |
| செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள் | 58 | 151 | 8,348 | 19,929 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - | - | - |
| **ஒதக்கு சொத்துக்கள்** | **1,112** | **1,548** | **151,454** | **202,442** |
| நாணைய தங்கம் | 351 | 9 | 44,862 | 1,154 |
| சிறப்பு எடுப்பனவு உரிமை | 12 | -6 | 1,410 | -748 |
| ப.நா.நி.இல் ஒதுக்கு நிலமை | - | - | - | - |
| ஏனைய ஒதுக்கு சொத்துக்கள் | 749 | 1,545 | 105,182 | 202,036 |
| நாணயமும் வைப்புக்களும் | 1,297 | 496 | 176,818 | 64,720 |
| பிணையங்கள் | -548 | 1,049 | -71,636 | 137,316 |
| **தேறிய பிழைகளும் தவறுகளும்** | **-594** | **24** | **-73,927** | **3,335** |
| **திரண்ட நிலுவை (இ)** | **985** | **1,369** | **226,086** | **397,126** |
| **மொ.உ.உ.இன் சதவீதமாக (ஈ)** | | | | |
| வர்த்தக நிலுவை | -11.3 | -11.1 | | |
| பொருட்கள் மற்றும் பணிகள் | -9.6 | -8.5 | | |
| நடைமுறை கணக்கு | -3.8 | -2.7 | | |
| நடைமுறை மற்றும் மூலதன கணக்கு | -3.7 | -2.6 | | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது
(இ) ஒட்டுமொத்த மீதியை பெறுவதற்கு அட்டவனை 5.11 மற்றும் சேர்ந்துள்ள குறிப்பு என்பவற்றை பார்க்கவும்

கேள்வியின் காரணத்தால் உள்நாட்டு வெளிநாட்டுச்சந்தை மீதான அதிகரித்த அழுத்தத்துடன் கூடிய வழிமுறைகள் வெளிநாட்டு முண்ணனியின் சாத்தியமான சவால்களை வலியுறுத்தின. எனவே, இந்திய றிசேர்வ் வங்கியுடன் செய்து கொள்ளப்பட்ட நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கை, பன்னாட்டு ஒதுக்கு மட்டங்களை மேம்படுத்துவதற்காக இலங்கை அபிவிருத்தி முறிகளை வழங்குதல் போன்றவற்றை உள்ளடக்கி அரசாங்கமும் மத்திய வங்கியும் தாங்கிருப்புக்களை கட்டியெழுப்புவதற்காக பல வழிமுறைகளை முன்னெடுத்தன.

## 5.2 வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

**உலகப் பொருளாதாரத்துடன் இலங்கையில் ஒருங்கிணைப்பை மேம்படுத்தும் நோக்கில் வெளிநாட்டு வர்த்தக கொள்கையின் மீதான கவனம் 2014இல் மேலும் தொடர்ந்தது.** இதனை அடையும் விதத்தில் ஏற்றுமதி துறையின் வாய்ப்புக்கள் மற்றும் செயலாற்றத்தை மேம்படுத்துவதற்கு ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கம் மற்றும் தனியார் துறை நிறுவனங்களால் வேறுபட்ட வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டன. அத்தகைய வழிமுறைகள் இலங்கையின் உற்பத்திகள் வெளிநாட்டு சந்தைகளுக்குள் நுழைவதனை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள், வர்த்தக மற்றும் தீர்வை கொள்கையின் மேலதிக ஒழுங்குபடுத்தல் மற்றும் முதலீடுகளின் ஊக்குவிப்பு என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. ஏற்றுமதி மேம்படுத்தலானது வெளிநாட்டு வர்த்தக கொள்கையின் முக்கிய முன்னுரிமையாகக் காணப்பட்ட வேளையில் தெரிவு செய்யப்பட்ட உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாக்கும் நோக்கில் இறக்குமதியை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக சில கொள்கை வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டன.

**ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கைப் உற்பத்திகள் வெளிநாட்டு சந்தையில் உள்நுழைவதனை வலுப்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகள் எடுக்கப்பட்டன.** தற்போதைய வர்த்தக உடன்படிக்கைகளினை வினைத்திறனான முறையில் பயன்படுத்தல், புதிய வர்த்தக உடன்படிக்கையில் உள்நுழைவதற்கான சாத்தியப்பாட்டைத் தேடுதல், சந்தை ஆராய்ச்சி நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் மேம்படுத்தலும் மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளிலான மேம்படுத்தும் பிரச்சாரங்கள் என்பன இவற்றின் சில வழிமுறைகளாகும். மேலும், ஜிஎஸ்பி+ அந்தஸ்தினை மீளப்பெறுவதற்கான பேச்சுவார்த்தைச் செயன்முறை இலங்கையின் முக்கியமான ஏற்றுமதி நிலையமான ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் நுழைவதற்கான சலுகை வசதியை இலங்கைக்கு வழங்கும். இது இலங்கையின் உற்பத்திகளுக்கான சந்தைகளை அணுகும் தன்மையினை அதிகரிக்கும்.

**இருபுடை வர்த்தக உடன்படிக்கைகளின் பயன்பாடுகளில் திருப்திகரமான முன்னேற்றங்கள் 2014இல் அவதானிக்கப்பட்டன.** இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியாவிற்கான இலங்கையின் ஏற்றுமதி 2013இன் ஐ.அ.டொலர் 367 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ஐ.அ.டொலர் 376 மில்லியன் மட்டத்திற்கு முன்னேற்றமடைந்திருந்தது. இது 2014இல் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கான மொத்த ஏற்றுமதியில் 60 சதவீதமாகும். இரண்டு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார புரிந்துணர்வை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் வர்த்தக செயலாளர்களின் இரண்டாம் சுற்று கலந்துரையாடல்கள் இந்தியாவில் இடம்பெற்றது. மேலும், பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கீழ் காணப்பட்ட சில எஞ்சிய பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கில் வர்த்தகம் மீதான இணைந்த பணிக்குழு தாபிக்கப்பட்டதுடன் சுங்கம் ஒருங்கிணைப்பு, வர்த்தக முரண்பாட்டுத் தீர்வு, தீர்வையற்ற தடைகள் மற்றும் சந்தை கையாளல் பிரச்சனைகள் போன்ற விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டன. பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 2014இல் பாகிஸ்தானுக்கான இலங்கையின் ஏற்றுமதி பொருட்களின் பெறுமதி ஐ.அ.டொலர் 52 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இது பாகிஸ்தானுக்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் 70 சதவீதமாகும். மேலும், முன்மொழியப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினூடாக இலங்கை சீனாவுடனான இருபுடை வர்த்தக உடன்படிக்கைகளை உருவாக்குவதற்காக அதனது முயற்சியை தொடர்ந்தது. வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு என்பவற்றின் மீதான சிறப்பு வழியுறுத்தல்கள் மூலம் முன்மொழியப்பட்ட சீனா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தை 2014 நவெம்பரில் இடம்பெற்றது. முன்மொழியப்பட்ட சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஆடைத்துறையானது தூண்டுதல் துறையாக அடையாளம் காணப்பட்டதுடன், இது சீன சந்தைக்கான நுழைவினை பெற்றுக்கொடுக்கும்.

**பிராந்திய மற்றும் பல்புடை உடன்படிக்கைகள் என்பவற்றின் கீழான வர்த்தகமும் 2014இல் தொடர்ந்தது.** தென்னாசிய சுதந்திர வர்த்தக பிராந்தியத்தின் மீதான உடன்படிக்கையின் கீழ் பங்களாதேஷ், இந்தியா, மாலைத்தீவு, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் என்பவற்றுக்காக இலங்கையில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி 2013இன் ஐ.அ.டொலர் 2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ஐ.அ.டொலர் 13 மில்லியன் பெறுமதியாகவிருந்தது. இவ்வொழுங்குமுறையின் கீழ், ஒவ்வொரு அங்கத்துவ அரசுகளின் எதிர்க்கணியப்பட்டியலின் 20 சதவீதக் குறைப்பானது இறுதிப்படுத்தப்பட்டு நடைமுறைக்கிடப்பட்டது. 2014 ஆண்டுக் காலப்பகுதியில் தீர்வைச் சலுகைகளை ஆழமாக்குவதற்கான வழிகள், ஆரம்ப விதிகளை தாராளமயப்படுத்தல், வர்த்தக வசதிப்படுத்தல், முதலீடு மற்றும் பணிகள் என்பவற்றின் மீதான கட்டமைப்பு உடன்படிக்கை நடைமுறைக்கிடலுக்கான வழிகாட்டல் என்பவற்றைக் கலந்துரையாடுவதற்காக ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் துணைநில் குழுக் கூட்டங்களின் மூன்று அமர்வுகளில் இலங்கை வெற்றிகரமாக பங்குபற்றியிருந்தது. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் அங்கத்துவ நாடுகளுக்கான இலங்கையிலிருந்தான மொத்த ஏற்றுமதிகளின் பெறுமதி 2013இன் ஐ.அ.டொலர் 84 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014 ஆண்டுக் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 120 மில்லியனாகக் காணப்பட்டது. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை அங்கத்தவர்களிடையே, இலங்கைக்கான முக்கிய சந்தையாக சீனா காணப்பட்டதுடன், இது ஏறத்தாழ 75 சதவீத ஏற்றுமதிக்கு வகைகூறியது. மேலும் 2014 காலப்பகுதியில் பணியிலுள்ள வர்த்தகம் மீதான சார்க் (பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென்னாசிய அமைப்பு) உறுப்பு நாடுகளின் உடன்படிக்கையின் மீது பிராந்திய ஒருங்கிணைப்பிற்கான கடப்பாட்டு அட்டவணைகளில் இறுதிப்படுத்தல்கள் செயற்பாட்டிலிருந்ததுடன், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா மற்றும் நேபாளம் என்பன ஒப்புதலளிக்கப்பட்ட இறுதி வழங்கல் பட்டியல்களை சமர்ப்பித்துள்ள வேளையில் இலங்கையின் கடப்பாட்டு அட்டவணை மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

**வர்த்தக மேம்படுத்தலுக்கான நிறுவன ரீதியான ஆதரவு 2014இல் மேலும் உயர்த்தப்பட்டது.** 2015 - 2020 இற்கான தேசிய ஏற்றுமதி உபாயத்தை உருவாக்குவதற்கான ஆரம்பத்தை மேற்கொள்ளும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை வழங்கல் சங்கிலி வினைத்திறன், சந்தை மற்றும் பொருட்களின் பன்முகப்படுத்தல் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட ஏற்றுமதிகளின் மேம்பாடு என்பவற்றை மேம்படுத்துவதற்கு அநேக நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைக்கிட்டது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஐரோப்பிய ஒன்றிய பிராந்தியம், ஐக்கிய அமெரிக்கா, ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கா போன்றவற்றை உள்ளடக்கியிருந்த வேளையில், சந்தை ஆராய்ச்சிப் பிரச்சாரங்கள் முக்கியமாக பிரேசில், தென்னாபிரிக்கா மற்றும் சீனா என்பவற்றின் மீது கவனம் செலுத்தியது. மேலும், ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், கொலம்பியா மற்றும் பெரு அதைப்போன்றும் உலக புலமைச் சொத்து அலுவலகம் போன்றவற்றில் "இலங்கை கறுவா" என்ற வர்த்தகக் நாமத்தை பதிவு செய்திருந்தது. ஏற்றுமதியை மேலும் வசதிப்படுத்தும் நோக்கில், இலங்கைச் சுங்கத்தில் ஒரே கூரையின் கீழ் அனைத்துப் பணிகளையும் பெறும் நிலையத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இது வங்கி வசதிகள், தொற்று தடைகாப்பு மற்றும் ஏற்றுமதி

மற்றும் இறக்குமதி கொடுக்கல்வாங்கல்களுக்கான அதேநேர கொடுப்பனவு முறையுடனான அதேநேர தளமொன்றில் தரச் சான்றிதல்கள் என்பவற்றை வழங்குகின்றது. இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வர்த்தகம் மற்றும் அரசியல் இடர்நேர்வுகளுக்கு எதிராக ஏற்றுமதியாளர்களுக்கு காப்புறுதி பாதுகாப்பினை வழங்கியது. இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் 2014 காலப்பகுதியில் மரபு மற்றும் மரபுசாரா சந்தைகளுக்கு வழங்கப்பட்ட மொத்த காப்புறுதி வசதிகள் 21.0 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டியிருந்தது. ஏற்றுமதி அபிவிருத்தியில் அரசுசாரா துறைகளின் மேம்படுத்தப்பட்ட பங்குபற்றுதலை வெளிப்படுத்தும் வகையில் புடவை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கு இணைந்த ஆடை அரங்கம் பல்வேறு வழிமுறைகளை அமுல்படுத்தியிருந்தது. ஆண்டுக் காலப்பகுதியில் சீனாவுடன் முன்மொழியப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நெருக்கமான பங்குபற்றல், சாத்தியமான சிறந்த வர்த்தக உடன்படிக்கைகளின் மீது யப்பானுடனான வர்த்தக கலந்துரையாடல், வர்த்தக பிரதிநிதி ஒருவரை பிரேசிலுக்கு அனுப்புதல் மற்றும் குறிப்பாக சீனா, தாய்லாந்து மற்றும் இந்தோனேசியா போன்ற சந்தைகளில் "இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஆடைகள்" என்ற எண்ணக்கருவை மேம்படுத்தல் என்பவற்றினூடாக இணைந்த ஆடை அரங்கம் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டிருந்தது. மேலும், இலங்கை ஏற்றுமதி செயன்முறை வலயங்களுக்குள்ளான ஆடைக் கைத்தொழிற்சாலைகளுக்கான ஏற்றுமதி ஆவணமாக்கல்களை செயன்முறைப்படுத்துவதற்கான ஒரு இலத்திரனியல் முறைமை இணைந்த ஆடைக் சங்க அரங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இது கம்பனிகள் கொடுக்கல் வாங்கல் நேரம் மற்றும் செலவுகளைக் குறைப்பதற்கு இயலுமாயிருப்பதுடன் மரபு சார்ந்த மற்றும் மரபு சாராத ஆகிய இரண்டு சந்தைகளிலும் உயர் போட்டித்தன்மை வாய்ந்த ஆடைக் கைத்தொழிலில் முக்கியமானதாகும். அதேநேரம், 2014இல் பன்னாட்டு வர்த்தகம் மற்றும் முதலீடு என்பவற்றை மேம்படுத்துவதற்கு இலங்கை வர்த்தக சம்மேளனமும் அநேக நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கமைத்திருந்தது. ஓமான், சிங்கப்பூர், இந்தோனேசியா, யப்பான், மாலைதீவு, சீனா மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகளுக்கான வெளிவாரி வியாபார ஊக்குவிப்பு தாதுக்குழுக்கள் இவற்றுள் சிலவாகும்.

**ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களில் முதலீடுகளை மேம்படுத்துவதற்காக 2014இல் பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** இரத்தினக்கல் மற்றும் ஆபரணம், கருவாடு போன்ற குறித்துரைக்கப்பட்ட உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக பல பொருளாதார வலயங்களை உருவாக்குவதற்கு இது முன்மொழிகிறது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதனைத் தொடர்வதற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, புத்தாக்கம் மற்றும் வர்த்தக நாம ஊக்குவிப்பு மீதான செலவினம் தொடர்பாக 2014 வரவு செலவுத்திட்டத்தில் 300 சதவீத வரிக் கழிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இது ஏற்றுமதி தயாரிப்பாளர்கள் மீது பிரயோகிக்கத்தக்க வருமான வரியின் மீது குறைப்பொன்றினை முன்மொழிந்திருந்த வேளையில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக உயர்தரப் பொறிகள் மீதான தேய்விற்கான ஏற்பாட்டிலும் அதிகரிப்பொன்றிற்கு முன்மொழியப்பட்டது.

**தேசிய அபிவிருத்திக் கட்டமைப்பில் வர்த்தக ஊக்குவிப்பின் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கு 2014இல் வர்த்தக மற்றும் தீர்வைக் கொள்கைகள் தளர்த்தப்பட்டன.** உயர்ந்த பெறுமதிகூட்டப்பட்ட மற்றும் உயர் தொழில்நுட்பக் கைத்தொழில் உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்ற பொருளாதாரம் என்பதற்கு மாறுகின்ற சரியான நேரத்தினை அங்கீகரிக்கின்ற விதத்தல் தேயிலை, இறப்பர், தெங்கு, கறுவா மற்றும் ஏனைய வாசனைத் திரவியம் போன்வற்றின் ஏற்றுமதி மீது உயர்ந்த மட்ட செஸ் பேணப்பட்டது. மேலும், தேயிலை ஏற்றுமதியின் மீது சேகரிக்கப்பட்ட 50 சதவீதமான செஸ் இலங்கை தேயிலையை பன்னாட்டு சந்தையில் மேம்படுத்தல் பிரச்சாரங்களுக்காக பயன்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவதற்கு சிறு உடமை தேயிலை தொழிற்சாலைகளுக்கு நிதியியல் உதவிகள் முன்மொழியப்பட்ட வேளையில் மீள்நடுகை மற்றும் புதிய நடுகை போன்ற மேம்படுத்தல்கள் முன்மொழியப்பட்டன. வியாபாரத்திற்கான மாதிரிகளின் ஏற்றுமதி மீதான பெறுமதி சேர் வரி விலக்களிப்புக்களுக்கான தற்போதைய உச்ச வரம்பு அதிகரிக்கப்பட்டதுடன் பன்னாட்டு வர்த்தகப் பொருள் காட்சிப்படுத்தல் மற்றும் கண்காட்சிகளில் ஏற்றுமதியாளர்கள் அவர்களின் உற்பத்திகளை காட்சிப்படுத்துவதற்கு அதிக வசதிகளை வழங்குகின்றது. மேலும் ஏற்றுமதி சந்தைகளுக்கு, ஆபரணங்களை உருவாக்குவதற்கான உள்ளீடுகளாக தங்கம் காணப்படுவதால் அதனது இறக்குமதி மீது வரி விலக்களிப்பு வழங்குவதனூடாக ஆபரணங்களின் ஏற்றுமதி மேம்படுத்தப்பட்டன.

**2014இல் இறக்குமதிகள் மீதான செலவுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பல வழிமுறைகள் நடைமுறைபடுத்தப்பட்டன.** தெங்கு கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்கில் 2013இல் இருந்து சமையல் எண்ணெய், தேங்காய் எண்ணெய் மற்றும் தாவர எண்ணெய் என்பவற்றின் மீதான உயர் வரிகள் 2014இல் தொடர்ந்தும் பேணப்பட்டன. கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூ.350 ஆக ஒரு உத்தரவாத விலை நடைமுறைக்கிடப்பட்டதன் மூலம் உள்நாட்டு இறப்பர் உற்பத்தி ஊக்குவிக்கப்பட்ட வேளையில் இறப்பர் இறக்குமதிகள்

மீதான செஸ் கி.கிறாமிற்கு ரூ.10 இனால் அதிகரிக்கப்பட்டது. கடந்த அண்மைக் காலங்களில் உள்நாட்டு பாற்பண்ணை உற்பத்திகளை அதிகரிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. பால்மா, வெண்ணெய்க் கட்டி, யோகட் மற்றும் பாற்பண்ணை உற்பத்திகள் என்பவற்றின் இறக்குமதி மீது பிரயோகிக்கத்தக்க உயர் செஸ் வரி 2014இல் மேலும் வலுப்படுத்தப்பட்டன. மேலும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பாற்பண்ணை உற்பத்தி மற்றும் நுகர்வை ஊக்குவிப்பதற்கு உள்நாட்டு திரவப் பாலிற்கான உத்தரவாத விலை லீற்றருக்கு ரூ.10 இனால் ரூ.70 இற்கு அதிகரிக்க பிரேரிக்கப்பட்டதுடன் விலைக்குறைப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. இக்கொள்கை வழிமுறைகள் பண்ணை உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினத்தைக் குறைக்குமெனவும் பாற்பண்ணைத் துறையில் கூடுதலான தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதிக வலுச் சேமிப்பு உந்து ஊர்திகளின் பாவனையை ஊக்குவிப்பதற்கானதொரு முயற்சியாக இலத்திரனியல் கார் மீதான சுங்கத்தின் அடிப்படையிலான வரி குறைக்கப்பட்டதுடன் உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான வரிக்கட்டமைப்பை எளிதாக்கும் நோக்கில் பல வரிகளுக்கு பதிலாக கலால் வரி அமுல்படுத்தப்பட்டது. மேலும், 2015இல் 1000 சி.சி இற்கும் குறைவான இயலளவைக் கொண்ட எந்திரங்களுடன் கூடிய உந்து ஊர்திகள் மீதான இறக்குமதி வரிகள் குறைக்கப்பட்ட வேளையில், வலு கலப்பு வலு ஊர்திகள் மீதான கலால் வரிகள் குறைக்கப்பட்டன.

**2014 காலப்பகுதியில் உலக வர்த்தக நிறுவனத்தின் பல்புடை முயற்சிகளில் இலங்கை தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தது.** உலக வர்த்தக நிறுவனத்தின் அங்கத்தவர்கள் 2013 திசெம்பரில் நடைபெற்ற 9ஆவது அமைச்சுக்களின் தீர்மானங்களை பாளி பொதியில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்களை ஆரம்பித்திருந்தனர். 2008 இலிருந்து டோகா சுற்று மந்தமான தன்மையைக் காட்டியிருந்தமையால் அங்கத்துவ நாடுகள் பாளி பொதி தொடர்பில் பணியாற்றுவதற்கு உடன்பட்டிருந்தனர். இது வர்த்தக வசதிப்படுத்தல், வேளாண்மை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பிரச்சினைகள் போன்ற வரையறுக்கப்பட்ட விடயங்களைக் உள்ளடக்கியுள்ளது. ஆண்டு காலப்பகுதியில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்டிருந்த வர்த்தக வசதிபடுத்தல் மீதான உடன்படிக்கை முக்கிய கவனத்தில் விடயமாக காணப்பட்டது. அதன்படி, இலங்கை உள்ளிட்ட அங்கத்தவர்கள் வர்த்தக வசதிபடுத்தல் மீதான உடன்படிக்கையின் சட்ட மீளாய்வை மேற்கொண்டதுடன் ஒவ்வொரு அங்கத்தவர்களும் உடனடியாக நடைமுறைக்கிடக் கூடிய அத்தகைய கடப்பாடுகளின் அறிவித்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 2014 காலப்பகுதியில் உலக வர்த்தக அமைப்பின் உடன்படிக்கைக்கான உடன்படிக்கை திருத்த நெறிமுறையை இறுதி செய்திருந்தனர். 2014 நவம்பரில் பின்பற்றப்பட்ட நெறிமுறை உரை மீது அங்கத்தவர்கள் உடன்படிக்கையொன்றை அடைந்ததுடன் இது தற்போது உலக வர்த்தக நிறுவனத்தின் அங்கத்தவர்களால் ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கிறது. உணவுப் பாதுகாப்பு நோக்கங்களுக்காக பொது இருப்பு வைப்புக்கான வேளாண்மை நெகிழ்வுத்தன்மை, தீர்வை வீத கோட்டா நிர்வாகம் மற்றும் ஏற்றுமதி போட்டித்தன்மை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் / குறை அபிவிருத்தியடைந்த நாடுகள் பொதியின் பிரச்சினைகள் என்பவற்றை உள்ளடக்கிய பாளி பொதியின் ஏனைய துறைகள் மீதான உடன்படிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

**பன்னாட்டு வர்த்தகம் மீதான உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சவால்கள் நாட்டிற்கான தெளிவான மற்றும் செயற்றிறனுடனான வர்த்தகக் கொள்கையை மிகத் தேவைப்படுத்துகின்றது.** அதிக சந்தைகளை அணுகுவதற்கான சலுகை அடிப்படையிலான அணுகுமுறை, உயர்ந்த தலா வருமானத்தின் மூலம் மேல் நடுத்தர வருமான நாடாக இலங்கை இருக்குமாயின் மட்டுப்படுத்தப்படும். தீவிரமான உலகளாவிய போட்டியைச் சமாளிப்பதற்கும் புதிய சந்தைகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை அணுகுவதற்கும் நிறுவன ரீதியிலான ஆதரவு ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். எனவே, உயர் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை மேம்படுத்தல், பன்னாட்டுச் சந்தைகளில் போட்டியிடும் நோக்கில், உற்பத்திச் செலவை குறைத்தல், இடர்நேர்வின் அதிகரித்த தாக்கத்தினைக் குறைப்பதற்கு உற்பத்தி மற்றும் சந்தையை பன்முகப்படுத்தல் மற்றும் சந்தைக்கு பொருட்களை விநியோகிப்பதற்கான நேரத்தை குறைப்பதற்காக உள்ளக பொறிமுறைமைகள் மற்றும் செயன்முறைகளை மேம்படுத்தல் போன்றவற்றினை நோக்கி வெளிநாட்டு வர்த்தக கொள்கை நெறிப்படுத்தப்படவேண்டும். மேலும், முக்கிய பன்னாட்டுச் சந்தைகளில் புவியியல்சார் அரசியல் பிரச்சனைகள், இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு சவால்களைத் தோற்றுவிப்பதனால் ஏனைய சந்தைகளுக்கு மாறுவதற்கான உபாயங்களை உரிய நேரத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 5.3 பொருட்களிலான வர்த்தகம், வர்த்தக நிலுவை, வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகத்தின் போக்கு

### 5.3.1 ஏற்றுமதிச் செயலாற்றம்


**2014இல் நிலையான உள்நாட்டுப் பேரண்டப் பொருளாதார சூழலுடனான முன்னேற்றமடைந்த வெளிநாட்டு கேள்வி அதிகரித்த ஏற்றுமதிச் செயலாற்றத்தை அடைந்து கொள்வதற்கு உள்நாட்டு கைத்தொழிலிற்கு ஆதரவளித்தன.** அதன்படி, ஏற்றுமதியின் அனைத்து முக்கிய வகைகளின்

பங்களிப்பின் மூலம் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2013இன் ஐ.அ.டொலர் 10,394 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ஐ.அ.டொலர் 11,130 மில்லியன் பெறுமதிக்கு 7.1 சதவீதத்தினால் அதிகரித்திருந்தன.

**மொத்த ஏற்றுமதியில் 75 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கைத்தொழில் ஏற்றுமதிகள் 2014இல் ஏற்றுமதியின் வளர்ச்சியில் பாரியளவிற்கு பங்களித்திருந்தன.** புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 4,930 மில்லியன் பெறுமதிக்கு 9.4 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தமையின் முக்கிய காரணத்தால் கைத்தொழில் ஏற்றுதிகளிலிருந்தான வருவாய்கள் 2014இல் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 6.6 சதவீதத்தால் ஐ.அ.டொலர் 8,262 மில்லியனுக்கு அதிகரித்தது. புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகளின் வளர்ச்சி ஏற்றுமதியின் மொத்த வளர்ச்சியில் 50.0 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்களிப்பை வழங்கியது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பவற்றுக்கான ஆடை ஏற்றுமதிகள் முறையே 10.6 சதவீதம் மற்றும் 8.8 சதவீதமாக அதிகரித்திருந்த அதேவேளையில் மரபுசாரா சந்தைகளுக்கான ஏற்றுமதிகள் 2013இல் 8.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 10.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. மரபுசாரா சந்தைகளுக்கு நுழைவதற்காக, அதிகாரங்கள் மற்றும் கைத்தொழில் பங்குபற்றுனர்களால் பின்பற்றப்பட்ட வழிமுறைகள் அத்தகைய சந்தைகளுக்கான உயர் ஏற்றுமதி வளர்ச்சியை அடைவதற்கு உதவியிருந்தன. மேற்கத்தேய சந்தைகளுக்கான காலணிகளின் உயர்ந்த மட்ட ஏற்றுமதிகளின் முக்கிய காரணத்தினால் 2014இல் தோல் உற்பத்திகளின் மீதான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 139 மில்லியன் பெறுமதிக்கு 80.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. புதுப்பாணியிலான காலணிகளின் வழங்குனர்கள் கீர்த்தி மிக்க பன்னாட்டு வர்த்தகக் குறிகளுக்கிடையே காணப்பட்டதனால் இலங்கையின் காலணி ஏற்றுமதியாளர்கள் கீர்த்தி பெற்றிருந்தனர். 2014இல் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை மற்றும் பொறிகளும் பொறிசார் கருவிகளும் கணிசமான அதிகரித்திருந்தன. எனினும், இந்தியா மற்றும் சிங்கப்பூர் போன்ற முக்கிய பிராந்திய நாடுகளிலிருந்தான அதிகரித்த போட்டியின் மத்தியிலும் கப்பல் மற்றும் வானூர்தி எரிபொருளை முக்கியமாக உள்ளடக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 338 மில்லியன் பெறுமதிக்கு 21.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தன. மேலும், பிராந்திய சந்தைகளிலிருந்தான இறுக்குமதி செய்யப்பட்ட கப்பல் எரிபொருள் மீது அதிகமாக தங்கியிருத்தல் மற்றும் வரையறுக்கப்பட்ட களஞ்சியப்படுத்தல் இயலளவு என்பவற்றின் காரணத்தினால் அலகிற்கான செலவானது அதிகரிக்கின்றமையால் இலங்கை கப்பல் எரிபொருள் கைத்தொழிலில் சார்பு ரீதியில் குறைந்த போட்டித்தன்மை கொண்ட நாடாக மாற்றமடைந்தது. முக்கிய கைத்தொழில் பங்குபற்றுனர்களின் செயற்பாடற்றதன்மையின் காரணமாக வைரங்களின் ஏற்றுமதியும் 32.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதி ஆண்டு காலப்பகுதியில் அதனது வளர்ச்சி உத்வேகத்தை நிலைநிறுத்தியிருந்தது.

**ஆண்டு காலப்பகுதியில் மொத்த ஏற்றுமதியில் ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கினைக் கொண்டுள்ள வேளாண்மை ஏற்றுமதிகள் மேலும் முன்னேற்றமடைந்தது.** தெங்குப் பொருட்கள், தேயிலை மற்றும் குறிப்பிட்ட சிறு வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதியினால் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2014இல் ஐ.அ.டொலர் 2,794 மில்லியனுக்கு 8.2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டில் நிலவிய சாதகமான காலநிலை நிலமைகளினால் ஆதரவளிக்கப்பட்ட தேங்காய் துருவல் மற்றும் தேங்காய் எண்ணெய் போன்ற உள்ளீட்டு உற்பத்தி ஏற்றுமதிகளின் மேம்பாடடைந்த செயலாற்றத்தின் முக்கிய காரணத்தினால் தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதி 2014இல் ஐ.அ.டொலர் 356 மில்லியனுக்கு 74.2 சதவீதம் அதிகரித்திருந்தது. மொத்த ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 15.0 சதவீதத்தைக் கொண்ட தேயிலை ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் 2013இல் பதிவு செய்யப்பட்டிருந்த 9.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 5.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்தது. தேயிலை ஏற்றுமதியின் மெதுவான வளர்ச்சி, மொத்த தேயிலை ஏற்றுமதியில் 59.0 சதவீதத்திற்கு வகைகூறிய ருஷியா மற்றும் மத்திய கிழக்கு போன்ற முக்கிய ஏற்றுமதி அமைவிடங்களிலிருந்தான குறைவடைந்த கேள்வியை பிரதிபலித்திருந்தது. எண்ணெய் விலைகள் வீழ்ச்சியடைந்ததனால் இந்நாடுகள் பாரிய வருமான வீழ்ச்சியைக்கண்ட வேளையில் அரசியல் ரீதியான பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியிலும் ருஷியா அதனது

வரைபடம் 5.1 பண்டங்களின்படி ஏற்றுமதிகள் - 2014



அட்டவணை 5.2 ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு

| வகை | 2013 | | 2014 (அ) | | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்காண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | 2,581.1 | 24.8 | 2,793.9 | 25.1 | 212.8 | 8.2 | 28.9 |
| தேயிலை | 1,542.2 | 14.8 | 1,628.3 | 14.6 | 86.1 | 5.6 | 11.7 |
| இறப்பர் | 71.3 | 0.7 | 45.3 | 0.4 | -26.0 | -36.5 | -3.5 |
| தெங்கு | 204.6 | 2.0 | 356.4 | 3.2 | 151.7 | 74.2 | 20.6 |
| வாசனைப் பொருட்கள் | 355.4 | 3.4 | 264.6 | 2.4 | -90.9 | -25.6 | -12.3 |
| மரக்கறிகள் | 24.9 | 0.2 | 40.1 | 0.4 | 15.2 | 60.9 | 2.1 |
| உற்பத்தியாக்கப்படாத புகையிலை | 47.6 | 0.5 | 41.3 | 0.4 | -6.3 | -13.2 | -0.9 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 101.3 | 1.0 | 165.2 | 1.5 | 63.9 | 63.1 | 8.7 |
| கடல் உணவுகள் | 233.7 | 2.2 | 252.7 | 2.3 | 19.0 | 8.1 | 2.6 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | 7,749.4 | 74.6 | 8,262.0 | 74.2 | 512.6 | 6.6 | 69.7 |
| புடவைகளும் ஆடைகளும் | 4,508.3 | 43.4 | 4,929.9 | 44.3 | 421.6 | 9.4 | 57.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 887.8 | 8.5 | 889.8 | 8.0 | 2.0 | 0.2 | 0.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 427.7 | 4.1 | 338.0 | 3.0 | -89.8 | -21.0 | -12.2 |
| இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணங்கள் | 445.5 | 4.3 | 393.6 | 3.5 | -51.9 | -11.7 | -7.1 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 235.2 | 2.3 | 289.3 | 2.6 | 54.0 | 23.0 | 7.3 |
| பொறி மற்றும் இயந்திர துணைக்கருவிகள் | 312.3 | 3.0 | 342.9 | 3.1 | 30.7 | 9.8 | 4.2 |
| அச்சு கைத்தொழில் உற்பத்திகள் | 36.3 | 0.3 | 52.4 | 0.5 | 16.1 | 44.5 | 2.2 |
| போக்குவரத்துக் கருவிகள் | 146.3 | 1.4 | 151.8 | 1.4 | 5.4 | 3.7 | 0.7 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 76.8 | 0.7 | 138.9 | 1.2 | 62.1 | 80.8 | 8.4 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 40.4 | 0.4 | 41.3 | 0.4 | 0.9 | 2.2 | 0.1 |
| ஏனைய கைத்தொழில்கள் உற்பத்திகள் | 632.7 | 6.1 | 694.1 | 6.2 | 61.5 | 9.7 | 8.4 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | 51.6 | 0.5 | 59.5 | 0.5 | 7.9 | 15.3 | 1.1 |
| **பாகுபடுத்தப்படாத ஏற்றுமதிகள்** | 12.2 | 0.1 | 14.7 | 0.1 | 2.5 | 20.7 | 0.3 |
| **மொத்த ஏற்றுமதிகள் (ஆ) (இ)** | 10,394.3 | 100.0 | 11,130.1 | 100.0 | 735.8 | 7.1 | 100.0 |
| **ஆண்டுச் சராசரி நாணயமாற்று வீதம் (ஈ)** | 129.11 | | 130.56 | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டவை
(இ) மீன் ஏற்றுமதிகள் தவிர்ந்த
(ஈ) ரூபா/ஐ.அ.டொலர் நாணயமாற்று வீதம்

மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

ரூபிளில் பாரிய பெறுமதித்தேய்வினைக் கொண்டிருக்கிறது. எனினும், பன்னாட்டுச் சந்தையில் உயர்ந்த கேள்விக்கு கவரப்பட்டிருந்த உயர்தர மரபுவழித் தேயிலை இலங்கை வழங்கல் செய்திருந்தமையால் இலங்கைத் தேயிலைக்கான ஏற்றுமதி விலை கி.கிறாம் ஒன்றிற்கு சராசரியாக ஐ.அ.டொலர் 4.97 ஆக காணப்பட்டது. இது முன்னைய ஆண்டிலிருந்து 3.1 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்ததுடன் 2014இன் கிலோ ஒன்றுக்கான பன்னாட்டு சராசரி தேயிலை விலையான ஐ.அ.டொலர் 2.25 இற்கு மேலானதாக காணப்பட்டது. பாக்கு மற்றும் பழங்கள் என்பவற்றின் ஏற்றுமதிகள் முறையே 300.5 சதவீதம் மற்றும் 51.7 சதவீத கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்தமையினால் சிறிய வேளாண்மை ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 165 மில்லியன் பெறுமதிக்கு 63.1 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. வேளாண்மை ஏற்றுமதிகளின் கீழான கடல் உணவு மற்றும் மரக்கறி வகைகளும் ஆண்டுகாலப்பகுதியில் சிறப்பாக செயலாற்றியிருந்தன. எனினும், முன்னைய ஆண்டுக் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்கச் செயலாற்றத்தை காட்டியிருந்த வாசனைப் பொருட்களின் ஏற்றுமதிகள் 2014இல் மெதுவடைந்திருந்தது. வாசனைப் பொருட்களின் ஏற்றுமதிகள் மீதான வருவாய்கள் 2013இன் 38.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2014இல் ஐ.அ.டொலர் 265 மில்லியன் பெறுமதிக்கு 25.6 சதவீதம் வீழ்ச்சியடைந்திருந்தது. இது மிக முக்கியமாக 2013இல் பதிவு செய்யப்பட்ட சிறந்த அறுவடையுடன் ஒப்பிடுமிடத்து 2014இல் கறுவா, மிளகு, கராம்பு, சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி என்பனவற்றுடன் ஒப்பிடுமிடத்து முக்கிய ஏற்றுமதிப் பயிர்கள் குறைந்த அறுவடையைக் கொண்டிருந்தமையே இதற்கான முக்கிய காரணமாகும். மேலும், விலை மற்றும் தொகை ஆகிய


இரண்டினதும் வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இறப்பர் மீதான ஏற்றுமதி வருவாய்களும் ஐ.அ.டொலர் 45 மில்லியனுக்கு 36.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. உயர்வடைந்த உலகளாவிய வழங்கல் மற்றும் சீனா மற்றும் இந்தியா போன்ற இறப்பர் நுகர்வு செய்கின்ற முக்கிய நாடுகளின் இயற்கை இறப்பருக்கான குறைவடைந்த கேள்வியின் காரணமாக பன்னாட்டுச் சந்தையில் இறப்பர் விலைகள் கடந்த நான்கு ஆண்டுகளாக வீழ்ச்சியடைந்தன. 2014இல் இல்மனைட் மணல் வகைகள், உருக்குத்தாது, உருக்குக்கழிவு மற்றும் சாம்பல், பெறுமதியான உலோகங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய கனிப்பொருள் ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 59.5 மில்லியனுக்கு 15.3 சதவீதத்தினால் அதிகரித்தன.

**இலங்கையின் ஏற்றுமதிகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முன்னணியில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.** மொத்த கடலுணவு ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 40.0 சதவீதத்திற்கு வகைகூறிய முக்கிய கடலுணவுச் சந்தையான ஐரோப்பிய ஒன்றியம் 2015இனை சனவரி நடுப்பகுதியிலிருந்து கடலுணவுகளின் ஏற்றுமதியினைக் கட்டுப்படுத்தியமை ஏற்றுமதியாளர்களுக்கு மிகப் பெரிய சவாலாக காணப்படுகிறது. எனினும், அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட பொருத்தமான செயற்பாடுகள் மூலம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்தப் பிரச்சனை தீர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, ருஷியா இலங்கைத் தேயிலையின் பிரதான தனிக் கொள்வனவாளராகக் காணப்படுவதால் ருஷியா ரூபிள் 2015இல் மேலும் தொடர்ந்து தேய்வடைந்தால், இது இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகளின் மீது நேர்மாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற வேளையில் மத்திய கிழக்குப் பொருளாதாரங்களின் எண்ணெய் வருமானம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைவதன் காரணத்தால் அத்தகைய பொருளாதாரங்களில் தேயிலைக்கான கேள்வி வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், குறிப்பாக ஐரோப்பிய சந்தைகளில் ஆடைகள் மற்றும் துணிகளுக்கான சலுகைகளை வழங்குகின்ற பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைகளுக்கான திட்ட வசதிகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இத்தகைய சலுகை சந்தை அணுகுமுறை வாய்ப்புக்களுக்கு மேலதிகமாக பெறுமதி சங்கிலி ஏணியின் நகர்வு பற்றி கூடியளவிற்குக்குப் பரிசீலனையில் கொள்கையில் துணைப் பொருட்களை வழங்கும் பின்புல ஒருங்கிணைப்பு, உற்பத்தித்திறன் மேம்படுத்தல் மற்றும் தொழில்நுட்ப புத்துருவாக்கம் போன்றன தீவிரமான போட்டிதன்மையை எதிர்கொள்ள அவசியமானதாகும்.

### 5.3.2. இறக்குமதிச் செயலாற்றம்

**இறக்குமதிகளின் மீதான செலவு 2012 மற்றும் 2013 ஆகிய இரண்டு காலப்பகுதியில் காணப்பட்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் மிதமாக அதிகரித்திருந்தது.** இறக்குமதி

வரைபடம் 5.2 பண்டங்களின்படி இறக்குமதிகள் - 2014




வளர்ச்சியின் அதிகரிப்பானது 2014இன் பின்னரைப் பகுதியில் உயர்ந்தளவில் காணப்பட்டது. இது தீர்வைக் குறைப்பு மற்றும் யப்பானிய யென் நாணயத்தின் பாரிய பெறுமானத் தேய்வு என்பவற்றின் காரணமாக தனிப்பட்ட பாவனைக்கான உந்து ஊர்திகளின் உயர்ந்தளவான இறக்குமதிக்கு காரணமாயிருந்தது. இதன்படி, இறக்குமதி மீதான செலவினம் 2013இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 18,003 மில்லியன் பெறுமதியுடன் ஒப்பிடுமிடத்து 2014இல் ஐ.அ.டொலர் 19,417 மில்லியனுக்கு 7.9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதேவேளை, 2014இல் எரிபொருள் அல்லது இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 14,819 மில்லியன் பெறுமதிக்கு 8.2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2014 ஆண்டுக் காலப்பகுதியில் மொத்த இறக்குமதிகளில் நுகர்வுப் பொருட்களின் சார்பு ரீதியான பங்கு 2013இல் அவதானிக்கப்பட்ட அதே போக்கினைப் பின்பற்றி அதிகரித்திருந்த வேளையில் முதலீட்டுப் பொருட்களின் பங்கு வீழ்ச்சியடைந்திருந்தது. அதேவேளை, நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி பங்கின் அதிகரிப்பு உயர்ந்த வருமான மட்டங்களின் மூலம் மக்களின் வாழ்க்கை நியமங்களின் முன்னேற்றத்தினை பிரதிபலித்தன. எனவே, மூதலீட்டுப் பொருட்களில் ஏற்பட்ட சரிவானது எதிர்கால வாய்ப்புக்களை குறைத்துவிடுமென்பதனால் இதனை எச்சரிக்கைக்குரியதொன்றாகக் கருதவேண்டியுள்ளது.

**பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் புடவைகள் மற்றும் புடவைப் பொருட்களின் இறக்குமதிகள் போன்ற முக்கியமான இடைநிலைப் பொருட்கள் இறக்குமதி செலவினம் அதிகரிப்பதற்கு முக்கிய பங்களிப்பாக விளங்கியன.** மொத்த இறக்குமதிகளின் 60 சதவீதத்திற்கு வகைகூறிய இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் முன்னைய ஆண்டினைவிட 2014இல் 8.0 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்து ஐ.அ.டொலர் 11,398 மில்லியன் பெறுமதியாக விளங்கியது. ஆண்டின் பிற்பகுதியில் பன்னாட்டு சந்தையில் எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு

அட்டவணை 5.3

## இறக்குமதிகளின் உள்ளமைப்பு

| வகை | 2013 பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2013 பங்கு % | 2014 (அ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2014 (அ) பங்கு % | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்காண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **3,182.5** | **17.7** | **3,852.5** | **19.8** | **670.0** | **21.1** | **47.4** |
| உணவும் குடிபானங்கள் | 1,368.1 | 7.6 | 1,633.7 | 8.4 | 265.7 | 19.4 | 18.8 |
| அரிசி | 17.9 | 0.1 | 281.7 | 1.5 | 263.8 | 1473.9 | 18.7 |
| சீனி மற்றும் சீனி இனிப்பு வகை | 290.6 | 1.6 | 257.1 | 1.3 | -33.5 | -11.5 | -2.4 |
| பால் உற்பத்திகள் | 291.0 | 1.6 | 339.4 | 1.7 | 48.4 | 16.6 | 3.4 |
| பருப்பு வகை | 104.1 | 0.6 | 121.2 | 0.6 | 17.1 | 16.4 | 1.2 |
| ஏனையவை | 664.4 | 3.7 | 634.4 | 3.3 | -30.0 | -4.5 | -2.1 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 1,814.4 | 10.1 | 2,218.8 | 11.4 | 404.4 | 22.3 | 28.6 |
| வாகனங்கள் | 582.2 | 3.2 | 896.7 | 4.6 | 314.5 | 54.0 | 22.2 |
| மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 378.3 | 2.1 | 380.5 | 2.0 | 2.3 | 0.6 | 0.2 |
| வீட்டுப் பாவனைப் பொருட்கள் | 192.2 | 1.1 | 156.4 | 0.8 | -35.8 | -18.6 | -2.5 |
| புடவைகள் மற்றும் துணைப் பொருட்கள் | 201.7 | 1.1 | 282.7 | 1.5 | 81.0 | 40.2 | 5.7 |
| ஏனையவை | 460.0 | 2.6 | 502.5 | 2.6 | 42.5 | 9.2 | 3.0 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **10,553.7** | **58.6** | **11,397.7** | **58.7** | **843.9** | **8.0** | **59.7** |
| எரிபொருள் | 4,308.2 | 23.9 | 4,597.3 | 23.7 | 289.2 | 6.7 | 20.4 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 2,045.8 | 11.4 | 2,327.6 | 12.0 | 281.7 | 13.8 | 19.9 |
| வைரங்கள் மற்றும் அருமையான உலோகங்கள் | 482.9 | 2.7 | 175.4 | 0.9 | -307.4 | -63.7 | -21.7 |
| இரசாயன உற்பத்திகள் | 734.3 | 4.1 | 808.2 | 4.2 | 73.9 | 10.1 | 5.2 |
| கோதுமை மற்றும் சோளம் | 323.2 | 1.8 | 404.7 | 2.1 | 81.5 | 25.2 | 5.8 |
| வளமாக்கி | 238.7 | 1.3 | 272.4 | 1.4 | 33.8 | 14.1 | 2.4 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 2,420.8 | 13.4 | 2,812.0 | 14.5 | 391.2 | 16.2 | 27.7 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,252.7** | **23.6** | **4,152.2** | **21.4** | **-100.5** | **-2.4** | **-7.1** |
| கட்டடப் பொருட்கள் | 1,357.2 | 7.5 | 1,308.9 | 6.7 | -48.3 | -3.6 | -3.4 |
| போக்குவரத்துக் கருவிகள் | 667.8 | 3.7 | 707.3 | 3.6 | 39.5 | 5.9 | 2.8 |
| பொறியும் கருவியும் | 2,221.9 | 12.3 | 2,131.0 | 11.0 | -90.9 | -4.1 | -6.4 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 5.8 | ... | 4.9 | ... | -0.9 | -15.0 | -0.1 |
| **பாகுபடுத்தப்படாத இறக்குமதிகள்** | **13.9** | **0.1** | **14.4** | **0.1** | **0.6** | **4.1** | **...** |
| **மொத்த இறக்குமதிகள் (இ) (ஈ)** | **18,002.8** | **100.0** | **19,416.8** | **100.0** | **1,414.0** | **7.9** | **100.0** |
| **ஆண்டுச்சராசரி நாணயமாற்று வீதம் (உ)** | **129.11** | | **130.56** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டது
(இ) மீள் இறக்குமதிகள் நீங்கலாக
(ஈ) ரூபா/ ஐ.அ.டொ. நாணயமாற்று வீதம்

மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் (தனியார்) மா ஆலை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

மத்தியிலும், எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் கடந்த காலத்தின் ஐ.அ.டொலர் 4,597 மில்லியன் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 6.7 சதவீதத்தால் அதிகரித்ததன் முக்கிய விளைவாக வெப்பவலு உருவாக்கம் அதிகரித்து உயர்ந்த இறக்குமதி அளவுகளைப் பிரதிபலித்தன. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை 2013இன் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 109.84 இலிருந்து 2014இல் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 104.53 இற்கு வீழ்ச்சியடைந்தது. இருப்பினும் ஆண்டின் பிற்பகுதியில் மசகெண்ணெயின் இறக்குமதி விலை ஆண்டின் சராசரி விலைமட்டத்திலும் குறைவாகவே காணப்பட்டது. அதேவேளை இவ்வாண்டுப் பகுதியில் புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இணங்கிச் செல்லும் விதத்தில் ஆண்டுக் காலத்தில் புடைவை மற்றும், துணி மற்றும் நூலிழை போன்ற புடவை மற்றும் ஆபரண பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2014இன் ஐ.அ.டொலர் 2,328 மில்லியனுக்கு 13.8 சதவீதத்தால் அதிகரித்து 2014 ஆண்டு காலப்பகுதியில் தாள் மற்றும் தாள் அட்டைகள், பிளாத்திக்கு மற்றும் அதுசார்ந்த பொருட்கள், கோதுமை மற்றும் சோளம், இரசாயன உற்பத்திகள் மற்றும் வளமாக்கிகள் என்பனவற்றின் மீதான இறக்குமதிச் செலவினமும் அதிகரித்துள்ளது. அதேவேளை ஆபரணக் கைத்தொழிலுக்கான உள்ளீடுகளாக பயன்படுத்தப்படும் பெறுமதிமிக்க கற்கள் மற்றும் உலோகங்கள் வைரங்கள் மீதான இறக்குமதிகள் 2013இன் 17.8 சதவீத வீழ்ச்சியைத் தொடர்ந்து 2014இல் 63.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளன. இது முக்கியமாக இலங்கையின் முக்கியமான வைரங்கள் மற்றும் ஆபரண ஏற்றுமதி நிறுவனங்களின் தொழிற்படாத நிலையினால் ஏற்பட்டது. மேலும் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு வங்கித்துறையால் வழங்கப்பட்ட தங்க விற்பனைகளில் ஏற்பட்டதொரு அதிகரிப்பினால் தங்க இறக்குமதிகளுக்கான கேள்வி குறைவடைந்தது. கட்டுமான நடவடிக்கைகளுக்கான பாதகமான காலநிலை நிலைமைகளினால் குறிப்பாக 2014இன் நான்காம் காலாண்டில் சிமேந்துக்கான கேள்வியின்

குறைவினைப் பிரதிபலிக்கும் வகையில் 2014இல் சிமெந்து கூளைக்கற்கள் மீதான இறக்குமதிச் செலவினமும் 6.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

**2014இல் இறக்குமதி செய்யப்பட்ட உயர் அளவுகளின் பெருமளவு காரணமாக உணவு மற்றும் உணவல்லா நுகர்வோர் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தது.** நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிகள் மீதான ஒட்டுமொத்த செலவினம் மொத்த இறக்குமதிகளில் 19.8 சதவீதத்திற்கு வகைகூறி ஐ.அ.டொலர் 3,853 மில்லியன் பெறுமதிக்கு ஆண்டுக்காண்டு 21.1 சதவீதத்தால் அதிகரித்தது. உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 1,634 மில்லியனுக்கு 19.4 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் உணவல்லாத நுகர்வோர் பொருட்கள் ஐ.அ.டொலர் 2,219 மில்லியனுக்கு 22.3 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்குத் தனியார் பாவனைக்கான உந்து ஊர்திகளின் உயர்ந்த இறக்குமதிச் செலவினம் முக்கிய பங்காற்றியது. 2014இல் உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருளிகள் போன்ற தனியார் பாவனைக்கான உந்து ஊர்திகள் மீதான செலவினம் முக்கியமாக இறக்குமதித் தீர்வையில் ஏற்பட்ட குறைவு மற்றும் யப்பானிய யென்னின் கணிசமான தேய்வு என்பவற்றினால் 54 சதவீதத்தால் அதிகரித்தது. புடவை மற்றும் துணை உற்பத்திகள் செல்லிட தொலைபேசிகள் போன்ற தொலைத்தொடர்புச் சாதனங்கள் மீதான இறக்குமதி செலவினமும் அதிகரித்தது. 2014இல் பாதகமான காலநிலை நிலைமைகளினால் உள்நாட்டு அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்டதனால் முக்கியமாக 2013இன் 23,000 மெற்றிக் தொன்னுடன் (ஐ.அ.டொலர் 18 மில்லியன்) ஒப்பிடுகையில் 2014இல் 600,000 மெற்றிக் தொன்னுக்கு (ஐ.அ.டொலர் 282 மில்லியன்) அரிசி இறக்குமதியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பினால் உணவு இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தது. மேலும் அதிகரித்த உள்நாட்டு அரிசி விலைகளில் இருந்து உள்நாட்டு நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்கில் அரிசி உற்பத்தி மீது பிரயோகிக்கப்படும் இறக்குமதி தீர்வையின் குறைப்பு என்பன அரிசி இறக்குமதிகளின் அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்தது. அதிகரித்த இறக்குமதி விலைகளினால் பால்மா இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தவேளையில் உள்நாட்டு உற்பத்தி குறைவடைந்ததோர் பின்னணி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உணவு வகைகளுக்கான அதிகரித்த கேள்வி மற்றும் இறக்குமதி தீர்வையில் ஏற்பட்ட குறைப்பு என்பவற்றின் காரணமாக மைசூர் பருப்பு மற்றும் சமையலுக்கான பருப்புக்களின் இறக்குமதி அதிகரித்தது. எனினும் ஆய்வுக்கான ஆண்டு காலத்தில் சீனி மற்றும் இனிப்பு உற்பத்திகள், எண்ணெய் மற்றும் கொழுப்பு மற்றும் கடல் உணவு உற்பத்தி என்பவற்றின் இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை 5.4 முக்கிய இறக்குமதிகளின் அளவு**

மெ.தொ. '000

| விடயம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014(அ) |
|---|---|---|---|---|---|
| **அரிசி** | **126** | **28** | **36** | **23** | **600** |
| 1ஆம் காலாண்டு | 121 | 8 | 15 | 9 | 6 |
| 2ஆம் காலாண்டு | 2 | 2 | 7 | 6 | 102 |
| 3ஆம் காலாண்டு | 2 | 9 | 10 | 4 | 145 |
| 4ஆம் காலாண்டு | 1 | 9 | 4 | 4 | 348 |
| **கோதுமை (ஆ)** | **1,051** | **1,242** | **1,084** | **895** | **1,179** |
| 1ஆம் காலாண்டு | 352 | 322 | 353 | 197 | 271 |
| 2ஆம் காலாண்டு | 171 | 455 | 235 | 326 | 324 |
| 3ஆம் காலாண்டு | 292 | 254 | 291 | 170 | 291 |
| 4ஆம் காலாண்டு | 236 | 211 | 205 | 201 | 292 |
| **சீனி** | **548** | **606** | **569** | **548** | **520** |
| 1ஆம் காலாண்டு | 145 | 163 | 158 | 126 | 131 |
| 2ஆம் காலாண்டு | 145 | 170 | 135 | 175 | 162 |
| 3ஆம் காலாண்டு | 154 | 124 | 114 | 118 | 152 |
| 4ஆம் காலாண்டு | 104 | 149 | 162 | 129 | 75 |
| **மசகு எண்ணெய் (ஆ)** | **1,819** | **2,070** | **1,486** | **1,743** | **1,824** |
| 1ஆம் காலாண்டு | 332 | 557 | 558 | 482 | 548 |
| 2ஆம் காலாண்டு | 541 | 555 | 413 | 545 | 365 |
| 3ஆம் காலாண்டு | 541 | 410 | 137 | 315 | 462 |
| 4ஆம் காலாண்டு | 405 | 547 | 379 | 401 | 449 |
| **சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம்(ஆ)** | **2,882** | **3,501** | **3,961** | **2,907** | **3,385** |
| 1ஆம் காலாண்டு | 789 | 702 | 1,036 | 673 | 970 |
| 2ஆம் காலாண்டு | 881 | 807 | 903 | 756 | 762 |
| 3ஆம் காலாண்டு | 507 | 1,022 | 997 | 791 | 1,006 |
| 4ஆம் காலாண்டு | 705 | 970 | 1,025 | 687 | 647 |
| **வளமாக்கி** | **649** | **801** | **640** | **600** | **765** |
| 1ஆம் காலாண்டு | 88 | 131 | 129 | 61 | 202 |
| 2ஆம் காலாண்டு | 238 | 207 | 176 | 139 | 190 |
| 3ஆம் காலாண்டு | 165 | 266 | 226 | 187 | 95 |
| 4ஆம் காலாண்டு | 158 | 197 | 108 | 214 | 277 |

(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டது

மூலங்கள்:
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் (தனியார்) மா ஆலை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

**2014இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் பொறி மற்றும் கருவிகள் மற்றும் கட்டடப் பொருட்களின் குறைவான இறக்குமதியின் முக்கிய காரணத்தால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் 2014இல் ஐ.அ.டொலர் 4,152 மில்லியன் பெறுமதிக்கு 2.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பொறியியற் கருவிகள், இலத்திரனியல் கருவிகள், தொலைத்தொடர்புச் சாதனங்கள், அலுவலகப் பொறிகள், புடவைக் கைத்தொழிலுக்கான பொறிகள் மற்றும் பொறிகள், கருவிகள் என்பனவற்றை உள்ளடக்கிய பொறிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதி செலவினம் 2014இல் ஐ.அ.டொலர் 2,131 மில்லியனுக்கு 4.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை கட்டுமான நடவடிக்கைகளுக்கான பாதகமான காலநிலையின் தாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் சிமெந்து, இரும்பு, உருக்கு மற்றும் கனிப்பொருள் உற்பத்திகளை

உள்ளடக்கிய கட்டடப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,309 மில்லியன் பெறுமதிக்கு 3.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும் பேருந்து மற்றும் முச்சில்லு வண்டி என்பவற்றின் அதிகரித்த இறக்குமதியின் முக்கியமான காரணத்தால் போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 707 மில்லியன் பெறுமதிக்கு 5.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

### 5.3.3 வர்த்தக நிலுவை

**2014இன் முதலரைப் பகுதியில் சுருக்கமடைந்த வர்த்தகப் பற்றாக்குறை பின்னரைப் பகுதியில் மாற்றமடைந்து வர்த்தகப் பற்றாக்குறையில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் விரிவாக்கத்தைத் தோற்றுவித்தது.** 2014இன் முதலரைப் பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 17.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த வேளையில், இறக்குமதிகள் மீதான செலவினம் 1.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 2013இன் இதே காலப்பகுதியை விட வர்த்தகப் பற்றாக்குறையில் 20.3 சதவீத சுருக்கத்தை ஏற்படுத்தியது. எனினும், 2014இன் பின்னரைப் பகுதியில் இறக்குமதிகள் வேகமாக வளர்ச்சியடைந்தமை மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி குறைவடைந்தமையின் காரணத்தால், ஒட்டுமொத்த வர்த்தகப் பற்றாக்குறை தொடர்ச்சியான இரண்டு ஆண்டு வீழ்ச்சி சாதனையினைத் தொடர்ந்து ஆண்டுக்காண்டு அடிப்படையில் 8.9 சதவீதத்தால் விரிவடைந்தது. இருப்பினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, வர்த்தகப் பற்றாக்குறையானது 2013இன் 11.3 சதவீதத்திலிருந்து 2014இன் 11.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2012 மற்றும் 2013 காலப்பகுதியில் வர்த்தக நிலுவையில் அவதானிக்கப்பட்ட சாதகமான அபிவிருத்திகள், 2012 ஆரம்பத்தில் மத்திய வங்கி மற்றும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட முன்மதியுடைய கொள்கை நடவடிக்கைகளால் பெரிதும் ஆதரவளிக்கப்பட்டன. இருப்பினும், எண்ணெய் மற்றும் எண்ணெய் அல்லாத உலகளாவிய பொருட்களின் விலைகளின் வீழ்ச்சிப் போக்கு மற்றும் பல முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் மற்றும் தோற்றம்பெற்றுவரும் பொருளாதாரங்களின் நடுத்தர கால வளர்ச்சி எதிர்பார்ப்புக்களின் கீழ் நோக்கிய மீளாய்வு போன்றவற்றின் மூலம் வெளிநாட்டுத் துறை மீதான பாதகமான விளைவுகளை நிவர்த்தி செய்வதற்கான அண்மைய காலங்களிலான பொருத்தமான கொள்கை வழிமுறைகள் தேவைப்படுகின்றன.

### 5.3.4 வர்த்தக மாற்று விகிதம்


**ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பு மற்றும் இறக்குமதி விலைகளின் காணப்பட்ட குறைப்பு என்பன 2014இல் வர்த்தக மாற்று விகிதத்தில் முன்னேற்றத்தினைத் தோற்றுவித்தது.** ஏற்றுமதி விலைச்சுட்டெண் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 105.5 சுட்டெண் புள்ளிகளுக்கு 2.7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இறக்குமதி விலைச்சுட்டெண் 108.1 சுட்டெண் புள்ளிகளுக்கு 1.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதற்கமைய, வர்த்தமாற்று விகிதச்சுட்டெண் 2013இன் 93.6 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2014இல் 97.6 சுட்டெண் புள்ளிகளுக்கு 4.3 சதவீதத்தினால் முன்னேற்றமடைந்தது.

**ஏற்றுமதி விலைச்சுட்டெண்ணின் அதிகரிப்பானது 2014இல் வேளாண்மை மற்றும் கைத்தொழில் ஏற்றுமதிகளின் ஒப்பீட்டளவிலான உயர் விலைகளை தோற்றுவித்தது.** வேளாண்மை ஏற்றுமதி வகையினுள், பன்னாட்டு சந்தையில் தெங்கு உற்பத்திகளின் பெறப்பட்ட உயர்வான ஏற்றுமதி விலைகளின் முக்கிய காரணத்தினால் தேங்காய் உற்பத்திகளின் சராசரி ஏற்றுமதி விலைச் சுட்டெண் 15.0 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2014இன் முதலரைப் பகுதியில் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலைச்சுட்டெண் அதிகரித்தபோதிலும் இலங்கையின் முக்கிய தேயிலை ஏற்றுமதி சேரிடங்களான ருசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் குறைவான கேள்வியினால் பின்னரைப் பகுதியில் வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 5.3 ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை




வரைபடம் 5.4 வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தக சுட்டெண்கள்



அட்டவணை 5.5

**வர்த்தகச் சுட்டெண்கள் (அ)**

2010 = 100

| வகை | பெறுமதிச் சுட்டெண் | | | அளவுச் சுட்டெண் | | | அலகு விலைச் சுட்டெண் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | 2013 | 2014(ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | 2013 | 2014 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) |
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **112.0** | **121.2** | **8.2** | **97.4** | **103.2** | **5.9** | **115.0** | **117.5** | **2.2** |
| தேயிலை | 107.1 | 113.1 | 5.6 | 95.0 | 98.5 | 3.7 | 112.8 | 114.9 | 1.9 |
| இறப்பர் | 41.2 | 26.2 | -36.5 | 45.5 | 32.3 | -29.0 | 90.5 | 81.0 | -10.5 |
| தெங்கு | 123.5 | 215.1 | 74.2 | 112.7 | 170.7 | 51.5 | 109.6 | 126.0 | 15.0 |
| வாசனைப் பொருட்கள் | 171.5 | 127.7 | -25.6 | 115.2 | 85.8 | -25.5 | 148.9 | 148.8 | -0.1 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 141.8 | 231.4 | 63.1 | 162.6 | 232.2 | 42.8 | 87.2 | 99.7 | 14.3 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **127.2** | **135.6** | **6.6** | **128.7 (உ)** | **133.2** | **3.6** | **98.9 (உ)** | **101.8** | **3.0** |
| புடவைகளும் ஆடைகளும் | 134.4 | 147.0 | 9.4 | 121.1 | 128.2 | 5.8 | 111.0 | 114.7 | 3.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 162.5 | 128.4 | -21.0 | 116.9 | 92.6 | -20.8 | 139.0 | 138.7 | -0.2 |
| இறப்பர் உற்பத்திகள் | 159.5 | 159.8 | 0.2 | 109.0 | 108.1 | -0.8 | 146.3 | 147.9 | 1.0 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **212.8** | **245.4** | **15.3** | **81.0** | **158.6** | **95.7** | **262.6** | **154.7** | **-41.1** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **120.6** | **129.1** | **7.1** | **117.3 (உ)** | **122.3** | **4.3** | **102.8 (உ)** | **105.5** | **2.7** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **128.6** | **155.7** | **21.1** | **119.2** | **143.3** | **20.2** | **107.9** | **108.6** | **0.7** |
| உணவும் குடிப்பானங்களும் | 103.4 | 123.5 | 19.4 | 105.4 | 125.8 | 19.4 | 98.1 | 98.2 | 0.1 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 157.6 | 192.7 | 22.3 | 135.1 | 163.5 | 21.0 | 116.7 | 117.9 | 1.0 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **131.1 (உ)** | **141.6** | **8.0** | **111.1 (உ)** | **122.9** | **10.6** | **118.0 (உ)** | **115.2** | **-2.4** |
| எரிபொருள் | 141.7 (உ) | 151.2 | 6.7 | 103.4 (உ) | 117.7 | 13.9 | 137.1 (உ) | 128.4 | -6.3 |
| வளமாக்கி | 99.4 | 113.4 | 14.1 | 88.4 | 112.6 | 27.3 | 112.3 | 100.8 | -10.3 |
| இரசாயன உற்பத்திகள் | 141.2 | 155.4 | 10.1 | 128.1 | 138.3 | 8.0 | 110.3 | 112.4 | 1.9 |
| கோதுமை மற்றும் சோளம் | 121.8 | 152.5 | 25.2 | 84.8 | 123.5 | 45.6 | 143.6 | 123.5 | -14.0 |
| புடைவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 113.1 | 128.7 | 13.8 | 104.7 | 115.8 | 10.5 | 108.0 | 111.1 | 2.9 |
| பிளாத்திக்குகள் மற்றும் அவ்வகையான | 121.8 | 143.7 | 18.0 | 116.9 | 131.1 | 12.1 | 104.2 | 109.6 | 5.3 |
| வைரங்கள் மற்றும் மதிப்புமிக்க உலோகங்கள் | 127.9 | 46.5 | -63.7 | 131.7 | 57.7 | -56.2 | 97.1 | 80.5 | -17.1 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **154.4** | **150.7** | **-2.4** | **157.6** | **158.2** | **0.3** | **97.9** | **95.3** | **-2.7** |
| கட்டடப் பொருட்கள் | 165.2 | 159.3 | -3.6 | 153.9 | 153.0 | -0.6 | 107.3 | 104.1 | -3.0 |
| போக்குவரத்துக் கருவிகள் | 112.7 | 119.4 | 5.9 | 103.5 | 114.4 | 10.6 | 108.9 | 104.3 | -4.2 |
| பொறியும் கருவியும் | 166.1 | 159.3 | -4.1 | 183.9 | 180.7 | -1.7 | 90.3 | 88.2 | -2.4 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 174.0 | 147.9 | -15.0 | 161.8 | 162.2 | 0.3 | 107.5 | 91.2 | -15.2 |
| **மொத்த இறக்குமதிகள்** | **134.3** | **144.8** | **7.9** | **122.3 (உ)** | **134.0** | **9.5** | **109.8 (உ)** | **108.1** | **-1.5** |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | | | | | | **93.6 (உ)** | **97.6** | **4.3** |

(அ) ஐ.அ.டொலர் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

ஆண்டுக்காண்டு அடிப்படையில் கொல்கத்தா மற்றும் மும்பாசா ஏலங்களில் தேயிலைக்கான விலை வீழ்ச்சியடைந்தமைக்கு மத்தியிலும் தேயிலைக்கான சராசரி ஏற்றுமதி விலைகள் 2014இல் 1.9 சதவீதத்தினால் சிறிதளவால் அதிகரித்திருந்தது. சிறிய வேளாண்மை உற்பத்திகளின் சராசரி ஏற்றுமதி விலைகள் அதிகரித்து பழங்கள், காய்கள் மற்றும் முக்கிய எண்ணெய்களின் சாதகமான விலைகளை தோற்றுவித்தது. இருப்பினும், இறப்பரின் ஏற்றுமதி விலைச் சுட்டெண் 2014இல் 10.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து உலகளாவிய சந்தை நிலைமைகளைப் பிரதிபலித்தது. புடவைகள் மற்றும் ஆடைகளின் விலைகள் 3.3 சதவீதத்தினாலும் தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணிகளின் விலைகள் 9.7 சதவீதத்தினாலும் அதிகரித்தமை 2014இல் கைத்தொழில் ஏற்றுமதி விலைகள் 3.0 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக விளங்கியது. நவீன தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் என்பவற்றின் பின்பற்றுதலுடனான ஆடைக் கைத்தொழிலின் இறுதிப் பொருட்களின் தர நியமத்தின் முன்னேற்றமானது இலங்கை பொருட்களுக்கு உயர்வடைந்த சந்தைகளுக்கு நுழைவினை வழங்கியதுடன் புடவை மற்றும் ஆடைகளின் அலகு விலைகளின் அதிகரிப்பையும் பிரதிபலித்தது. அதேவேளை, 2014இல் பெற்றோலிய உற்பத்திகள், அடிப்படை உலோகம் மற்றும் பொருட்கள் மற்றும் போக்குவரத்து கருவிகளின் ஏற்றுமதி விலைச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்தன.

2014இல் இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் சராசரி இறக்குமதி விலைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த மட்டத்தில் மாறாது காணப்பட்ட வேளையில் நுகர்வுப் பொருட்களின் விலைகள் சிறிதளவால் அதிகரித்தன. இடைநிலைப் பொருட்களுடன் தொடர்புபட்ட இறக்குமதி விலைச் சுட்டெண்ணின் 2.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு எரிபொருட்களின் விலைகளின் வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். 2014இன்


முதலரைப்பகுதியில் எரிபொருட்களின் இறக்குமதி விலைச் சுட்டெண் அதிகரித்த போதிலும் நலிவடைந்த உலகப் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் குறிப்பாக பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு பெருமளவு அதிகரித்த வழங்கல் என்பவற்றிற்கு மத்தியிலும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது. 2014இல் இந்நிகழ்வுகள் இறக்குமதி விலைச்சுட்டெண் 6.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது. ஆண்டுக்காண்டு அடிப்படையில் 10.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வளமாக்கிகளின் இறக்குமதி விலைச் சுட்டெண் இறக்குமதி விலைகளின் மொத்த வீழ்ச்சிக்கு கணிசமானளவில் பங்களித்திருந்தது. அதேவேளை, கோதுமை மற்றும் சோளம், வைரங்கள், மதிப்புமிக்க கற்கள் மற்றும் உலோகங்கள் மற்றும் இறப்பர் மற்றும் ஆபரணங்கள் என்பனவற்றின் சராசரி இறக்குமதி விலைகளும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருந்தன. 2014இல் முதலீட்டு பொருட்களின் இறக்குமதி விலைச்சுட்டெண் 2.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து சகல துணை வகைகளின் விலைகளின் வீழ்ச்சியை தோற்றுவித்தது. பன்னாட்டு சந்தையில் மூலப் பொருட்கள் மற்றும் அடிப்படை உலோகம் என்பவற்றின் விலைகளின் வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் கட்டடப் பொருட்களின் இறக்குமதி விலைச் சுட்டெண் 3.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மேலும் ஐ. அ. டொலருக்கு எதிராக யப்பான் யெண்ணின் குறிப்பிடத்தக்க தேய்வு போக்குவரத்து கருவிகளின் விலைச் சுட்டெண்ணின் வீழ்ச்சிக்கு பங்களித்திருந்தது. உணவு மற்றும் உணவல்லா வகைகளின் இறக்குமதி விலைகள் முறையே 0.1 சதவீத மற்றும் 1.0 சதவீதத்தால் அதிகதித்ததுடன் நுகர்வுப் பொருள் விலைச் சுட்டெண்ணின் 0.7 சதவீத அதிகரிப்புக்கு வழிவகுத்தது. பன்னாட்டு சந்தையில் சிறிதளவான விலை வீழ்ச்சிக்கு மத்தியிலும் பாற்பன்னை உற்பத்திகளின் இறக்குமதி விலைச் சுட்டெண் 2014இல் பெருமளவில் அதிகரித்திருந்தது. இருப்பினும், முக்கிய சீனி உற்பத்தி செய்யும் நாடுகளின் அதிகரித்த நிரம்பலினால் சீனி மற்றும் இனிப்பு வகைகளின் இறக்குமதி விலைகள் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, உணவு அல்லா நுகர்வோர் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட புடவை மற்றும் அதற்கான துணைப் பொருட்கள் மருத்துவ மருந்தாக்கல் பொருட்கள் மற்றும் தனிப்பட்ட பாவனைக்கான ஊர்திகள் என்பவற்றின் இறக்குமதி விலைகள் அதிகரித்தன.

### 5.3.5 வர்த்தகத்தின் போக்கு


**2014இல் இலங்கையின் முக்கிய வர்த்தக பங்காளர்களாக இந்தியாவை தொடர்ந்து சீனா, ஐக்கிய அமெரிக்கா என்பன காணப்பட்டன.** குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட நாடுகள் பாரிய ஏற்றுமதி சேருமிடங்களாக மாறாது காணப்பட்ட வேளையில் குறிப்பாக இந்தியா மற்றும் சீனா போன்ற ஆசிய நாடுகள் முக்கிய இறக்குமதி மையங்களாக தொடர்ந்திருந்தன. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான வர்த்தகத்தின் பெறுமதி 2014இல் ஐ.அ.டொலர் 4.6 பில்லியனாகக் விளங்கியதுடன் இது ஆண்டுக்கான இலங்கையின் மொத்த வெளிநாட்டு வர்த்தகத்தில் 15 சதவீதத்தைக் கொண்டிருந்த வேளையில் இலங்கையின் மொத்த வர்த்தகத்தில் இலங்கை - சீனாவுக்கிடையிலான வர்த்தகம் 12 சதவீதமாகக் காணப்பட்டது.

**1979 தொடக்கம் நீண்ட காலமாக ஐக்கிய அமெரிக்கா இலங்கையின் ஏற்றுமதியின் தனியொரு பாரிய கொள்வனவாளராக தொடர்ந்தும் விளங்கியது.** ஐக்கிய அமெரிக்காவிற்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதியின் பங்கு 2013இல் பதிவு செய்யப்பட்ட 24.0 சதவீதத்திலிருந்து 2014இல் 24.5 சதவீதமாக அதிகரித்துடன் முன்னைய ஆண்டினை விட ஏற்றுமதி வருவாய்கள் 9.5 சதவீத வளர்ச்சியை பதிவு செய்தது. 2014இல் ஐக்கிய அமெரிக்காவிற்கான மொத்த ஏற்றுமதியில் ஆடைகள் மற்றும் இறப்பர் ஏற்றுமதிகள் முறையே 72.9 சதவீதத்திற்கும் 10.4 சதவீதத்திற்கும் வகைகூறின. இரண்டாவது பாரிய ஏற்றுமதி சேரிடமான ஐக்கிய இராச்சியம் 2014இன் மொத்த ஏற்றுமதியில் 10.0 சதவீதத்திற்கு வகைகூறியது. ஐக்கிய இராச்சியத்திற்கான மொத்த ஏற்றுமதியில் ஆடைகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் முறையே 80.9 சதவீதம் மற்றும் 3.6 சதவீதத்திற்கு வகைகூறின. இலங்கை மொத்த ஆடை ஏற்றுமதியான ஐ.அ.டொலர் 4,682 மில்லியனில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்றவற்றிற்கான ஏற்றுமதிகள் முறையே 42.5 சதவீதம் 19.3 சதவீதத்திற்கு வகைகூறியது. இலங்கையின் ஏற்றுமதியின் மூன்றாவது பாரிய கொள்வனவாளரான இந்தியா 5.6 சதவீத பங்கினை பதிவு செய்ததுடன் அதனைத் தொடர்ந்து இத்தாலி, ஜேர்மனி மற்றும் பெல்ஜியம் என்பன காணப்பட்டன. ஏனைய வேளாண்மை உற்பத்திகள், வாசனைப் பொருட்கள், போக்குவரத்து கருவிகள், பொறிகள் மற்றும் எந்திர துணைக்கருவிகள் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் என்பன இந்தியாவிற்கான முக்கிய ஏற்றுமதிகளாகும். 2014இல் இத்தாலிக்கான ஏற்றுமதிகளாக விளங்கின. 20.3 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த ஏற்றுமதியில் 5.5 சதவீதத்தை பிரதிபலித்தமைக்கு ஆடைகள் ஏற்றுமதியின் அதிகரிப்பே முக்கிய காரணமாகும். மொத்த ஏற்றுமதியில் 4.5 சதவீதத்தை பிரதிபலித்த ஜேர்மனிக்கான ஏற்றுமதி 2014இல் 6.3 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த தேயிலை ஏற்றுமதியில் முறையே 14.0 சதவீதம் மற்றும் 12.8 சதவீதத்துக்கு வகைகூறிய ருசியா மற்றும் துருக்கி என்பன 2014இல் இலங்கை தேயிலைக்கான முக்கிய கொள்வனவாளராக

வரைபடம் 5.5 நாடுகளின்படி ஏற்றுமதிகள்




வரைபடம் 5.6 நாடுகளின்படி இறக்குமதிகள்




தொடர்ந்து இருந்தன. எனினும் ருஷிய நாணயத்தின் பாரிய பெறுமதித்தேய்வு மற்றும் ஆண்டின் இறுதிப்பகுதியில் குறைந்த பெற்றோலிய விலைகள் போன்ற சாதகமற்ற பொருளாதார நிலைமைகளின் விளைவாக ருஷியாவிற்கான ஆண்டுக்காண்டு அடிப்படையிலான தேயிலை ஏற்றுமதி 5.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை துருக்கிக்கான தேயிலை ஏற்றுமதி 48.1 சதவீதத்தால் அதிகரித்தது.

**ஏற்றுமதிச் சந்தைகளின் திரட்சி ஏற்றுமதி வருவாய்களில் உறுதியற்றதன்மைக்கு இட்டுச்செல்வதனால் இது முக்கிய கரிசனையாகக் கொள்ளப்படுகிறது.** மொத்த ஏற்றுமதியில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கிற்கு வகைகூறுகின்ற ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற சில சந்தைகளில் இலங்கை பெரிதும் தங்கியுள்ளது. மேலும், இலங்கைத் தேயிலை ஏற்றுமதியில் ஏறத்தாழ 66 சதவீதமானது பெரும்பாலும் எண்ணெய் ஏற்றுமதியில் உயர்ந்தளவில் தங்கியுள்ள மத்திய கிழக்கு மற்றும் அணிசேரா நாடுகளின் பொதுநலவாயத்திற்குரிய ஏற்றுமதிகளாகும். இந்த இடர்நேர்வுகளைத் தணிக்கும் நோக்கில், சந்தையின் பல்வகைப்படுத்தலுக்காக அரசு மற்றும் தனியார் துறையை உள்ளடக்கிய பல ஒருங்கமைக்கப்பட்ட அணுகுமுறை தேவைப்படுகிறது. மேலும், சந்தை அணுகுமுறையை மேம்படுத்துவதற்கு, இறக்குமதியாளர்கள் தற்போதுள்ள வர்த்தக வசதிகள் மற்றும் வர்த்தக ஒழுங்குபடுத்தல்களைப் பயன்படுத்த வேண்டும்.

**இந்தியா இறக்குமதிக்கான தனியொரு மூலமாக தொடர்ந்து விளங்கியதுடன் அதனைத் தொடர்ந்து சீனா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் என்பன காணப்பட்டன.** 2014 காலப்பகுதியல் இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 4,023 மில்லியனுக்கு 26.9 சதவீத வளர்ச்சியடைந்தது. இது, முக்கிய இறக்குமதிகளாக பெற்றோலிய உற்பத்திகள், துணிகள் மற்றும் வாகனங்கள் என்பனவற்றின் மூலம் இலங்கையின் மொத்த இறக்குமதியில் 20.7 சதவீதத்திற்கு வகைகூறியது. 2014இல் சீனா இலங்கையின் இரண்டாவது பாரிய இறக்குமதிக்கான மைய நாடாக விளங்கி ஆண்டுக்காண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 3,494 மில்லியனுக்கு 18.3 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் மொத்த இறக்குமதியில் 18.0 சதவீதத்தை வகைகூறியது. சீனாவிலிருந்தான முக்கிய இறக்குமதிகளாக துணிவகைகள், பெற்றோலிய உற்பத்திகள், பொறியியல் சாதனங்கள் மற்றும் இரும்பு மற்றும் உருக்கு போன்ற காணப்பட்டன. ஐக்கிய அரபு இராச்சியம் மூன்றாவது பாரிய இறக்குமதி மையமாக

காணப்பட்டதுடன் சிங்கப்பூரை விஞ்சி 55.8 சதவீத வளர்ச்சியை பதிவு செய்தது. ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்தான மொத்த இறக்குமதியில் பெற்றோலிய உற்பத்திகள் 87.1 சதவீதத்திற்கு வகைகூறியது. சிங்கப்பூரும் யப்பானும் நான்காவது மற்றும் ஐந்தாவது பாரிய இறக்குமதிக்கான மைய நாடுகளாக விளங்கியதுடன் மொத்த இறக்குமதியில் முறையே 6.5 சதவீதம் மற்றும் 4.8 சதவீதத்திற்கு வகைகூறின. இருப்பினும், 2014இல் சிங்கப்பூரிலிருந்தான பெற்றோலிய உற்பத்திகள் 25.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்தான பெற்றோலிய இறக்குமதிகளின் 71.7 சதவீத அதிகரிப்பின் பின்னணியில் பெற்றோலிய உற்பத்திகளின் வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். சிங்கப்பூர் மற்றும் யப்பானிலிருந்தான பாரிய இறக்குமதிகள் முறையே பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் உந்து ஈருளி வாகனம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.

## 5.4 நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு

### 5.4.1 பணிகளிலான வர்த்தகம்

**2014இல் பணிகளின் ஏற்றுமதிகள் விரிவடைந்தது.** பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2013இன் ஐ.அ.டொலர் 4,685 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ஆண்டுக்காண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 5,605 மில்லியனுக்கு 19.6 சதவீத ஆண்டு வளர்ச்சியை பதிவு செய்தது. பணிகள் துறையின் அபிவிருத்திக்குப் போக்குவரத்து, பயணம் மற்றும் தொலைத்தொடர்பூட்டல், கணினி மற்றும் தகவல் பணிகள் போன்ற துணைத் துறைகள் பங்களித்திருந்தன. அதேவேளை, பன்னாட்டு வர்த்தக நடவடிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பின் மூலம் பணிகள் தொடர்பான உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 3,725 மில்லியனுக்கு 6.3 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு அதிகரித்த பன்னாட்டு வர்த்தக நடவடிக்கைகள் 2014இல் பணிகள் கணக்கில் ஐ.அ.டொலர் 1,880 மில்லியன் தேறிய உட்பாய்ச்சலை ஏற்படுத்தியமை காரணமாகியது.

### போக்குவரத்துப் பணிகள்

**2014இல் போக்குவரத்துப் பணிகள் கணக்கின் விரிவாக்கத்திற்கு தொடர்ந்தும் ஆதரவளித்தது.** பயணிகள் கட்டணங்கள், சரக்கு கட்டணங்கள், துறைமுகம் மற்றும் வானூர்தி நிலையங்களுடன் தொடர்பான பணிகளின் பேரிலான அதிகரித்த வருவாய்கள் ஆண்டுக்காலப்பகுதியில் இத்துறை 7.8 சதவீத வளர்ச்சியை பதிவு செய்வதற்கு துணைபுரிந்தன. போக்குவரத்துப் பணிகளிலிருந்தான மொத்த உட்பாய்ச்சல்கள் 2013இன் ஐ.அ.டொலர் 1,784 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,923 மில்லியனுக்கு அதிகரித்தது. இது முக்கியமாக பயணிகள் கட்டணம், சரக்குக் கட்டண அதிகரிப்பு மற்றும் கப்பல் துறை மற்றும் வானூர்திநிலையம் தொடர்பான பணிகளின் மூலம் ஆதரவளிக்கப்பட்டன. 2014இல் அதிகரித்த பன்னாட்டு வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் வெளிநாட்டு பயணங்களில் இலங்கையர்களின் செலவினம் என்பவற்றின் காரணமாக வானூர்தி மற்றும் துறைமுக கட்டணங்கள் மீதான உயர்ந்த கொடுப்பனவுகளை தோற்றுவித்து போக்குவரத்துப் பணிகளிலான வெளிப்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டை விட 5.8 சதவீதத்தால் அதிகரித்தது. இதன் விளைவாக 2014 காலப்பகுதியில் போக்குவரத்து துறைக்கான மொத்த தேறிய

**அட்டவணை 5.6 நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (பீ.பி.எம்.6 வெளிப்படுத்துகை வடிவமைப்பு)**

ஐ.அ.டொ.மில்லியன்

| விடயம் | 2013 (அ) | | | 2014 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | செலவு | தேறிய | வரவு | செலவு | தேறிய |
| **பொருட்கள் மற்றும் பணிகள்** | **15,079** | **21,508** | **-6,429** | **16,735** | **23,142** | **-6,407** |
| **பொருட்கள்** | **10,394** | **18,003** | **-7,609** | **11,130** | **19,417** | **-8,287** |
| பொது வணிகம் | 10,392 | 17,802 | -7,410 | 11,130 | 19,405 | -8,275 |
| நாணயமல்லா தங்கம் | 2 | 201 | -199 | - | 12 | -12 |
| **பணிகள்** | **4,685** | **3,505** | **1,180** | **5,605** | **3,725** | **1,880** |
| போக்குவரத்து | 1,784 | 1,382 | 402 | 1,923 | 1,462 | 462 |
| கடல்வழி போக்குவரத்து | 893 | 686 | 208 | 969 | 722 | 246 |
| சரக்குத் தொகுதி | 893 | 686 | 208 | 969 | 722 | 246 |
| வான்வெளி போக்குவரத்து | 890 | 696 | 194 | 954 | 739 | 215 |
| பயணிகள் | 791 | 620 | 171 | 847 | 659 | 188 |
| சரக்குத் தொகுதி | 99 | 76 | 23 | 108 | 80 | 27 |
| பயணம் (இ) | 1,715 | 1,188 | 527 | 2,431 | 1,263 | 1,169 |
| கட்டுமானம் | 55 | 26 | 29 | 58 | 29 | 29 |
| காப்புறுதியும் ஓய்வூதியப் பணிகளும் | 109 | 85 | 24 | 115 | 90 | 26 |
| நிதியியல் பணிகள் | 235 | 328 | -93 | 256 | 350 | -94 |
| தொலைதொடர்பு, மற்றும் கணனி தகவல் பணிகள் | 719 | 368 | 351 | 748 | 398 | 350 |
| தொலைத்தொடர்புகள் | 114 | 87 | 27 | 120 | 98 | 22 |
| கணனி பணிகள் | 604 | 281 | 324 | 628 | 300 | 328 |
| ஏனைய வர்த்தக பணிகள் | 39 | 55 | -15 | 43 | 58 | -16 |
| அரச பொருட்கள் மற்றும் பணிகள் (என்.ஐ.இ) | 28 | 73 | -45 | 31 | 77 | -45 |
| **முதலாந்தர வருமானம்** | **132** | **1,883** | **-1,751** | **153** | **1,992** | **-1,839** |
| ஊழியர்களுக்கான நட்டஈடு | 15 | 66 | -51 | 19 | 68 | -50 |
| முதலீட்டு வருமானம் | 117 | 1,817 | -1,701 | 135 | 1,924 | -1,789 |
| நேரடி முதலீடு | 6 | 737 | -730 | 15 | 698 | -683 |
| பங்கிலாபம் | 6 | 386 | -380 | 15 | 317 | -302 |
| மீள் முதலீடப்பட்ட வருவாய் | - | 350 | -350 | - | 381 | -381 |
| சொத்துப் பட்டியல் முதலீடு | - | 645 | -645 | - | 828 | -828 |
| பங்கு மூலதனம் | - | 21 | -21 | - | 69 | -69 |
| வட்டி | - | 624 | -624 | - | 758 | -758 |
| குறுங்காலம் | - | 48 | -48 | - | 61 | -61 |
| நீண்டகாலம் | - | 575 | -575 | - | 697 | -697 |
| ஏனைய முதலீடு | 20 | 436 | -416 | 18 | 398 | -380 |
| ஒதுக்கு சொத்துக்கள் | 91 | - | 91 | 102 | - | 102 |
| **இரண்டாந்தர வருமானம்** | **6,428** | **788** | **5,639** | **7,046** | **819** | **6,227** |
| மத்திய அரசாங்கம் | 21 | - | 21 | 28 | - | 28 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 6,407 | 788 | 5,619 | 7,018 | 819 | 6,199 |
| **நடைமுறை கணக்கு** | **21,639** | **24,180** | **-2,541** | **23,934** | **25,952** | **-2,018** |
| **மூலதன கணக்கு** | **90** | **19** | **71** | **73** | **15** | **58** |
| மூலதன மாற்றல்கள் | 90 | 19 | 71 | 73 | 15 | 58 |
| மத்திய அரசாங்கம் | 39 | - | 39 | 52 | - | 52 |
| கூட்டுத்தாபன மற்றும் வீட்டுத்துறை | 51 | 19 | 32 | 21 | 15 | 6 |
| **நடைமுறை மற்றும் மூலதன கணக்கு** | **21,729** | **24,198** | **-2,470** | **24,007** | **25,967** | **-1,960** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) வதியாதோருக்கு வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் போக்குவரத்து பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## சிறப்புக்குறிப்பு 6 இலங்கையில் வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்களில் காணப்பட்ட முன்னேற்றங்கள்

நாட்டின் வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்கள், நாட்டின் அனைத்து வதிவோரும் உலகின் எஞ்சிய பகுதியுடன் நடத்தும் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களைக் காட்டுகின்றது. இக்கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான கணக்குகளான சென்மதி நிலுவை, பன்னாட்டு முதலீட்டு நிலைமை, வெளிநாட்டுப் படுகடன் மற்றும் பன்னாட்டு ஒதுக்குகள் என்பனவற்றின் கீழ் வேறுபட்ட பரிமாணங்களைக் கொண்ட எண்ணொன்றில் பதிவு செய்யப்படுகின்றன. இக்கணக்குகளின் வரைவிலக்கணங்கள் வகைப்படுத்தல்கள் மற்றும் கணக்கீட்டு வசதிகள் அனைத்தையும் இணக்கப்படுத்த வேண்டிய தேவை காணப்படுவதனால், வெளிநாட்டுத்துறை கூட்டுத்தொகைகளை தேசிய கணக்குகள், நாணய மற்றும் நிதியியல் புள்ளிவிபரங்கள் மற்றும் அரச நிதி புள்ளிவிபரங்கள் போன்ற ஏனையவற்றுடன் சேர்ந்த கூட்டுத்தொகைகளுடன் ஒப்பிடமுடியும்.

இலங்கையின் வெளிநாட்டுத்துறை புள்ளிவிபரங்களைத் தொகுப்பதற்கும் பரப்புவதற்கும் பொறுப்பாகவுள்ள இலங்கை மத்திய வங்கி, வெளிநாட்டுத் துறைப் புள்ளிவிபரங்களை மேம்படுத்துவதற்காக 2013இலும் 2014இலும் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டது. இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கான தரவுகளைத் திரட்டுவதற்காக 2013இல் இலங்கை, சென்மதி நிலுவை மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலைமை கைநூலின் 6ஆவது பதிப்பில் குறித்துரைக்கப்பட்ட தொகுப்பு முறையியல்களைப் பின்பற்றியது. இதன்படி, பன்னாட்டு முதலீட்டு நிலைமை மற்றும் ஒதுக்கு தரவு அட்டவணை போன்ற பல புதிய புள்ளிவிபரங்களைக் காட்டும் முறைகள், உள்ளடக்கங்கள், சரியான நேரம் மற்றும் தற்போதுள்ள சென்மதி நிலுவை மற்றும் வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்கள் போன்ற வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்களின் சமர்ப்பிப்புக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றிற்குப் புறம்பாக, இலங்கை பன்னாட்டு நாணய நிதியத்தினால் நடாத்தப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட நேரடி முதலீட்டு அளவீட்டில் பங்குபற்ற ஆரம்பித்ததுடன் உலக வங்கியின் காலாண்டு வெளிநாட்டுக் கடன்பாட்டு புள்ளிவிபரங்கள் தளத்திற்கு அறிக்கையிடப்பட்ட தரவுத்தளத்தின் உள்ளக்கப் பரப்பு விரிவடைந்தது. வெளிநாட்டுத் துறைப் புள்ளிவிபரங்களில் காணப்பட்ட இம்முன்னேற்றங்கள் அரசாங்கம், வங்கித்தொழில் துறை மற்றும் நாணய அதிகாரசபை (இலங்கை மத்திய வங்கி) மற்றும் தனியார் துறையிலிருந்து தரவுகளைச் சேகரிப்பதற்கான புதிய அளவீடுகள் என்பனவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின் நேரம் தவறாமை மற்றும் அவற்றின் உள்ளடக்கம் என்பனவற்றினூடாக மேலும் முன்னேற்றங்கள் அடையப்பட்டன. இம்முன்னேற்றங்களின் காரணமாக, இலங்கையின் வெளிநாட்டுத் துறை தரவானது தற்பொழுது 2015ஆம் இலங்கை பின்பற்றுவதற்கு எண்ணியுள்ள ப.நா. நிதியத்தின் சிறப்புத் தரவுப் பரப்பல் நியமங்களின் கீழ் சரியான நேரம், உள்ளடக்கும், காலாந்தரம் என்பன தொடர்பான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதாகவுள்ளது. வெளிநாட்டுத் துறைப் புள்ளிவிபரங்களின் தொகுப்பில் காணப்படும் முன்னேற்றங்களுக்கு ப.நா.நிதியத்தின் தொடர்ச்சியான தொழில்நுட்ப உதவியின் மூலம் ஆதரவளிக்கப்பட்டது.

### சென்மதி நிலுவை

சென்மதி நிலுவை என்பது குறித்துரைக்கப்பட்டதொரு காலப்பகுதியில் வதிவோருக்கும் வதிவற்றோருக்குமிடையிலான கொடுக்கல்வாங்கல்களைத் தொகுக்கின்ற புள்ளிவிபரவியல் கூற்றொன்றாகும். முதன்மையான கணக்குகள், பொருட்கள் மற்றும் பணிகளின் கணக்குகள், முதலாந்தர வருமானக் கணக்குகள், இரண்டாந்தர வருமானக் கணக்குகள், மூலதனக் கணக்குகள் மற்றும் நிதியியல் கணக்குகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது. இலங்கை மத்திய வங்கி, சென்மதி நிலுவைக் கைநூல் 6 இல் விதந்துரைக்கப்பட்ட பன்னாட்டு நியமங்களுக்கிணங்க காலாண்டு அடிப்படையில் சென்மதி நிலுவைத் தரவுகளைத் தொகுக்கிறது. சென்மதி நிலுவை கைநூல் 5 இலிருந்து சென்மதி நிலுவைக் கைநூல் 6 இற்கு இலங்கை மாற்றமடைந்தமையானது 2012 மற்றும் 2013 இற்கான சென்மதி நிலுவை புள்ளிவிபரங்களின் வெளியீடுகளுடன் 2014இல் நடைமுறைக்கிடப்பட்டது. இம்மாற்றம் தொடர்பான விபரங்கள் 2013ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் சிறப்புக் குறிப்பு 6இல் விபரிக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கான சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்கள் 2014ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் பின்வரும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ளன. அட்டவணை 5.1: சென்மதி நிலுவையின் தொகுப்பு, அட்டவணை 5.6: நடைமுறை மற்றும் மூலதனக் கணக்குகள், அட்டவணை 5.8ஏ மற்றும் அட்டவணை 5.8பீ: நிதியியல் கணக்கு.

### பன்னாட்டு முதலீட்டு நிலைமை

கோட்பாட்டு ரீதியாக ஐந்தொகையினை ஒத்ததான பன்னாட்டு முதலீட்டு நிலைமை வதிவற்றவர்கள் மீதான கோரல்களாக விளங்கும் வதிவோரின் நிதியியல் சொத்துக்களின் பெறுமதி மற்றும் உள்ளமைப்பு மற்றும் குறிப்பிட்டதொரு நேரப்புள்ளியில் வதிவற்றோருக்கான வதிவோரின் பொறுப்புக்கள் என்பனவற்றைப் பாதிக்கிறது. சென்மதி நிலுவைக் கைநூல் 6இன் நியமங்களுக்கிணங்க இலங்கைக்கான பன்னாட்டு முதலீட்டு நிலைமை முக்கியமாக தொழிற்பாட்டு வகை அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டது. பிரதான தொழிற்பாட்டு வகைகள் நேரடி முதலீடு, சொத்துப்பட்டியல் முதலீடு, நிதியியல் பெறுதிகள், ஏனைய முதலீடுகள் மற்றும் ஒதுக்குச் சொத்துக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. ஒவ்வொரு தொழிற்பாட்டு வகையும் நிதியியல் சாதனங்களின் வகை, வதிவோரின் நிறுவன ரீதியான துறைகள் மற்றும் நிதியியல் சாதனங்களின் முதிர்ச்சி என்பனவற்றின் அடிப்படையில் மேலும் பிரிக்கப்படுகின்றன. "இலங்கையின் பன்னாட்டு முதலீட்டு நிலைமை" இனை ஆண்டறிக்கை 2013இன் சிறப்புக் குறிப்பு 7இல் விபரமாக விபரிக்கப்படுகிறது. இலங்கையின் பன்னாட்டு முதலீட்டு நிலைமையின் ஆரம்ப வெளியீடு ஆண்டு அடிப்படையில் காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து இலங்கை மத்திய வங்கி பன்னாட்டு முதலீட்டு நிலைமையை, 2014ஆம் ஆண்டின் 1ஆம் காலாண்டிலிருந்து காலாண்டு அடிப்படையில் வெளியிடத் தொடங்கியது. காலாண்டு அடிப்படையிலான பன்னாட்டு முதலீட்டு நிலைமையின் வெளியீடும் சிறப்புத் தரவுப் பரப்பல், நியமத் தரவு பரப்பலை ஏற்றுக்கொண்ட நாடுகளின் தரத்திற்கு இலங்கையினைத் தரமுயர்த்த வேண்டியதனைத் தேவைப்படுத்துகின்றது. இலங்கையின் பன்னாட்டு முதலீட்டு நிலைமையானது அட்டவணை 5.10இல் காட்டப்படுகிறது: 2014 ஆண்டறிக்கையின் அட்டவணை பன்னாட்டு முதலீட்டு நிலைமை.

### வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்கள்

மொத்த வெளிநாட்டுப் படுகடன் என்பது ஏதேனுமொரு குறிப்பிட்ட நேரத்தில், வதிவற்றோருக்கான வதிவோரின் பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் வெளிநின்ற ஒப்பந்த ரீதியான

பொறுப்புக்களின் தொகை என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. 2013ஆம் ஆண்டிற்கு முன்னர் இலங்கை, வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களை ஆண்டு அடிப்படையில் பரப்பியது. இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களின் உள்ளடக்கம், சரியான நேரம் மற்றும் காலாந்தரம் என்பன 2013இலிருந்து சென்மதி நிலுவை கைநூல் 6 பரப்பல் முறையியல் பின்பற்றப்பட்டமையுடன் விரிவடைந்தது. புதிய வெளிநாட்டுப் படுகடன் சமர்ப்பிப்பின் கீழ், மொத்த வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம், நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன்பாடுகள் சேர்க்கப்பட்டதுடன் அது விரிவடைந்த வேளையில் தனியார் துறை வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களின் உள்ளடக்கம் மேம்பட்ட காலாண்டு அளவீடுகளுடன் விரிவடைந்தது. புதிய வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்கள் துறைவாரியான படிவத்தில் காட்டப்படுவதுடன் துறைகளாக பொது அரசாங்கம், மத்திய வங்கி, வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்கள், ஏனைய துறைகள் (தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள்) மற்றும் நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் என்பன காணப்பட்டன. ஒவ்வொரு துறையினதும் வெளிநாட்டுப் படுகடனானது நிதியியல் சாதனங்களின் முதிர்ச்சி மற்றும் வகையின் அடிப்படையில் மேலும் பிரிக்கப்படுகிறது. இந்நிதியியல் சாதனங்கள் படுகடன் பிணையங்கள், கடன்கள், நாணய மற்றும் வைப்புக்கள், வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது. குறுங்கால மற்றும் நீண்ட கால வகைப்படுத்தல்கள் ஆரம்ப முதிர்ச்சிக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்கள் ஆண்டறிக்கை 2014இன் அட்டவணை 5.12: வெளிநின்ற வெளிவாரிப் படுகடன் நிலையில் காட்டப்பட்டுள்ளது.

#### காலாண்டு வெளிவாரிப் படுகடன் புள்ளிவிபரங்கள்

வெளிநாட்டுப் படுகடனின் புதிய சமர்ப்பிப்புக்களை பின்பற்றுவதன் விளைவாக, காலாண்டு வெளிவாரி புள்ளிவிபரங்களின் தரவுத்தளத்திற்கு அறிக்கையிடப்பட்ட வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம் விரிவடைந்தது. உலக வங்கியினாலும் பன்னாட்டு நாணய நிதியத்தினாலும் கூட்டாக விருத்தி செய்யப்பட்ட காலாண்டு வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களின் தரவுத்தளம் ப.நா. நிதியத்தின் இறப்பு தரவுப் பரப்பல் நியமத்தினை ஏற்றுக்கொண்ட நாடுகளினதும் ப.நா. நிதியத்தின் பொதுத் தரவுப் பரப்பல் முறைமையில் பங்கேற்கும் தெரிந்தெடுக்கப்பட்ட எண்ணிக்கையான நாடுகளினதும் இலங்கை தற்பொழுது காலாண்டு வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களை பொதுத் தரவு பரம்பல் முறைமை நாடொன்றாக அறிக்கையிடுகின்றது. புதிய வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களுடன் தற்பொழுது இலங்கை கட்டாயமான மற்றைய அட்டவணைகளுக்குப் புறம்பாக, வெளிநாட்டுப் படுகடன் விபரங்களை விபரமான முறையில் காலாண்டு வெளிவாரிப் படுகடன் அறிக்கையிடல் படிவத்தில் அட்டவணை 6: துறை வாரியான மொத்த வெளிநாட்டுப் படுகடன் என்ற தலைப்பின் கீழ் சமர்ப்பிக்கின்றது. ஓர் காலாண்டுத் தாமதத்துடன் காலாண்டு அடிப்படையில் புதிய அட்டவணைகள் உள்ளடக்கப்பட்டிருப்பதன் காரணமாக இலங்கை தற்பொழுது தனது அறிக்கைகளை சிறப்புத் தரவுப் பரப்பல் நியமத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க அறிக்கையிடும் நிலையில் இருக்கின்றது.

#### ஒதுக்குத் தரவு அட்டவணை

ஒதுக்குத் தரவு அட்டவணை என்பது நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகள் மற்றும் வெளிநாட்டு நாணய திரவத்தன்மை நிலைமை என்பன தொடர்பான கோட்பாடுகளை ஒருங்கிணைக்கின்ற அனைத்தையுமுள்ளடக்கிய ஒரு கட்டமைப்பு என்படுவதுடன் இது 2013இல் ப.நா.நிதியத்தினால் வெளியிடப்பட்ட "பன்னாட்டு ஒதுக்குகள் மற்றும் வெளிநாட்டு நாணய திரவத்தன்மை: தரவு அட்டவணைக்கான வழிகாட்டல்" இற்கிணங்க திரட்டப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது. பன்னாட்டு ஒதுக்குகள் மீதான தகவல்களை உள்ளடக்குவதற்குப் புறம்பாக, ஒதுக்குத் தரவு விபரம் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட நாட்டிலுள்ள எதிர்கால உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்களை அடையாளம் காண்கிறது. அலுவல்சார் ஒதுக்குகள் பிணையங்கள், நாணயம் மற்றும் வைப்புக்கள், ப.நா. நிதிய ஒதுக்கு நிலைமை, சிறப்பு எடுப்பனவு உரிமைகள், தங்க மீதி மற்றும் ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் என்பனவற்றின் பகுப்புடன் சமர்ப்பிக்கப்பட்டது. வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் மீது முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட குறுங்கால தேறிய வெளிச்செல்கையானது அரச கடன்கள், இலங்கை அபிவிருத்தி முறிகள், நாட்டிற்கான முறிகள், ப.நா. நிதிய துணைநில் ஒழுங்குகள், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பொறுப்புக்கள் மற்றும் பரஸ்பர பரிமாற்றல் கொடுப்பனவுகள் மீதான குறுங்கால மற்றும் நீண்ட கால நிலைமைகள் என்பனவற்றின் எதிர்கால மீள்கொடுப்பனவுகளுக்கான முக்கியமாக ஓராண்டு வரையிலான முதிர்ச்சியடைந்த பகுப்புக்களை முக்கியமாக உள்ளடக்கியுள்ளது. 2013 நவெம்பரிலிருந்து ஒரு மாத தாமதத்துடன் மாதாந்த அடிப்படையில் ஒதுக்குத் தரவு விகிதத்தினைத் தொகுத்து பரப்புவதன் மூலம் இலங்கை சிறப்புத் தரவுப் பரப்பல் நியமத்தின் வழிகாட்டலின் கீழ் இன்னொரு தேவைப்பாட்டையும் நிறைவேற்றியிருக்கிறது.

#### இணைக்கப்பட்ட நேரடி முதலீட்டு அளவீடு

இணைக்கப்பட்ட நேரடி முதலீட்டு அளவீடு என்பது ப.நா. நிதியத்தின் வழிகாட்டலில் உலகளாவிய புள்ளிவிபரங்களைச் சேகரிக்கின்றதொரு முயற்சியாகும். இது 'உள்முக' நேரடி முதலீட்டு நிலைமைகள் (அதாவது அறிக்கையிடும் பொருளாதாரத்திற்குள்ளான நேரடி முதலீடு) உடனடி முதலீட்டாளரின் பொருளாதாரத்தின் மூலம் குறுக்காக வகைப்படுத்தப்பட்டவை மற்றும் 'வெளிமுக' நேரடி முதலீட்டு நிலைமைகள் (அதாவது அறிக்கையிடும் பொருளாதாரத்தின் வெளிநாட்டு நேரடி முதலீடு) உடனடி முதலீட்டாளரின் குறுக்காக வகைப்படுத்தப்பட்ட பொருளாதாரம் என்பன மீதான தரவுகளை விபரமான முறையில் சமர்ப்பிக்கிறது. பன்னாட்டு முதலீட்டு நிலைமையில் அறிக்கையிடப்பட்டவாறு கால முடிவில் மொத்த நேரடி முதலீட்டு இருப்பு நிலைமைக்கு அனைத்து நாடுகளும் சமமாக இருக்கின்ற விதத்தில் மொத்த இருப்பு நிலைமையுடன் நேரடி முதலீட்டுத் தரவுகள் இருப்பு நிலைமைகளின் நியதிகளில் காட்டப்படுகின்றன. இலங்கை, இணைக்கப்பட்ட நேரடி முதலீட்டு அளவீட்டுத் தரவுத் தளத்தில் 2013இலிருந்து பங்கேற்க தொடங்கியுள்ளதுடன் வருடாந்த அடிப்படையில் தரவுகளை அறிக்கையிடும்.

#### சென்மதி நிலுவையின் பணிகள் கணக்குப் புள்ளிவிபரங்களில் முன்னேற்றங்கள்

சென்மதி நிலுவையின் பணிகள் துறைத் தரவின் உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதற்காக, 2014இல் இலங்கை மத்திய வங்கி பல புதிய அளவீடுகளை முன்னெடுத்தது. இவ்வளவீடுகள் உள்நாட்டு வானூர்தி நிறுவனங்கள், வானூர்தி நிலையம் மற்றும் வரையறுக்கப்பட்ட வான்

போக்குவரத்துப் பணிகள் (பண்டாரநாயக்கா மற்றும் மத்தள பன்னாட்டு வானூர்திநிலையங்கள்) வதிவற்ற வானூர்தி நிறுவனங்களின் பொது விற்பனை முகவர்கள் இலங்கை துறைமுக அதிகாரசபை, தனிப்பட்ட முறையில் சொந்தமான கொள்கலன் முனைக்கோடி, கப்பற்படுத்தல் முகவர்கள், சரக்கு அனுப்புபவர்கள், ஏனைய துறைமுகங்களுடன் தொடர்பான பணி வழங்குநர்கள், காப்புறுதிக் கம்பனிகள், வெளிநாட்டு மீள்காப்புறுதி இயலளவுடன் கூடிய காப்புறுதித் தரகர்கள் தொலைத் தொடர்பூட்டல் கம்பனிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் இயலுமைப் பணிகளிலுள்ள கம்பனிகள் என்பனவற்றை உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கி, 2015 ஏப்பிறலில் வருகை தருவதற்கு இருக்கும் ப.நா. நிதியத்தின் தொழில்நுட்ப உதவித் தூதுக்குழுவின் உதவியுடன் இவ்வாண்டுப் பகுதியில் மேற்குறிப்பிட்ட அளவீட்டுத் தரத்தின் உள்ளடக்கத்தினை விரிவாக்கவும் மேம்படுத்தவும் எதிர்பார்க்கிறது. 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளுக்கான பணிகள் துறைக்கான புதிய தரவுகளின் தொகுப்பொன்று ஆண்டறிக்கை 2015இல் பிரசுரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்கள் உரிய நேரத்தில் பத்திரிகை வெளியீடுகள், மாதாந்த செய்தித் திரட்டுக்கள், வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதாரக் குறிகாட்டிகள், ஆண்டறிக்கை மற்றும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்தி அறிக்கை என்பனவற்றில் வெளியிடப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கி, தனியொரு மூலத்தினூடாக அனைத்து வெளிநாட்டுத் தரவுகளையும் பொதுமக்கள் பெறுவதனை இயலச்செய்யும் விதத்தில் மத்திய வங்கியின் வெப்தளத்தில் 'புள்ளிவிபரங்கள், வெளிநாட்டுத் துறை' என்பதன் கீழ் அனைத்துப் பிந்திய தரவுகளையும் தற்பொழுது பரப்பி வருகின்றது.

உட்பாய்ச்சல்கள் 2013இன் ஐ.அ.டொலர் 402 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ஐ.அ.டொலர் 462 மில்லியனாகக் காணப்பட்டது.

**2014இல் பயணிகளின் கட்டணம் தொடர்பான உட்பாய்ச்சல்கள், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 847 மில்லியனுக்கு 7.1 சதவீதத்தால் அதிகரித்தது.** இலங்கைக்கு பயணம் செய்த பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தமை மற்றும் சிறிலங்கன் எயார்லைன்ஸ ின் வான் பயணக் கட்டணம் அதிகரித்தமை என்பவற்றின் விளைவாக மொத்த உட்பாய்ச்சல் மேம்பாடடைந்தன. 2014இல் சிறிலங்கன் எயார்லைன்ஸ் "வண் வேர்ல்ட்" உலக வானூர்தி குழுமத்தின் ஒரு பகுதியாக்கப்பட்டதுடன் அத்தகைய குழுமத்தில் இந்திய ஆணைக்கண்டத்திலிருந்து இணைந்து கொண்ட முதலாவது ஊர்தியாகும். இதனால் உலகின் ஏனைய நாடுகளுடனான தொடர்புத்தன்மையை அதிகரிக்கின்றது. சிறிலங்கன் எயார்லைன்ஸ் 2014இல் இரண்டு புதிய வானூர்திகளை கொள்வனவு செய்ததுடன் அதனது தற்போதைய சரக்கு ஊர்திகளை 2015 அளவில் 23 இலிருந்து 28 ஆக அதிகரிக்கும் விதத்தில் ஐந்து புதிய வானூர்திகளை சேர்த்துக் கொள்வதற்கு திட்டமிட்டுள்ளது. சிறிலங்கன் எயார் லைன்ஸினால் திட்டமிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட புதிய வானூர்திகள் வான் கட்டண அதிகரிப்பு, பயண சேரிடங்களின் விரிவாக்கம் மற்றும் அதிகரித்த பயண எண்ணிக்கை என்பன பயணிகளின் கட்டணங்கள் பேரிலான பெறுகைகள் குறுகிய காலத்திற்கு முன்னேற்றமடைவதற்கு வழிவகுத்தன. அதேவேளை, நேசிய ஊர்தியான சிறிலங்கன் எயார்லைன்ஸையும் சிக்கன ஊர்தியான மிகின் லங்காவையும் ஒன்றிணைத்து நிதியியல் நம்பகத்தன்மைச் செயற்பாட்டு வினைத்திறனை அதிகரிப்பதற்கு 2015 இற்கான இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டது.


**2014இல் கப்பல் சரக்கு, துறைமுகம் மற்றும் வானூர்திநிலையம் தொடர்பான பணிகளின் பேரிலான உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 1,077 மில்லியனுக்கு 8.4 சதவீதத்தினால் அதிகரித்தது.** இவ்வளர்ச்சிக்கு கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட சரக்கு மற்றும் கொள்கலன்களின் அளவிலான அதிகரிப்பு முக்கிய பங்கினை வகித்தது. பிராந்தியத்தின் வர்த்தக அளவில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக ஆண்டுகாலப்பகுதியில் சரக்கு மாற்றல் கொள்கலனின் கையாளல்களில் கணிசமான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மேலும், இலங்கையின் வான் சரக்குத் ஊர்தி கைத்தொழிலை முன்னேற்றம் நோக்கில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் 2014இல் முதன்மை வாடிக்கையாளர்களுடன் பல்வேறுபட்ட இலத்திரனியல் விமான வழிப்பட்டியல் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டிருந்தது. அதேவேளை, கொழும்பு தெற்கு துறைமுகத்தின் இயலளவு அதிகரித்தல் மற்றும் பன்னாட்டு வர்த்தக நடவடிக்கைகளின் மேம்படுத்தப்பட்ட வளர்ச்சி இத்துறையின் செயலாற்றத்தை மேலும் முன்னேற்றும்.

## பயணம் மற்றும் சுற்றுலா

**யுத்தத்திற்குப் பின்னரான வளர்ச்சி உத்வேகத்தின் தொடர்ச்சி 2014இல் சிறப்பாக செயலாற்றியதுடன் அவ்வாண்டுக்கு குறிக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகை இலக்கான 1.5 மில்லியனை விஞ்சியது.** தனியார் துறை மற்றும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றுலாக் கைத்தொழிலின் முதலீட்டின் மீதான குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, உட்கட்டமைப்பு அபிவிருத்திகள், சுற்றுலாப் பயணிகளைக் கவருதலை அறிமுகப்படுத்தல் மற்றும் புதிய விடயங்கள் மற்றும் மேம்பாட்டு பிரசாரங்கள் என்பன நாட்டிற்கு அதிக சுற்றுலாப்பயணிகளை கவர்வதற்கு துணைபுரிந்தன. அதன்படி, சுற்றுலாப்பயணிகளின் வருகை 2013இன் 1,274,593 சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் ஒப்பிடுமிடத்து 2014இல் 1,527,153 இற்கு 19.8 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**அனைத்து பாரிய பிரதேசங்களிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகை 2014இல் அதிகரித்தது.** சுற்றுலாப் பயணிகளின் வருகை 479,007 இற்கு 13.8 சதவீதத்தினால் அதிகரித்தன் மூலம் மேற்குஐரோப்பா இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் முக்கிய மூலமாக தொடர்ந்தும் காணப்பட்டது. எனினும், ஏனைய பிரதேசங்களிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகையின் உயர்ந்த வீதத்திலான அதிகரிப்புக் காரணமாக மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் மேற்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் பங்கு 2012இன் 37.0 சதவீதம் 2013இல் 33.0 சதவீதம் போன்றவற்றிலிருந்து 2014இல் 31.0 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, இரண்டாவது முக்கிய சந்தையான தென் ஆசியா பிராந்தியம் சுற்றுலா வருகைகளின் 2013இன் 25.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 24.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது, ஏனைய பிராந்தியங்களிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினால் ஏற்பட்டது. இதன்படி, கிழக்காசியா மற்றும் கிழக்கு ஐரோப்பா போன்ற நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் பங்கு அதிகரித்தது. இப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட வினைத்திறன்மிக்க ஊக்குவிப்பு பிரசாரங்களுக்கு துணைபுரிந்தன. சீனா, இந்தோனேசியா மற்றும் யப்பான் போன்றவற்றிலிருந்தான சுற்றுலாப்பயணிகளின் வருகை கிழக்காசியாவிலிருந்தான வருகையின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்களவில் பங்களித்த வேளையில் ருஷியா கிழக்கு ஐரோப்பாவிலிருந்தான வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தது. தனிப்பட்ட நாடுகளின் அடிப்படையில் இந்தியா சுற்றுலாப் பயணிகளை உருவாக்கும் முன்னணி நாடாக தொடர்ந்து விளங்கியதுடன் அதனை தொடர்ந்து ஐக்கிய இராச்சியம்,

வரைபடம் 5.7 நாடுகளின்படி சுற்றுலாப் பயணிகளின் வருகை - 2014




சீனா, சேர்மனி மற்றும் மாலைதீவு என்பன காணப்பட்டன. 2014 ஆம் ஆண்டின் இவ்வைந்து நாடுகளும் ஒன்று சேர்ந்து இலங்கைக்கான சுற்றுலா பயணிகளின் வருகைகளில் 46.1 சதவீதத்திற்கு வகைகூறின. சீனாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகை 128,166 ஆக விளங்கி 136.1 சதவீத உயர் வளர்ச்சியைப் பதிவு செய்தது. இந்தொனேசியா (68.5 சதவீதம்) மற்றும் ஓமான் (67.1 சதவீதம்) என்பன முறையே 29,558 மற்றும் 12,756 என்ற வருகைகளை பதிவு செய்தது. வருகைக்கான நோக்கங்களின் நியதிகளில் நாட்டிற்கு விஜயம் செய்த சுற்றுலாப் பயணிகளில் பெரும்பான்மையானோர் (68.0 சதவீதம்) விடுமுறை நோக்கங்களுக்காக வருகை தந்தனர். வியாபார நோக்கத்திற்கான பயனிகளின் வருகை 2013இன் 0.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 1.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் நண்பர்கள் மற்றும் உறவினர்களைச் சந்தித்தல், சமய மற்றும் கலாச்சார நோக்கங்கள், நலன், கல்வி

அட்டவணை 5.7 சுற்றுலாத் துறையின் செயலாற்றம்

| விடயம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 (அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) 2014 (அ) |
|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா பயணிகளின் வருகை (எண்ணிக்கை) | 654,476 | 855,975 | 1,005,605 | 1,274,593 | 1,527,153 | 19.8 |
| பயணங்களின் காரணத்தினாலான வருகைள் | | | | | | |
| பொழுதுபோக்கு | 516,538 | 687,830 (ஆ) | 748,436 | 915,208 (ஆ) | 1,037,644 (இ) | 13.4 |
| வியாபாரம் | 83,270 | 68,436 (ஆ) | 90,040 | 67,946 (ஆ) | 29,381 (இ) | -56.8 |
| ஏனையவை | 54,668 | 99,709 (ஆ) | 167,129 | 291,439 (ஆ) | 460,128 (இ) | 57.9 |
| சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000) | 6,548 | 8,559 | 10,056 | 10,961 | 15,119 | 37.9 |
| தங்கும் அறை குடியிருப்பு விகிதம் (%) | 70.2 | 77.1 | 71.2 | 71.7 | 74.3 | 3.6 |
| மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்லியன்) | 65,018 | 91,926 | 132,427 | 221,720 | 317,479 | 43.2 |
| தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ) | 99,344 | 107,393 | 131,688 | 173,954 | 207,889 | 19.5 |
| மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) | 132,055 | 138,685 | 162,869 | 270,150 | 299,890 | 11.0 |
| நேரடி தொழில்வாய்ப்புக்கள் | 55,023 | 57,786 | 67,862 | 112,550 | 129,790 | 15.3 |
| மதிப்பிடப்பட்ட மறைமுக தொழில்வாய்ப்புக்கள் | 77,032 | 80,899 | 95,007 | 157,600 | 170,100 | 7.9 |

(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) மதிப்பீடுகள்

மூலங்கள் : இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி


மற்றும் விளையாட்டு போன்ற ஏனைய நோக்கங்களுக்கான வருகைதந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் பங்கு 2013இன் 22.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 30.1 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**2014இல் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் ஆரோக்கியமான வளர்ச்சியை தொடர்ந்தும் பதிவுசெய்தது.** சுற்றுலாவிலிருந்தான உட்பாய்ச்சல்கள் 2013இன் ஐ.அ.டொலர் 1,715 மில்லியனிலிருந்து 2014இல் ஐ.அ.டொலர் 2,431 மில்லியனுக்கு 41.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் அதிகரிப்புடன் கூடிய சுற்றுலாப் பயணிகளின் செலவீனத்தின் அதிகரிப்பு மற்றும் அதிகரித்த தங்கும் காலம் என்பன இவ் வளர்ச்சிக்கு ஆதரவளித்தன. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் செலவினம் மற்றும் தங்கும் காலம் மீதான பிந்திய ஆண்டுாந்த அளவீட்டின்படி நாளொன்றுக்கான சுற்றுலாப் பயணியொருவருக்கான சராசரிச் செலவிடல் 2013இன் ஐ.அ.டொலர் 156.5 இலிருந்து 2014இல் ஐ.அ.டொலர் 160. 8 இற்கு உயர்வடைந்தது. அதேவேளை, சுற்றுலாப் பயணியொருவருக்கான சராசரி தங்கும் காலம் 2013இன் 8.6 நாட்களிலிருந்து 2014இல் 9.9 நாட்களுக்கு அதிகரித்திருந்தது. உயர் செலவுகளை மேற்கொள்ளக்கூடிய பயணிகளின் வருகையின் சார்பிலான உயர் வளர்ச்சி இத்துறையின் வருவாயின் அதிகரிப்புக்கு சாதகமாக பங்களித்தது. அதேவேளை, பயணத்தின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் பயண மற்றும் சுற்றுலாத் துணைத் துறையிலிருந்தான ஐ.அ.டொலர் 1,188 மில்லியன் தேறிய உட்பாய்ச்சலினால் 2014இல் ஐ.அ.டொலர் 1,263 மில்லியனுக்கு 6.3 சதவீதத்தால் அதிகரித்தது.

**2014இல் சுற்றுலாத் துறையின் மீதான முதலீடு மேலும் விரிவடைந்தது.** பன்னாட்டு சுற்றுலாவிடுதி சங்கிலிகளான சங்கிறி - லா, கயாட், மூவென்பிக், செறட்டன், றுய், நெக்ஸ்ட், பெஸ்ட் மற்றும் சென்ட்டரா என்பன ஆண்டுப்பகுதியில் தொடர்ந்தும் கட்டுமானங்களை மேற்கொண்டன. 2014 காலப் பகுதியில் 68 சுற்றுலாவிடுதி செயற்திட்டங்களுக்கான முதலீட்டு முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்று ஐ.அ.டொலர் 423.4 மில்லியன் பெறுமதியான 40 சுற்றுலாவிடுதி செயற்திட்டங்களுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும், இவ்வாண்டுப்பகுதியில் 20 புதுச் சுற்றுலாவிடுதி செயற்திட்டங்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டமை கைத்தொழிலுக்கு 1,112 அறைகளின் இயலளவைக் கூடுதலாக சேர்த்திருக்கிறது. நாட்டின் உள்நாட்டு யுத்தத்தின் முடிவில் சுற்றுலாக் கைத்தொழில் அத்தகைய மாகாணத்தில் மலர்ச்சியடைந்ததுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் கிழக்கு மாகாணத்தை நோக்கி படிப்படியாக நகர ஆரம்பித்தனர். மேலும், இந்த மாகாணங்களில் பல தனியார் சிறிய நடுத்தர முயற்சியாளர்களும் இருந்தனர். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை 2014இல் "தீவுச் சுற்றுலாவிடுதி", "கடற்கரை சுற்றுலாவிடுதி" மற்றும் "வனச் சுற்றுலாவிடுதி" போன்ற தொனிப்பொருளின் கீழ் முறையே கல்பிட்டிய, குச்சவெளி மற்றும் யால போன்ற மூன்று சுற்றுலாவிடுதி செயற்திட்டங்களை ஆரம்பித்தது. 2014இல் உயர்தரத்திலான சுற்றுலாவிடுதியொன்றிக்காக குச்சவெளியில் சுற்றுலாவிடுதியொன்றை அமைப்பதற்கு 11 ஏக்கர் நிலம் குச்சவெளியில் உயர் சந்தை, சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு குத்தகைக்கு விடப்பட்டது. அதேவேளை கல்பிட்டியிலுள்ள இப்பான்தீவில் மீன்பிடி சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதேவேளை பாசிக்குடா விடுதி அபிவிருத்தி செயற்திட்டம் தொடரப்பட்டதுடன் 2014 காலப்பகுதியில் செயற்திட்டத்தின் கீழ் 08 விடுதிகள் அவற்றின் நடவடிக்கைகளை ஆரம்பித்தன.

**ஆண்டு காலப்பகுதியில் சுற்றுலா ஊக்குவிப்பு முக்கியத்துவம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மூலம் காட்டப்பட்டுள்ளது.** வியாபாரத் தொடர்புகளை விருத்தி செய்வதற்கும் அவர்களின் தற்போதைய வர்த்தகத் தொடர்புகளை வலுப்படுத்துவதற்கும் உள்ளூர் பயண கைத்தொழிலுக்கான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வதற்காக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் 30 பயணச் சந்தைகளில் பங்கு கொண்டது. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம், யப்பானில் முக்கிய எட்டு சுற்றுலா உற்பத்திகள் என்ற தொனிப்பொருளின் கீழ் நடத்தப்பட்ட பயணம் மற்றும் சுற்றுலா சந்தையிலும் நாட்டின் பண்டைய பெருமைகளைக் காட்சிப்படுத்திய பன்னாட்டு பிரெஞ்சு பயணச் சந்தையிலும் பங்குபற்றியது. "சிறிலங்கா சைன்ஸ் இன் சங்காய்" என்னும் பெயரில் பாரிய இணைந்த ஊக்குவிப்பு பிரசாரமானது சங்காய், சீனாவில் நடைபெற்றதுடன் சீனா சுற்றுலாப் பயணிகளையும் வர்த்தகப் பங்காளர்களையும் கவர்வதற்காக சுற்றுலா மற்றும் வர்த்தக ஊக்குவிப்பு வியாபார அரங்கம் போன்றன ஆரம்பிக்கப்பட்டன. அதேவேளை, இலங்கைக்கும்

வரைபடம் 5.8 சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்



சீனாவிலுள்ள சொங்சன் நகரத்துக்குமிடையே நட்பு ரீதியான பரிமாற்றல்கள் மற்றும் ஒத்துழைப்புக்கள் மீதான சுற்றுலாத்துறை ஊக்குவிப்புகளின் முக்கியத்துவத்தினை அடையாளம் கண்டு இரண்டு நாடுகளுக்கிடையில் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு முயற்சிகள் மீது புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் 2014இல் பாரிய உலக மேம்பாட்டு பிரசாரத்தை ஆரம்பித்தது. இப்பிரசாரத்தின் ஒரு பகுதியாக ஐக்கிய இராச்சியம், பிரான்சு, ஜேர்மனி, கொரியா மற்றும் யப்பான் போன்ற முக்கிய உலக நாடுகளில் இலங்கையின் முக்கிய சுற்றுலாக் கவர்ச்சிகள் 1200 மோட்டார் வாகனங்களில் காட்சிப்படுத்தப்பட்டது. 9 மாதங்களாக சீனாவின் முக்கிய நான்கு நகரங்களில் 200 பேருந்து உரிமையாளர்களினால் விளம்பரப் பிரச்சாரங்களைக் கொண்ட பேருந்து ஒழுங்கமைக்கப்பட்டது. அதேவேளை, 2014 காலப்பகுதியில் இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் ஒன்பது நாடுகளிலிருந்து 124 ஊடகவியலாளர்களை வழங்கியது. மேலும், இலங்கையருக்கும் உலகிலுள்ள பயணிகளுக்கும் கொழும்பிலுள்ள முக்கிய இடங்களை கண்டுகளிப்பதற்காக திறந்த ஊர்திகளில் நகர்ப்புற பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை சுற்றுலா கைத்தொழில் சாதகமான அபிவிருத்திகளின் தாக்கங்களின் பிரதிபலிப்பாக இலங்கை 2014 சனவரியில் சீனா பயணம் மற்றும் பொழுதுபோக்கு சஞ்சிகையினால் நடாத்தப்பட்ட வருடாந்த பயண விருது வழங்கல் வைபவத்தில் “சிறந்த பயண முதலிடமாக” அடையாளம் காணப்பட்டதுடன் வோர்ப்ஸ் சஞ்சிகை 2015இல் பார்வையிட வேண்டிய உலகின் மிகச் சிறந்த 10 சிறப்பான நாடுகளுக்குள் இலங்கை பட்டியலிடப்பட்டிருந்தது.

**2016ஆம் ஆண்டளவில் 2.5 மில்லியன் என்ற சுற்றுலாப் பயணிகளின் வருகை என்ற இலக்கை அடைந்து கொள்வதற்கு 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் ஆண்டுாந்தம் ஏறத்தாழ 28 சதவீத வளர்ச்சி தேவைப்படுகின்றது.** எதிர்பார்க்கப்படும் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் எண்ணிக்கைக்கு வசதியளிக்கும் பொருட்டு தற்பொழுது ஆயத்தநிலையிலுள்ள சுற்றுலாவிடுதி செயற்றிட்டங்களைக் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிறைவு செய்ய வேண்டியிருக்கும். மேலும், இது தற்போதைய பயிற்சி பெற்றவர்கள் வெளிவிடுவது கேள்வியை அடைந்து கொள்வதற்கு போதுமற்றதாகக் காணப்படுவதனால் பயிற்சிபெற்ற மனித வளங்களை இது மேலதிகமாகத் தேவைப்படுத்துகின்றது. ஆகையால், இத்துறையில் இனிவரும் ஆண்டுகளில் மனித வளங்களின் வரையறையானது முக்கிய சவாலாகக் காணப்படுவதுடன் தொடர்பான அதிகாரிகள் உடனடியாக இதனைத் தீர்க்க வேண்டியுள்ளது. உலகளாவிய சுற்றுலாக் கைத்தொழிலில் புதிய போட்டிச் சந்தைகள் தோற்றம் பெற்றுள்ளமையால் குறிப்பாக மரபுசாரா சந்தைகளில் இருந்து அதிகளவான சுற்றுலா பயணிகளைக் கவர்வதற்கு மேலதிக வழிமுறைகள் தேவைப்படுகின்றன. சுற்றுலாத் துறையானது நடுத்தரம் மற்றும் நீண்ட காலங்களில் நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு வர்த்தக அடையாளப்படுத்தலும் தந்திரோபாய மீள்நிலைப்படுத்தலும் தேவைப்படுகின்றன.

### தொலைத்தொடர்பூட்டல்கள், கணினி மற்றும் தகவல் பணிகள்

**தொலைத்தொடர்பூட்டல்கள், கணினி மற்றும் தகவல் பணிகளின் பேரிலான உட்பாய்ச்சல்கள் 2014இல் ஐ.அ.டொலர் 748 மில்லியனாக விளங்கியதுடன் 2013இனை விட 4.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.** தொலைத்தொடர்பூட்டல் பணிகள் துணைத்துறை ஐ.அ.டொலர் 120 மில்லியன் கொண்ட மொத்த உட்பாய்ச்சலுடன் 2014இல் ஒரு மிதமான வளர்ச்சியைக் காட்டியது. இறுதி சுற்றுவட்டத்தினூடான தரவு பரிமாற்றத்துக்கான வாடகைப் பெறுவனவுகளின் அதிகரிப்பு மற்றும் குரல் அழைப்புக்கான பன்னாட்டு நேரடி அழைப்புக்கள் மீதான வருவாய்களின் அதிகரிப்பு என்பவற்றால் இவ்வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 2014 காலப்பகுதியில் தொடர்ச்சியான தொழிநுட்ப புத்தாக்கதுடனான தொலைத்தொடர்பூட்டல் பணிகளின் விரைந்த விரிவாக்கத்தினால் அகலப்பட்டை இணைய இணைப்புக்களின் பாவனை, செயற்கைக் கோள் மற்றும் கம்பியூடான தொலைக்காட்சி பணிகள் என்பன முன்னேற்றமடைந்தன. இது இலங்கையின் இரண்டு தொழிற்பாட்டாளர்கள் நான்காவது தலைமுறை நீண்டகால பரிணாம பணியினை ஏற்கனவே மேற்கொண்டதுடன் இலங்கையின் தொலைத்தொடர்பூட்டல் தொழில்துறை இப்பிராந்தியத்திலுள்ள அயல் நாடுகளுடன் ஒப்பிடும் போது அதிநவீன தொழில்நுட்பத்தை பின்பற்றுதல் அவதானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை தொலைத்தொடர்பூட்டல் பணிகளின் பேரிலான அதிகரித்த வெளிப்பாய்ச்சல்களின் விளைவால், பன்னாட்டு நேரடி அழைப்புகளுக்கான செல்லிட மற்றும் நிலையான இணைப்பு தொழிற்பாட்டாளர்களால் வழங்கப்பட்ட குறைந்த அழைப்பு வீதம் பன்னாட்டு நேரடி அழைப்புக்களின் உயர் பாவனையை ஊக்குவித்துள்ளது.

**கணினிகள் மற்றும் தகவல் பணிகள் துணைத்துறை 2014இல் ஒரு திருப்திகரமான முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.** கணினி மற்றும் தகவல் பணிகளிலிருந்தான வருவாய்கள் 2013இல் ஐ.அ.டொலர் 604 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ஐ.அ.டொலர் 628 மில்லியனுக்கு 3.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இது வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வெளியிலிருந்து அறிவினைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணிகளிலிருந்தான வருவாய்களின் ஒரு அதிகரிப்பின் மூலம்

பிரதானமாக உந்தப்பட்டது. இவை வருங்காலங்களில் உயர்ந்த வளர்ச்சியின் மூல துறைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. 2014இல் அங்கீகாரம் பெற்றுள்ள இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்துடனான வியாபாரச் செயன்முறை முகாமைத்துவத் துறை குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றமடைந்துள்ளது. அதேவேளை உலகளாவிய முன்னணி வெளி வழங்கல் நாடுகளை அடையாளப்படுத்தும் ஏரி கார்னர் உலகப் பணிகள் நிலைச் சுட்டெண் 2014இன்படி இலங்கை, 2013 உடன் ஒப்பிடுகையில் 5 இடங்களால் முன்னோக்கி நகர்ந்து 16ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, கார்னர் தரப்படுத்தலில் இலங்கை கரைகடந்த பணிகளுக்கான உயர்ந்த 30 நாடுகளுக்கு இடையே காணப்பட்டுள்ளது. இலத்திரனியல் அரச முன்னெடுப்புக்களின் நாட்டுக்கான தொடர்ச்சியான அபிவிருத்திகளுக்காக 2014இல் ஐக்கிய நாடுகளால் தெற்காசியாவின் முதலாவது நாடாகவும் இலங்கை தரப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் இலத்திரனியல் அரச அளவீடு 192 நாடுகளுக்கு இடையே இலங்கை 2014இல் 41 இடங்கள் முன்னோக்கி நகர்ந்து 74 வது இடத்தை அடைந்தமையை வெளிப்படுத்தியுள்ளது. அதேவேளை கணினி மற்றும் தகவல் பணிகளின் உட்கட்டமைப்பு வசதிகளில் மேலும் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்திகளில் உயர்ந்த நிபுணத்துவத்தை உருவாக்கி அவற்றுடன் இசைந்துசெல்லும் விதத்தில் “கம்பஸ் நேரடி இணைப்பு” என அழைக்கப்படும் அதேநேர வலையமைப்பு ஒன்றினை மென்பொருள் மற்றும் பணிகள் கம்பனியின் இலங்கை சம்மேளனம் நிறுவியுள்ளது.

### 5.4.2 முதலாந்தர வருமானம்

**2014இல் முதலாந்தர வருமானக் கணக்கு பற்றாக்குறை சிறிதளவால் அதிகரித்தமைக்கு வங்கித்தொழில் துறையினால் வழங்கப்பட்ட முறிகள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீதான உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகளே முக்கிய காரணங்களாகும்.** 2014 ஆண்டுக் காலப்பகுதியில் முதலாந்தர வருமானக் கணக்கு பற்றாக்குறை 2013இன் ஐ.அ.டொலர் 1,751 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,839 மில்லியனாக விரிவடைந்தது. 2014இல் முதலாந்தர வருமானக் கணக்குகள் மீதான உட்பாய்ச்சல்கள் அதிகரித்தமைக்கு நேரடி முதலீடுகள் மீது பெற்றுக்கொள்ளப்பட்ட பங்குலாபம் மற்றும் முதலீடு செய்யப்பட்ட ஒதுக்குச் சொத்துக்கள் மீது உழைக்கப்பட்ட வருமானம் என்பன அதிகரித்தவேளையில் 2014இல் ஊழியர்களுக்கான நட்ட ஈட்டின் பேரிலான உட்பாய்ச்சல்கள் சிறிதளவால் அதிகரித்துள்ளமையே முக்கிய காரணமாகும். இதன் விளைவாக முதலாந்தர வருமானக் கணக்குகள் மீதான உட்பாய்ச்சல்கள் 2013இன் ஐ.அ.டொலர் 132 மில்லியனில் இருந்து 2014இல் ஐ.அ.டொலர் 153 மில்லியனுக்கு அதிகரித்தது.

**2014இல் முதலாந்தரக் கணக்குகளிருந்தான வெளிப்பாய்ச்சல்கள் அதிகரித்தமைக்கு படுகடன் பிணையங்கள் மீதான உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகளே முக்கிய காரணமாகும்.** 2013இல் ஐ.அ.டொலர் 1,883 மில்லியன் வெளிப்பாய்ச்சலைப் பதிவு செய்திருந்த முதலாந்தர வருமானக் கணக்கு 2014இல் ஐ.அ.டொலர் 1992 மில்லியன் வெளிப்பாய்ச்சல்களை பதிவு செய்தது. மொத்த வெளிப்பாச்சல்களில் வங்கித்தொழில் துறைகளால் வழங்கப்பட்ட முறிகள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவு 2014இல் முறையே ஐ.அ.டொலர் 137 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 264 மில்லியனாகக் காணப்பட்டன. 2014இல் அரசினால் பெறப்பட்ட கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் சிறிதளவால் அதிகரித்துள்ளதும் ஆண்டுக் காலப்பகுதியல் ஐ.அ. டொலர் 69 மில்லியன் பெறுமதியான பங்குரிமை மூலதன சொத்துப் பட்டியல் மீதான உயர்ந்த பங்குலாப கொடுப்பனவுகளும் முதலாந்தர வருமானத்தில் இருந்தான உயர்ந்த வெளிப்பாய்ச்சல்களுக்குப் பங்களிப்புச் செய்தன. எனினும், 2014இல் நேரடி முதலீட்டின் மீது பிடித்த வைக்கப்பட்டுள்ள வருவாய்களின் மீள்முதலீடு மற்றும் பங்குலாபக் கொடுப்பனவுகள் 2013இன் ஐ.அ.டொலர் 737 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 698 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தவேளையில் ஆண்டு காலப்பகுதியில் அரச கூட்டுத்தானங்கள் மற்றும் தனியார் துறைகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 78 மில்லியனுக்கு 23.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. வெளிநின்ற கடன் நிலுவைகளின் வீழ்ச்சியுடன் ப. நா. நிதிய துணைநில் ஒழுங்குகள் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான வட்டிக் கொடுப்பனவுகள் 2014இல் ஐ.அ.டொலர் 20 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளையில் வெளிநின்ற அரச பிணையங்களுக்கான நறுக்கு கொடுப்பனவுகள் பெருமளவில் மாற்றம் எதுவுமின்றி காணப்பட்டன.

### 5.4.3 இரண்டாந்தர வருமானம்

**தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் பொது அரச மாற்றல்களை உள்ளடக்கிய இரண்டாந்தர வருமானக் கணக்கு 2014இல் சாதகமான வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது.** 2014இல் இரண்டாந்தர வருமானக் கணக்கின் உட்பாய்ச்சல்கள் 9.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 7,046 மில்லியன் பெறுமதியினைக் கொண்டிருந்தன. இது முக்கியமாக இரண்டாந்தர வருமானக் கணக்கின் உட்பாய்ச்சல்களில் ஏறத்தாழ 99 சதவீதத்திற்கு மேலாக வகைகூறிய தொழிலாளர் பணவனுப்பல்களினாலேயே ஏற்பட்டது. 2014இல் தொழிலாளர் பணவனுப்பல்களின் வடிவிலான உட்பாய்ச்சல்கள் 2013ன் ஐ.அ.டொலர் 6,407 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 7,018 மில்லியனாக 9.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.

2014 ஆண்டுக் காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களின் வளர்ச்சி 5.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து நிபுணத்துவம்சார் மற்றும் தேர்ச்சி வகைகளின் கீழ் புலம்பெயர்ந்தவர்களின் தொடர்ச்சியான அதிகரிப்பினால் பிரதிபலிக்கின்றது. அதேவேளை, 2014இல் பயிற்றப்படாத வகையினரின் கீழான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் 0.1 சதவீத சிறிதளவான வளர்ச்சியைப் பதிவு செய்து மாறாது காணப்பட்டனர். இதன்படி, 2014இல் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காக புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 2013இன் 293,218 இலிருந்து இன்று 300,413 இற்கு உயர்ந்து 2.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.


## 5.5 நடைமுறைக் கணக்கு மீதி

**ஆண்டின் இறுதிக்காலாண்டுப் பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை மோசமடைந்தமைக்கிடையிலும் 2014இல் நடைமுறைக் கணக்கு மீதி மேம்பட்டது.** 2014இன் முன்னரைப் பகுதியில் மேம்பாடடைந்த வர்த்தக நிலுவை ஏற்றுமதி வீழ்ச்சி மற்றும் இறக்குமதி அதிகரிப்பு என்பவற்றுக்கு மத்தியிலும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் மோசமாகப் பாதிக்கப்பட்டமையின் விளைவாக 2014இல் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைய காரணமானது எனினும் 2013இன் ஐ.அ.டொலர் 2,541 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2014இல் நடைமுறைக் கணக்கு ஐ.அ.டொலர் 2,018 மில்லியன் குறைந்த பற்றாக்குறையினைக் கொண்டிருந்தது. எனினும், தொழிலாளர் பணவனுப்பல்களின் உயர்ந்த உட்பாய்ச்சல் மற்றும் பணிகள் கணக்கின் மிகை என்பவற்றின் மூலம் வர்த்தக மற்றும் வருமான கணக்கு பற்றாக்குறையினைப் பகுதியளவில் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. மேலும் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை மொ. உ. உற்பத்தியின் சதவீதமான 2013இன் 3.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 2.7 சதவீதமாக ஒடுங்கியது.

## 5.6 மூலதனக் கணக்கு மீதி

**2014இல் மூலதனக் கணக்கு நிலுவை வீழ்ச்சியடைந்தமைக்கு மூலதன மாற்றல்களின் குறைந்தளவிலான உடபாய்ச்சல்களே காரணமாகும்.** ஆண்டு காலத்தில் மூலதனக் கணக்குகளின் தேறிய உட்பாய்ச்சல் 2013இன் ஐ.அ.டொலர் 71 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 58 மில்லியனுக்கு குறைவடைந்தது. இதற்கு, கூட்டுத்தாபனங்கள் மற்றும் வீட்டுத்துறைக்கு வழங்கப்படும் மூலதன மாற்றல்கள் 2013இன் ஐ.அ.டொலர் 51 மில்லியனில் இருந்து 2014இல் ஐ.அ.டொலர் 21 மில்லியனுக்குக் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளை, 2014இல் அரசாங்கத்தினால் பெற்றுக்கொண்ட மூலதனக் கொடைகள் 2013இன் ஐ.அ.டொலர் 39 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 52 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது.

வரைபடம் 5.9 நிதியியல் கணக்குகளுக்கான உட்பாய்ச்சல்கள்




## 5.7 நிதியியல் கணக்கு

**2014 காலப்பகுதியில் நிதியியல் கணக்கு தொடர்ந்தும் தேறிய உடபாய்ச்சலினைப் பதிவு செய்தது.** இது ஆண்டுக் காலப்பகுதியில் பொறுப்புக்கள் ஐ.அ. டொலர் 4,239 மில்லியனுக்கு உறப்பட்டமையின் மூலம் பிரதிபலிக்கின்ற வேளையில் இது நிதியியல் சொத்துக்களின் தேறிய உள்ளீர்ப்புக்களான ஐ.அ.டொலர் 2,303 மில்லியன் பெறுமதியினை விஞ்சுகிறது. 2014இல் நிதியியல் கணக்கின் முக்கியமான உட்பாய்ச்சல்களாக முறையே ஐ.அ. டொலர் 1.5 பில்லியன் கொண்ட ஆறாவது மற்றும் ஏழாவது நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கல்களிலிருந்தான பெறுகைகள் விளங்கின. நிதியியல் கணக்கானது வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும் கம்பனிகளிற்கான கடன் உட்பாய்ச்சல்கள் மற்றும் தனியார் துறைக்கான நேரடி முதலீட்டுடன் தொடர்பான உட்பாய்ச்சல்கள் மற்றும் படுகடன்கள் என்பவற்றினால் உதவப்பட்ட வேளையில் அரசாங்கம் மிதமான மட்டங்களில் வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்களினைப் பெற்றுக்கொண்டது. தனியார் துறைக்கான உட்பாய்ச்சல்கள் சிறிலங்கன் எயார்லைன்சினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறி மற்றும் வங்கித் துறை மற்றும் முதலீட்டுச்சபை கம்பனிகளிற்கான நேரடி முதலீடுகள் என்பவற்றின் மூலம் கிடைக்கப்பெற்றவையாகும். 2014இன் பிற்பகுதியில் தோற்றம் பெற்றுவரும் சந்தைகளிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்கள், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் அரச பிணையங்கள் சந்தையின் வெளிநாட்டு முதலீடுகளிலான செயலாற்றத்தில் குறைந்ததன்மையொன்று அவதானிக்கப்பட்டது. அதேவேளை, நிதியியல் சொத்துக்களின் தேறிய கையேற்பு அதிகரித்தமைக்கு ஒதுக்குச் சொத்துக்களின் கொடுக்கல்வாங்கல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் வங்கித்தொழில் துறையினரால் கையேற்பு செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்களின் மிதமான அதிகரிப்பு என்பனவே முக்கிய காரணங்களாக அமைந்தன. இந்நிகழ்வுகள்

நிதியியல் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2013இன் ஐ.அ.டொலர் 3,064 உடன் ஒப்பிடுகையில் 2014இல் ஐ.அ.டொலர் 1,936 இற்கு மிதமான அதிகரிக்க வழிவகுத்தது.

அட்டவணை 5.8 அ

**நிதியியல் கணக்கு (பீ.பி.எம்.6 வெளிப்படுத்துகை வடிவமைப்பு)**

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2013 (அ) நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப்படுத்துகை | 2013 (அ) தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் | 2014 (ஆ) நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப்படுத்துகை | 2014 (ஆ) தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| **நிதியியல் கணக்கு** | **986** | **4,049** | **2,303** | **4,239** |
| **நேரடி முதலீடு** | **65** | **933** | **67** | **944** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதி பங்குகள் | 65 | 410 | 67 | 518 |
| வருமானத்தின் மீள் முதலீடு தவிர்ந்த பங்கு மூலதனம் | 65 | 60 | 67 | 137 |
| நேரடி முதலீட்டு முயற்சிகளில் நேரடி முதலீட்டாளர் | 65 | 60 | 67 | 137 |
| பீஓஐ கம்பனிகள் | - | 16 | - | 10 |
| பீஓஐ உடன் பதியப்படாத கம்பனிகள் | - | 44 | - | 62 |
| ஏனைய கம்பனிகள் | - | -0.5 | - | 65 |
| வருமானத்தின் மீள் முதலீடு | - | 350 | - | 381 |
| படுகடன் கருவிகள் | - | 522 | - | 427 |
| நேரடி முதலீட்டு முயற்சிகளில் நேரடி முதலீட்டாளர் | - | 522 | - | 427 |
| பீஓஐ கம்பனிகள் | - | 517 | - | 426 |
| பங்குதாரர் முற்பணங்கள் | - | 370 | - | 208 |
| கம்பனிகளுக்கிடையிலான பொறுப்புக்கள் | - | 150 | - | 224 |
| படுகடன் மீள்கொடுப்பனவுகள் | - | -3 | - | -6 |
| பீஓஐ உடன் பதியப்படாத கம்பனிகள் | - | 5 | - | 1 |
| **சொத்துப்பட்டியல் முதலீடு** | **-** | **2,068** | **-** | **1,996** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதி பங்குகள் | - | 226 | - | 184 |
| சிஎஸ்ஈ கம்பனிகள் | - | 226 | - | 184 |
| படுகடன் கருவிகள் | - | 1,843 | - | 1,812 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | 1,350 | - | 250 |
| நீண்ட காலம் | - | 1,350 | - | 250 |
| மத்திய அரசாங்கம் | - | 493 | - | 1,387 |
| குறுங்காலம் (திறைசேரி உண்டியல்கள்) | - | -80 | - | -173 |
| நீண்டகாலம் | - | 572 | - | 1,560 |
| திறைசேரி முறிகள் | - | 572 | - | 60 |
| நாட்டுக்கான முறிகள் | - | - | - | 1,500 |
| ஏனைய துறைகள் | - | - | - | 175 |
| நீண்ட காலம் | - | - | - | 175 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு** | | | | |
| நாணயமும் வைப்புக்களும் | **-191** | **1,048** | **688** | **1,298** |
| மத்திய வங்கி | -459 | 108 | 276 | -292 |
| குறுங்காலம் | - | -199 | - | 1 |
| நீண்ட காலம் | - | 1 | - | 1 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | -200 | - | - |
| குறுங்காலம் | -459 | 307 | 276 | -293 |
| நீண்ட காலம் | -221 | 307 | 142 | -293 |
| | -238 | - | 134 | - |

பக்கம் 136 இல் தொடர்கிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாபகார்த்த விடயங்கள் | | | | |
| **சீஎஸ்ஈ இற்கான மொத்த தேறிய உட்பாய்ச்சல்கள்** | | **270** | | **163** |
| நேரடி முதலீடுகள் | | 44 | | -22 |
| சொத்துப்பட்டியல் முதலீடுகள் | | 226 | | 184 |
| **திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் மீதான தேறிய முதலீடுகள் (நாட்டுக்கான முறிகள் நீங்கலாக)** | | **493** | | **-113** |
| வெளிநாட்டு கொள்வனவுகள் | | 2,434 | | 1,775 |
| வெளிநாட்டு விற்பனைகள் | | 1,941 | | 1,889 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### 5.7.1 நேரடி முதலீடுகள்

**2014இல் முதலீட்டு நோக்கத்திற்கான முதலீட்டுச் சபை கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு மிதமான முன்னேற்றத்தினைக் காட்டியுள்ளது.** 2014இல் முதலீட்டு சபை கம்பனிகளின் கடன்பாடுகள் நீங்கலான மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2013இன் ஐ.அ.டொலர் 1,437 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,685 மில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை முதலீட்டுச் சபை கம்பனிகளுக்கான கடன்பாடுகள் நீங்கலான நேரடி முதலீடு 2013இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 933 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ஐ.அ.டொலர் 944 ஆக அதிகரித்துள்ளது. மொத்த நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் முதலீட்டுச் சபையுடன் பதிவு செய்யப்படாமல் கொழும்பு பங்கு பரிவர்த்தனையால் பட்டியலிடப்பட்ட கம்பனிகளால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 100 மில்லியன் மற்றும் முதலீட்டுச் சபை கம்பனிகளால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 782 மில்லியனான நேரடி முதலீடுகளை உள்ளடக்கியுள்ளது. முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 208 மில்லியன் கொண்ட மூலதனம் மற்றும் பங்குடமையாளர்களின் முற்பணங்களையும், ஐ.அ.டொலர் 224 மில்லியன் கொண்ட உள்ளக கம்பனி கடன்பாடுகளையும் ஐ.அ.டொலர் 356 மில்லியன் கொண்ட பிடித்து வைக்கப்பட்ட வருவாய்களின் மீள்முதலீடுகளையும் உள்ளடக்கியுள்ளது. ஒப்பீட்டு ரீதியில் குறைந்த செலவுகளைக் கொண்ட வெளிநாட்டு கடன்பாடுகளின் கிடைப்பனவுத் தன்மையின் காரணமாக கம்பனிகளால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட கால வெளிநாட்டு நிதியிடலில் அதிகரித்த போக்கினை அவதானிக்க முடிந்தது. 2014இல் சிறிலங்கன் எயார்லையின்சினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 175 மில்லியன் கொண்ட பன்னாட்டு முறிகள் உட்பட ஆண்டுக் காலப்பகுதியில் நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளில் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 741 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன்களில் இது பிரதிபலிக்கப்பட்டது.

**நேரடி முதலீட்டுடன் தொடர்புடைய உட்பாய்ச்சல்களின் பெரியளவிலான பங்கொன்று உட்கட்டமைப்பு மற்றும் பணிகள் துறையினால் கவரப்பட்டன.** உட்கட்டமைப்பு மற்றும் பணிகள் துறைக்கான நேரடி முதலீட்டுடன் தொடர்புடைய உட்பாய்ச்சல்களின் பங்குமுறையே 42.2 சதவீதத்திற்கும் 36.8 சதவீதத்திற்கும் வகைகூறிய வேளையில் தயாரிப்புத் துறை 20.7 சதவீதத்தினைக் கவர்ந்தது. உட்கட்டமைப்புக்கான நேரடி முதலீட்டுடன் தொடர்புடைய உட்பாய்ச்சல்கள் வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி, துறைமுகங்கள் மற்றும் கொள்கலன் முனைக்கோடிகள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துணைத்துறை என்பன முக்கியமாகக் காணப்பட்டது. பணிகள் துறையின் உட்பாய்ச்சல்களின் வான் போக்குவரத்து, சுற்றுலாவிடுதி மற்றும் உணவகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப துறைத் துறைகளுக்கானவையாக இருந்தன. வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் 2013இல் ஐ.அ.டொலர் 65 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 67 மில்லியனாகக் காணப்பட்டன.

### 5.7.2 சொத்துப்பட்டியல் முதலீடுகள்

#### பங்குரிமை மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள்

**2014இல் கொழும்பு பங்கு பரிவர்த்தணையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளிலுள்ள நேரடி முதலீடு தவிர வெளிநாட்டு முதலீடுகளை உள்ளடக்கிய பங்குரிமை மூலதனம் முதலீட்டு நிதியப் பங்குகள் மீதான உட்பாய்ச்சல்கள் மிதமான நிலையில் காணப்பட்டது.** ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் வங்கியினால் கணியம்சார் இலகுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் அளவு குறைக்கப்பட்டமைக்கு மத்தியிலும் தோற்றம்பெற்றுவரும் சந்தையில் நிலவும் குறைவடைந்து முதலீட்டாளர்களின் மனோபாவத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் கொழும்பு பங்கு பரிவர்த்தணையின் சொத்துப் பட்டியல் முதலீடு தேய்வடைந்தது. இதன்படி, 2014இல் கொழும்பு பங்கு பரிவர்த்தணையின் தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2013இன் ஐ.அ.டொலர் 226 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுமிடத்து 184 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 184 மில்லியனைப் பதிவு செய்தது. இத்தகைய உட்பாய்ச்சல்கள் 2014இன் முதலாந்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் ஐ.அ.டொலர் 4 மில்லியனையும், இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்களில் ஐ.அ.டொலர் 180 மில்லியனையும் உள்ளடக்கியுள்ளது.

#### படுகடன் பிணையங்கள்

**2014இல் நிதியியல் கணக்கில் படுகடன் பிணையங்களுக்கான முக்கிய உட்பாய்ச்சல்களாக அரசாங்கத்தின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் குறிப்பிடப்படுகிறது.** இலங்கை 2014 சனவரி மற்றும் ஏப்பிறலில் முறையே ஐ.அ.டொலர் 1 பில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 500 மில்லியன் தொகையுள்ள இரு பன்னாட்டு முறிகளை வழங்கியுள்ளது. முறிகள் வழங்கப்பட்ட காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க திறைசேரி முறிகளுக்கான அடிப்படை அளவுக் குறியீடு அதிகரித்தமை மற்றும் உலகளாவிய மூலதனச் சந்தையின் தளம்பல்கள் அதிகரித்தமைக்கிடையிலும் இவ்வைந்து ஆண்டு முறிகள் முறையே ஆண்டுக்கு 6.00 சதவீதம் 5.125 சதவீதம் போன்ற போட்டிகரமான விளைவுகளில் வழங்கப்பட்டது. அரச திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளில் 2013 இன் ஐ.அ.டொலர் 493 மில்லியன் கொண்ட ஒரு தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுமிடத்து 2014இல் ஐ.அ.டொலர் 113 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலில் பிரதிபலிக்கப்பட்டவாறு அரச பிணையங்கள் சந்தையில் தோற்றம்பெற்றுவரும் மூலதனச் சந்தையில் குறைவடைந்த முதலீட்டாளர்களின் மனோபாவம் குறைவடைந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. கம்பனித் துறையினால் வழங்கப்பட்ட படுகடன் பிணையங்களின் கீழ், 2014 யூனில் சிறிலங்கன் எயார்லைன்ஸினால் ஆண்டிற்கு 5.3 சதவீதத்தினைக் கொண்ட ஐ.அ. டொலர் 175 மில்லியன் பெறுமதியான ஐந்து ஆண்டு பன்னாட்டு முறி வழங்கப்பட்டது. 2014 செத்தெம்பரில் தேசிய சேமிப்பு வங்கி ஆண்டுக்கு 5.15 சதவீதம் கொண்ட விளைவில் ஐ.அ.டொலர் 250 மில்லியன் தொகையுடைய ஐந்து ஆண்டு முறியொன்றினை வழங்கியது.

### 5.7.3 ஏனைய முதலீடுகள்

#### நாணயம் மற்றும் வைப்புக்கள்

**2014இல் நாணயம் மற்றும் வைப்புக்களுடன் தொடர்புடைய சொத்துக்கள் அதிகரித்த வேளையில் பொறுப்புக்களுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்கள் வீழ்ச்சியடைந்தன.** இதன்படி, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் வசமிருந்த நாணயம் மற்றும் வைப்புக்கள் என்பவற்றின் தேறிய கையேற்புக்களுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்கள் 2013 இன் ஐ.அ.டொலர் 459 மில்லியன் கொண்ட தேறிய வீழ்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 2014இல் ஐ.அ.டொலர் 276 மில்லியன் தேறிய அதிகரிப்பைப் பதிவு செய்தது. மேலும், நாணயம் மற்றும் வைப்புகளின் தேறிய நிகழத்தக்க பொறுப்புகளுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்கள் ஐ.அ.டொலர் 292 மில்லியன் வீழ்ச்சியினைப் பதிவு செய்தமைக்கு 2014இல் வைப்புகளையேற்கும் கூட்டுத்தாபனங்களின் ஐ.அ.டொலர் 293 மில்லியன் வைப்புப் பொறுப்புக்களின் அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

#### கடன்கள்

**2014இல் நிதியியல் கணக்கு தொடர்ச்சியான வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்களைப் பெற்றது.** தேறிய அடிப்படையில் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களுக்கான கடன் உடபாய்ச்சல்கள், ஆண்டுக்காலத்தில் அதிகரித்த வேளையில் அரசு மற்றும் தனியார் துறை அரசிற்கு சொந்தமான நிறுவனங்கள் என்பவற்றுக்கான கடன்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. அதன் விளைவாக 2014 ஆண்டுக்காலப்பகுதியில் வெளிநாட்டுக் கடன் வடிவிலான மொத்தத் தேறிய உட்பாய்ச்சல்கள் 2013இன் ஐ.அ.டொலர் 1,118 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து ஐ.அ.டொலர் 1,847 மில்லியனாகக் காணப்பட்டது.

**2014இல் அரசிற்கான வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் வீழ்ச்சியடைந்திருந்தன.** 2014இன் அரசிற்கான மொத்த கடன் உட்பாய்ச்சல்கள் 2013இன் ஐ.அ.டொலர் 1,677 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து ஐ.அ.டொலர் 1,439 மில்லியனாகக் காணப்பட்டது. அதேவேளை, அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்களின் மீள் செலுத்தல்கள் 2013இன் ஐ.அ.டொலர் 836 மில்லியனுடன்

ஒப்பிடுமிடத்து 2014இல் ஐ.அ.டொலர் 793 மில்லியன் பெறுமதியாக காணப்பட்டது. அதன் விளைவாக, 2014இல் அரசாங்கத்திற்கான தேறிய வெளிநாட்டு கடன் உட்பாய்ச்சல்கள் 2013இன் ஐ.அ.டொலர் 841 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து ஐ.அ.டொலர் 646 மில்லியன் பெறுமதியாக காணப்பட்டது. 2014இல் அரசாங்கத்திற்கான முக்கிய வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சலானது முன்னுரிமை வீதிகள் செயற்திட்ட நிதியின் ஐ.அ.டொலர் 292 மில்லியனை உள்ளடக்கியிருந்தது. அதேவேளை, ஓமந்தை - பளை, மடு - தலைமன்னார் மற்றும் மதவாச்சி, மாத்தளை - கதிர்காமம் புகையிரத விரிவாக்கல் செயற்திட்டத்தின் மாத்தளை - பெலியத்தை பிரிவு, கொழும்பு நகர போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டம், ருஷியாவின் தொடர் கொடுகடன், வடக்கு புகையிரத சேவைகளின் மீள்நிலைப்படுத்தல், பணிகள் கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் குருநாகல் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் செயற்திட்டம் என்பற்றக்கான உட்பாய்ச்சல்கள் பதிவு செய்யப்பட்டன. அரசாங்கத்திற்கான மொத்த வெளிநின்ற அரச கடன்களின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் வெளிநின்ற கடன்களில், 2014 இறுதியிலுள்ளவாறு 53.1 சதவீதம் சலுகை நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் பெறப்பட்டன.

**2014இல் வைப்புக்களை ஏற்கும் கம்பனிகளின் தேறிய வெளிநாட்டுக் கடன்பாடுகள் கணிசமானளவில் அதிகரித்த வேளையில் மத்திய வங்கி பன்னாட்டு நாணய நிதியத்திற்கான துணைநில் ஒழுங்குகள் வசதிக்கான மீள்செலுத்துகையினைத் தொடர்ந்தும் செலுத்தியது.** 2014இல் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் என்பனவற்றை உள்ளடக்கிய வைப்புக்களை ஏற்கும் கம்பனிகளிற்கான தேறிய வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் 2013இன் ஐ.அ.டொலர் 124 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,358 மில்லியனாகக் காணப்பட்டன. 2014இல் வைப்புக்களை ஏற்கும் கம்பனிகளிற்கான தேறிய குறுங்கால கடன் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 1,156 மில்லியனாகக் காணப்பட்ட வேளையில் வைப்புக்களை ஏற்கும் கம்பனிகளிற்கான தேறிய நீண்ட கால கடன் உட்பாய்ச்சல்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்களிற்கான ஐ.அ.டொலர் 239 மில்லியன் தேறிய உட்பாய்ச்சல் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளிலிருந்தான ஐ.அ.டொலர் 37 மில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சல்கள் என்பனவற்றினை உள்ளடக்கியுள்ளது. 2014இல் பன்னாட்டு நாணய நிதியத்திற்கான துணைநில் ஒழுங்குகள் வசதி இலங்கை மத்திய வங்கியின் மீள்கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 719 மில்லியனாகக் காணப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியத்திற்கான துணைநில் ஒழுங்குகள் வசதி 2009 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 2.6 பில்லியன் 2017 யூலையளவில் செலுத்துவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.8 ஆ**
**நிதியியல் கணக்கு (பீ.பி.எம்.6 வெளிப்படுத்துகை வடிவமைப்பு)**

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2013 (அ) | | 2014 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப் படுத்துகை | தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் | நிதியியல் சொத்துக் களில் தேறிய கைப் படுத்துகை | தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் |
| ஏனைய முதலீடு (பக்கம் 134 இலிருந்து தொடர்கிறது) | | | | |
| **கடன்கள்** | - | 1,118 | - | 1,847 |
| மத்திய வங்கி | - | -453 | - | -719 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | - | -453 | - | -719 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | 124 | - | 1,358 |
| குறுங்காலம் | - | -124 | - | 1,156 |
| நீண்ட காலம் | - | 248 | - | 202 |
| பொது அரசாங்கம் | - | 841 | - | 646 |
| நீண்ட காலம் | - | 841 | - | 646 |
| ஏனைய துறைகள் (இ) | - | 605 | - | 563 |
| நீண்ட காலம் | - | 605 | - | 563 |
| **வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள்** | 225 | -235 | 98 | -407 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 15 | - | 8 | - |
| குறுங்காலம் | 15 | - | 8 | - |
| ஏனைய துறைகள் (ஈ) | 211 | -235 | 90 | -407 |
| குறுங்காலம் | 211 | -235 | 90 | -407 |
| **பெறவேண்டிய/செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள்** | 42 | 58 | 314 | 151 |
| மத்திய வங்கி | - | 58 | - | 151 |
| குறுங்காலம் (உ) | - | 58 | - | 151 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 42 | - | 314 | - |
| குறுங்காலம் | 42 | - | 314 | - |
| **சிறப்பு எடுப்பனவு உரிமைகள் (சிஎஉ)** | - | - | - | - |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **1,112** | | **1,548** | |
| நாணயவியல் தங்கம் | 351 | | 9 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 12 | | -6 | |
| பா.நா. நிதியத்தில் ஒதுக்கு நிலைமை | - | | - | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 749 | | 1,545 | |
| நாணயமும் வைப்புக்களும் | 1,297 | | 496 | |
| நாணய அதிகார சபைகள் மீதான பெறுகைகள் | 1,462 | | -1,041 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான பெறுகைகள் | -165 | | 1,538 | |
| பிணையங்கள் | -548 | | 1,049 | |
| படுகடன் பிணையங்கள் | -548 | | 1,049 | |
| நீண்ட காலம் | -548 | | 1,049 | |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **3,064** | | **1,936** | |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| **அரசாங்கத்திற்கான நீண்டகால கடன்கள் (தேறிய)** | | **841** | | **646** |
| உட்பாய்ச்சல்கள் (பகிர்ந்தளிப்புக்கள்) | | 1,677 | | 1,439 |
| மீள்கொடுப்பனவுகள் | | 836 | | 793 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் தனியார்துறை கம்பனிகளை உள்ளடக்குகின்றது
(ஈ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக கொடுகடன்களை உள்ளடக்குகின்றது.
(உ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் தேறிய கொடுக்கல்வாங்கல்கள்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**2014 ஆண்டுக் காலப்பகுதியில் தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிக்கான வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் வீழ்ச்சியடைந்தன.** 2014இன் தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான

வியாபாரத் தொழில் முயற்சிகளிற்கான கடன் உட்பாய்ச்சல்கள் 2013இல் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 1,079 மில்லியனையும் விட குறைவாக ஐ.அ.டொலர் 777 மில்லியனாகக் காணப்பட்டது. இதில், தனியார் துறை ஐ.அ.டொலர் 403 மில்லியனையும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் ஐ.அ.டொலர் 375 மில்லியனையும் பெற்றுக்கொண்டன. 2014இல் தேறிய அடிப்படையில், தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் என்பவற்றிற்கான வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் 2013இன் ஐ.அ.டொலர் 605 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 563 மில்லியனாகக் காணப்படடது. தனியார் துறைக்கான கடன்கள் முக்கியமாக தொலைத்தொடர்பூட்டல், நுண்பாக நிதி, கொள்கலன் முனைக்கோடி மற்றும் கலப்பு அபிவிருத்தித் துறைகளுக்கு வழங்கப்பட்டன. மொத்தக் கடன் உட்பாய்ச்சல்களில் தனியார் துறை கம்பனிகளினால் ஐ.அ.டொலர் 566 மில்லியனும் முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் 72.8 சதவீதமும் பெற்றுக்கொள்ளப்பட்டது. இது முக்கியமாக பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் நிலவும் போட்டித்தன்மையான வட்டி வீதங்களின் காரணமாக முதலீட்டுச் சபைக் கம்பனிகள் தொடர்பற்ற தரப்பினரிடமிருந்து வெளிநாட்டுக் கடன்களில் தங்கியிருக்கும் போக்கு அதிகரிக்கின்றமையினைப் பிரதிபலிக்கின்றது. அதேவேளை, 2014இல் அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளிற்கான கடன்கள் சிறிலங்கன் எயார்லைன்ஸிற்கான ஐ.அ.டொலர் 150 மில்லியன் அம்பாந்தோட்டை கப்பல் துறை அபிவிருத்தித் திட்டத்திற்கான ஐ.அ.டொலர் 167 மில்லியனும் புத்தளம் நிலக்கரி வலுத் திட்டத்திற்கான ஐ.அ.டொலர் 51 மில்லியனும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

**அட்டவணை 5.9 — 2014இல் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் மூலம் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்கள்**

| கடன் வழங்குநரும் செயற்றிட்டமும் | வழங்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர்கள் மில்லியன் |
|---|---|
| **அரசாங்க செயற்திட்டம் - மொத்தம்** | **1,439** |
| இதில்: | |
| **சீன அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனம்** | **292** |
| முன்னுரிமை வீதிச் செயற்திட்டங்களின் புனருத்தாபனம் மற்றும் முன்னேற்றம் | 292 |
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | **247** |
| இதில்; | |
| மோதலில் பாதிக்கப்பட்ட பிராந்தியத்திற்கான அவசர செயற்றிட்டம் | 45 |
| நிலையான வலுத்துறை ஆதரவு செயற்திட்டம் | 29 |
| தேசிய நெடுஞ்சாலை துறை செயற்றிட்டம் (மேலதிக நிதியிடல்) | 25 |
| வடக்கு வீதி இணைப்புச் செயற்றிட்டம் | 24 |
| **ஜப்பானிய அரசாங்கம்** | **240** |
| இதில்; | |
| கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டம் - கட்டம் II | 111 |
| கொழும்பு பெரும்பாக போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டம் | 32 |
| மாகாண/கிராமிய வீதி அபிவிருத்தி செயற்றிட்டம் (மத்திய மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணம் | 29 |
| மேல் கொத்மலை நீர் மின்சார செயற்றிட்டம் - கட்டம் II | 22 |
| **பன்னாட்டு அபிவிருத்தி சம்மேளனம்** | **161** |
| இதில்; | |
| வீதித்துறை உதவி செயற்றிட்டத்திற்கான இரண்டாவது மேலதிக நிதியிடல் | 33 |
| இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டம் | 27 |
| மாகாண வீதிகள் செயற்றிட்டம் | 22 |
| **சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கி** | **141** |
| இதில்; | |
| குருநாகல் பெரும்பாக நீர்வழங்கள் மற்றும் வடிவமைப்பு செயற்திட்டம் | 21 |
| புத்தளம் - மரிச்சிக்கடை - மன்னார் வீதியின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 20 |
| **இந்திய அரசாங்கம்** | **115** |
| இதில்; | |
| வடக்கு புகையிரத சேவைகளின் சீராக்கம் | 67 |
| ஓமந்தை - பளை, மடு - தலைமன்னார் மற்றும் மதவாச்சி புகையிரதப்பாதை | 32 |
| **நெதர்லாந்தின் ரபோபாங்க்** | **40** |
| இதில்; | |
| அம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலை அபிவிருத்தி | 14 |
| இலங்கையின் தேசிய குருதியேற்றல் சேவைகளை மேம்படுத்தல் | 11 |
| **கொரிய குடியரசின் அரசாங்கம்** | **20** |
| இதில்; | |
| றுகுனுபுற நீர்வழங்கல் அபிவிருத்தி செயற்றிட்டம் | 19 |
| **ஐரோப்பிய முதலீட்டு வங்கி** | **21** |
| இதில்; | |
| இலங்கையின் சிறிய நடுத்தர நிறுவனங்கள் மற்றும் பச்சை வலு உலகக் கடன் | 21 |
| **அரசிற்கு சொந்தமான வியாபார நிறுவனங்கள் - மொத்தம்** | **375** |
| ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்றிட்டம் - கட்டம் II | 167 |
| வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் எயார்லைன் | 150 |
| புத்தளம் நிலக்கர் வலுச் செயற்றிட்டம் - கட்டம் II | 51 |
| மத்தள பன்னாட்டு விமானநிலைய செயற்றிட்டம் | 7 |

மூலம்: நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்

## பெறத்தக்க/ கொடுபடத்தக்க வர்த்தகக் கொடுகடன் முற்பணங்கள் மற்றும் ஏனைய கணக்குகள்

**2014 காலப்பகுதியில் வர்த்தகக் கொடுகடன் முற்பணங்களின் பெறுவனவுகள் மற்றும் கொடுபடத்தக்கவையுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்கள் மெதுவடைந்தது.** 2014இல் தேறிய நிகழத்தக்க வர்த்த கொடுகடன் பொறுப்புக்கள் 2013இன் ஐ.அ.டொலர் 235 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ஐ.அ.டொலர் 407 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட வர்த்தகக் கொடுகடன்களே இவ்வீழ்ச்சிக்கான முக்கிய காரணமாகும். இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வர்த்தகக் கொடுகடன் வெளிநின்ற மீதியில் 90 சதவீதத்திற்கு மேல் வகைகூறியது. அதேவேளை முக்கியமாக இலங்கை ஏற்றுமதிக் கம்பனிகளால் வதிவற்றோருக்கு வழங்கப்படுகின்ற குறுங்கால கொடுகடன் வசதிகள் தொடர்பில் வர்த்தகக் கொடுகடனின் தேறிய கையேற்பு 2013இன் ஐ.அ.டொலர் 225 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 98 மில்லியனால் அதிகதரித்தது. மேலும், மத்திய வங்கியால் முகாமை செய்யப்படுகின்ற ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தினை முக்கியமாக உள்ளடக்கிய ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் 2013இன் ஐ.அ.டொலர் 58 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்புடன் ஒப்பிடுமிடத்து ஐ.அ.டொலர் 151 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்பினைப் பதிவு செய்திருந்தது. அதேவேளை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கரை கடந்த வங்கிப் பிரிவுகளுக்கான ஏனைய கணக்கு பெறுவனவுகள் 2013இன்

ஐ.அ.டொலர் 42 மில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடுமிடத்து 2014இல் ஐ.அ.டொலர் 314 மில்லியன் அதிகரிப்பினால் பதிவு செய்திருந்தது.


### 5.7.4 ஒதுக்குச் சொத்துக்கள்

**2014இல் ஒதுக்குச் சொத்துக்களுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்கள் 2014 காலப்பகுதியில் அதிகரித்தன.** அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது இலங்கை மத்திய வங்கி நிலையான வருமான பிணையங்களில் அதிகளவு முதலீடு செய்வதற்கு காரணமாகியதுடன் வதியாதோர் வைத்துள்ள வெளிநாட்டு நாணய வைப்புக்கள் அதிகரித்தன. அதன் விளைவாக 2014 காலப்பகுதியில் நிலையான வருமான பிணையங்களிலான கொடுக்கல்வாங்கல்கள் ஐ.அ.டொலர் 1,049 மில்லியனால் அதிகரித்த அதேவேளை இலங்கை மத்திய வங்கியின் வசமிருந்த நாணயம் மற்றும் வைப்புக்கள் ஐ.அ.டொலர் 496 மில்லியனால் அதிகரித்திருந்தது. பன்னாட்டுச் சந்தையில் தங்கத்தின் விலைகள் குறைவடைந்தமையின் காரணமாக இலங்கை மத்திய வங்கி தற்போதைய நாணய தங்க சொத்துப் பட்டியலைப் பேணிய அதேவேளை 2013இன் ஐ.அ.டொலர் 351 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2014 காலப்பகுதியில் தேறிய தங்க கொடுக்கல்வாங்கல்களில் ஐ.அ.டொலர் 9 மில்லியன் மாத்திரம் அவதானிக்கப்பட்டிருந்தமையால் 2014 காலப்பகுதியில் நாணய தங்கத்தின் கொடுக்கல்வாங்கல்கள் குறைவடைந்திருந்தன.

## 5.8 சென்மதி நிலுவை

**2014இல் சென்மதி நிலுவை மிகைநிலையை பதிவு செய்திருந்தது.** நடைமுறைக் கணக்கின் முன்னேற்றம் மற்றும் நிதியியல் கணக்கிற்கான கணிசமான உட்பாய்ச்சல்கள் சென்மதி நிலுவையில் 2013இன் ஐ.அ.டொலர் 985 மில்லியன் மிகை நிலையுடன் ஒப்பிடுமிடத்து 2014இல் ஐ.அ.டொலர் 1,369 மில்லியன் கொண்ட மிகைக்கு இட்டுச்சென்றிருந்தது. இது 38.9 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பைப் பதிவு செய்தது.

வரைபடம் 5.10 சென்மதி நிலுவை




## 5.9 பன்னாட்டு முதலீட்டு நிலைமை

**பன்னாட்டு முதலீட்டு நிலைமையில் பதிவு செய்யப்பட்டிருந்த வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் 2014இன் இறுதியில் அதிகரிப்பொன்றினைக் காட்டியிருந்தது.** ஒதுக்குச் சொத்துக்களின் கணிசமான அதிகரிப்பினால் உதவப்பட்ட மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2013இன் இறுதியில் பதிவு செய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 9.5 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2014இல் ஐ.அ.டொலர் 10.9 பில்லியனுக்கு 15.5 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. அதேவேளை, 2014இல் வழங்கப்பட்ட நாட்டிற்கான முறியினைத் தொடர்ந்த வெளிநின்ற படுகடன் பிணையங்கள் அதிகரித்தமையினால் முக்கிய காரணத்தினால் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 2013இன் இறுதியிலான ஐ.அ.டொலர் 47.8 பில்லியனிலிருந்து 2014இன் இறுதியில் ஐ.அ.டொலர் 53.2 பில்லியனுக்கு அதிகரித்தது. மொத்த வெளிநாட்டு பொறுப்புக்களில் அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி 49.5 சதவீதத்தை வைத்திருந்த அதேவேளை தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் 50.5சதவீதத்தை வைத்திருந்தன. மேலும், அரசாங்கம், வங்கித்தொழில் துறை மற்றும் தனியார் துறை என்பவற்றால் நீண்டகால நிதியியல் முக்கியத்துவத்தைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தும் வகையில் 2014இன் இறுதியில் மொத்த வெளிநின்ற வெளிநாட்டு பொறுப்புக்களில் 82.2 சதவீதம் நீண்ட கால பொறுப்புக்களாக விளங்கி 2014இன் இறுதியில் காணப்பட்ட மொத்த வெளிநின்ற வெளிநாட்டு பொறுப்புக்களில் 47.9 சதவீதம் வெளிநின்ற வெளிநாட்டு கடன்களாகக் காணப்பட்ட வேளையில் 20.2 சதவீதம் படுகடன் பிணையங்களாகக் காணப்பட்டன. வெளிநின்ற பொறுப்புக்கள் மற்றும் சொத்து நிலைமையின் அதிகரிப்புடன் 2014இன் இறுதியில் தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை 2013இன் இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 38.4 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து ஐ.அ.டொலர் 42.2 பில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தது.

### 5.9.1 நேரடி முதலீட்டு நிலைமை

**2014இன் இறுதியில் பங்குரிமை மூலதனம் மற்றும் படுகடன் கருவிகள் என்பவற்றை உள்ளடக்கிய நேரடி முதலீடு அதிகரித்தது.** 2014 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 944 மில்லியன் நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் மூலம் மொத்த நேரடி முதலீட்டு நிலைமை 2013இன் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 9.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இன் இறுதியில் ஐ.அ.டொலர் 10.5 பில்லியனுக்கு அதிகரித்தது. மொத்த நேரடி முதலீட்டு நிலைமையில், 76.0 சதவீதமானது. பங்குரிமை மூலதனம் வடிவில் காணப்பட்ட வேளையில் 24.0 சதவீதமானது கம்பனிகளுக்கிடையேயான

**அட்டவணை 5.10**

**பன்னாட்டு முதலீட்டு நிலைமை (பீ.பி.எம்.6 சமர்ப்பிப்பு வடிவமைப்பு)**

ஐ.அ.டொ.மில்லியன்

(கால முடிவிலான நிலைமை)

| வகை | 2013 (அ) | | 2014 (ஆ) | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| **நேரடி முதலீடு (இ)** | **540** | **8,959** | **607** | **10,511** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் | 537 | 6,859 | 604 | 7,984 |
| படுகடன் கருவிகள் | 3 | 2,100 | 3 | 2,527 |
| **சொத்துப்பட்டியல் முதலீடுகள்** | **-** | **9,473** | **-** | **12,918** |
| மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் | - | 1,044 | - | 2,192 |
| ஏனைய துறைகள் | - | 1,044 | - | 2,192 |
| படுகடன் கருவிகள் (ஈ) | - | 8,429 | - | 10,726 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | 1,954 | - | 2,263 |
| நீண்ட காலம் | - | 1,954 | - | 2,263 |
| மத்திய அரசாங்கம் | - | 6,476 | - | 8,289 |
| குறுங்காலம் | - | 507 | - | 399 |
| நீண்ட காலம் | - | 5,968 | - | 7,890 |
| ஏனைய துறைகள் | - | - | - | 174 |
| நீண்ட காலம் | - | - | - | 174 |
| **நிதியியல் பெறுதிகள்** | **-** | **-** | **-** | **-** |
| **ஏனைய முதலீடு** | **1,420** | **29,376** | **2,108** | **29,736** |
| **நாணயமும் வைப்புக்களும்** | **283** | **1,886** | **558** | **1,594** |
| மத்திய வங்கி | - | 6 | - | 6 |
| குறுங்காலம் | - | 6 | - | 6 |
| நீண்ட காலம் | - | - | - | - |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 283 | 1,880 | 558 | 1,587 |
| குறுங்காலம் | 246 | 1,880 | 388 | 1,587 |
| நீண்ட காலம் | 37 | - | 171 | - |
| **கடன்கள்** | **-** | **24,507** | **-** | **25,451** |
| மத்திய வங்கி | - | 2,056 | - | 1,248 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | - | 2,056 | - | 1,248 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | 2,924 | - | 4,282 |
| குறுங்காலம் | - | 2,003 | - | 3,159 |
| நீண்ட காலம் | - | 921 | - | 1,123 |
| மத்திய அரசாங்கம் | - | 15,814 | - | 15,762 |
| நீண்ட காலம் | - | 15,814 | - | 15,762 |
| ஏனைய துறைகள் (உ) | - | 3,713 | - | 4,159 |
| நீண்ட காலம் | - | 3,713 | - | 4,159 |
| **வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்** | **460** | **2,089** | **558** | **1,681** |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 118 | - | 126 | - |
| குறுங்காலம் | 118 | - | 126 | - |
| ஏனைய துறைகள் (ஊ) | 342 | 2,089 | 432 | 1,681 |
| குறுங்காலம் | 342 | 2,089 | 432 | 1,681 |
| **பெறவேண்டிய/செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள்** | **678** | **285** | **992** | **437** |
| மத்திய வங்கி (எ) | - | 285 | - | 437 |
| குறுங்காலம் | - | 285 | - | 437 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 678 | - | 992 | - |
| குறுங்காலம் | 678 | - | 992 | - |
| **சிறப்பு எடுப்பனவு உரிமைகள் (சி.எ.உ.)** | **-** | **609** | **-** | **573** |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **7,495** | | **8,208** | |
| நாணயவியல் தங்கம் | 884 | | 893 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 16 | | 9 | |
| ப.நா.நி. இல் ஒதுக்கு நிலைமை | 74 | | 69 | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 6,522 | | 7,237 | |
| நாணயமும் வைப்புக்களும் | 3,309 | | 3,795 | |
| நாணய அதிகார சபைகள் மீதான பெறுகைகள் | 2,843 | | 1,798 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான பெறுகைகள் | 465 | | 1,997 | |
| பிணையங்கள் | 3,213 | | 3,442 | |
| படுகடன் பிணையங்கள் | 3,213 | | 3,442 | |
| **மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள்** | **9,456** | **47,808** | **10,924** | **53,164** |
| **தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை** | | **-38,353** | | **-42,241** |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| பமுறி-முதிர்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு | | | | |
| குறுங்காலம் | 1,384 | 7,814 | 1,937 | 9,462 |
| நீண்ட காலம் | 8,072 | 39,994 | 8,986 | 43,703 |

(அ) திருத்தப்பட்டது

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(ஆ) தற்காலிகமானது

(இ) முதலீட்டு சபை, கொழும்புப் பங்கு பரிவர்த்தனை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் நேரடி முதலீட்டு நிலைமைகளினை உள்ளடக்குகின்றது.

(ஈ) உள்நாட்டு நாணய வெளியீடுகள் புத்தகம் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட அதேவேளை வெளிநாட்டு நாணய படுகடன் வெளியீடுகள் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

(உ) அரசிற்கு சொந்தமான வியாபார நிறுவனங்களால் பெறப்பட்ட செயற்திட்ட கடன்களின் வெளிநின்ற கடன்களை உள்ளடக்குகின்றது.

(ஊ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகள் என்பவற்றின் வெளிநின்ற வர்த்தக கொடுகடன் நிலைமையை உள்ளடக்குகின்றது.

(எ) மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் வெளிநின்ற நிலமை

கடன்பாடுகள் மற்றும் பங்குதாரர் முற்பண வடிவில் காணப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் குறிப்பிடத்தக்க சந்தை நன்மைகளின் காரணமாக மொத்த உரிமையாண்மை நிலைமை ஐ.அ.டொலர் 7,984 மில்லியனுக்கு 16.4 சதவீதத்தால் அதிகரித்தது. நேரடி முதலீட்டு நிறுவனங்களின் கம்பனிகளுக்கிடையேயான கடன்பாடுகளை முக்கியமாக உள்ளடக்கிய வெளிநின்ற படுகடன் 2014இன் இறுதியில் ஐ.அ.டொலர் 2,527 மில்லியனுக்கு 20.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும், இலங்கையிலுள்ள நிறுவனங்களினால் வெளிநாட்டில் மேற்கொள்ளப்பட்ட நேரடி முதலீடுகளின் இருப்பு 2013இன் இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 540 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2014இன் இறுதியில் ஐ.அ.டொலர் 607 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தது. இவ்வெளிநோக்கிய முதலீடு முக்கியமாக தென்கிழக்காசியாவில் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மீதான முதலீடுகளை உள்ளடக்கியிருக்கிறது.

### 5.9.2 சொத்துப்பட்டியல் முதலீட்டு நிலைமை

**2014 காலப்பகுதியில் பங்குரிமை மூலதனம், முதலீட்டு நிதியப் பங்குகள் மற்றும் படுகடன் பிணையங்கள் போன்றவற்றை கொண்டுள்ள நேரடி முதலீடுகள் அதிகரித்தன.** மொத்த வெளிநின்ற சொத்துப் பட்டியல் முதலீடானது 2013இன் முடிவில் காணப்பட்ட 36.4 சதவீத அதிகரிப்பிலிருந்து 2014இன் முடிவில் ரூ.12.9 பில்லியன் ஐ.அ.டொலருக்கு அதிகரித்தது. மொத்த வெளிநின்ற சொத்துப் பட்டியல் முதலீட்டில் ஐ.அ.டொலர் 2.2 பில்லியன் ஐ.அ.டொலர் பங்குரிமை மற்றும் முதலீட்டு நிதிய பங்குகள் வடிவில் காணப்பட்ட வேளையில் ஐ.அ.டொலர் 10.7 பில்லியன் ஐ.அ.டொலர் படுகடன் பிணையங்களின் வடிவில் காணப்பட்டன. அரசாங்கம், வங்கித் தொழில்துறை மற்றும் அரசிற்கு சொந்தமான வியாபார முயற்சிகள் போன்றவற்றால் வழங்கப்பட்ட வெறிநாட்டு முதலீட்டு படுகடன் பிணையங்கள், ஆண்டின் இறுதியில் ரூ.2.3 பில்லியன் ஐ.அ.டொலரினால் அதிகரித்தன. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் ஐ.அ.டொலரிலான தேசிய சேமிப்பு வங்கியால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 250 மில்லியன் சிறிலங்கன் எயார்லைன்ஸினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 175 மில்லியன் போன்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள், மற்றும் ஐ.அ. டொலர் 3 மில்லியனாக விளங்கிய வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் சந்தை விலை அதிகரிப்பு போன்றவை பொதுப்படுகடன் பிணையங்களின் அதிகரிப்புக்கு முக்கியமான காரணமாக அவதானிக்கப்பட்டது. மொத்த வெளிநின்ற படுகடன் பிணையங்களில் 3.7 சதவீதம் மட்டுமே 2014இன் இறுதியில் ஒரு ஆண்டிற்கும் குறைவான முதிர்ச்சியுடனான திறைசேரி உண்டியல்களைக் கொண்டிருந்தது.

### 5.9.3 ஏனைய முதலீட்டு நிலைமை

#### நாணயம் மற்றும் வைப்புக்கள்

**2014இன் இறுதியில் உள்ளவாறு, நாணயம் மற்றும் வைப்புக்கள் தொடர்பான சொத்து நிலைமை அதிகரித்த வேளையில் பொறுப்புக்களின் நிலைமை குறைவடைந்தது.** நாணயம் மற்றும் வைப்புக்கள் தொடர்பான சொத்துக்கள் வதிவற்றோர் வங்கிகளில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைத்திருக்கப்பட்ட வைப்புக்களை 2013ஆம் ஆண்டிறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 283 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் 558 மில்லியனாக காணப்பட்டது. அதேவேளை முக்கியமாக உள்ளடக்கிய வதிவுள்ளோரின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் வெளிநாட்டு நாணய வதிவற்றோர் கணக்குகளை உள்ளடக்கிய நாயணம் மற்றும் வைப்புக்கள் தொடர்பான பொறுப்புக்கள் 2013இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1.9 பில்லியனிலிருந்து 2014இல் ஐ.அ.டொலர் 1.6 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.

#### கடன்கள்

**வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தானங்கள், தனியார்துறை மற்றும் அரசிற்கு சொந்தமான வியாபார முயற்சிகள் என்பவற்றின் வெளிநாட்டுக் கடன் வெளிநின்ற இருப்புக்கள் அதிகரித்த வேளையில் பன்னாட்டு நாணய நிதியத்திற்கான இலங்கை மத்திய வங்கியின் கடன் பொறுப்புக்கள் 2014இன் இறுதியில் உள்ளவாறு வீழ்ச்சியடைந்தது.** மொத்த பொறுப்புக்களில் 47.9 சதவீதத்திற்கு வகைகூறும் வெளிநாட்டு கடன் பொறுப்புக்கள் 2013இன் இறுதியில் உள்ளவாறான ஐ.அ.டொலர் 24.5 பில்லியனிலிருந்து 2014இன் இறுதியில் உள்ளவாறு ஐ.அ.டொலர் 25.5 பில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தது. அதேவேளை, செலாவணி வீத மாறுபாடுகளின் தாக்கம் காரணமாக, ஐ.அ.டொலர் 646 மில்லியன் தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல் காணப்பட்டமைக்கு மத்தியிலும் அரசாங்கத்தின் மொத்த கடன் பொறுப்புக்கள் 2013இன் இறுதியின் ஐ.அ.டொலர் 15,814 மில்லியனிலிருந்து 2014இன் இறுதியில் ஐ.அ.டொலர் 15,762 மில்லியனுக்கு குறைவடைந்தன. குறுங்கால மற்றும் நீண்டகால பொறுப்புக்களின் அதிகரிப்பின் மூலம் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனத்தின் தேறிய பொறுப்புக்கள் 2014இன் இறுதியில் உள்ளவாறு ஐ.அ.டொலர் 4.3 பில்லியனுக்கு அதிகரித்தது. தனியார் துறை மற்றும் அரசிற்கு சொந்தமான வியாபார முயற்சிகளின் வெளிநின்ற கடன் பொறுப்புக்கள் 2013இன் இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 3.7 பில்லியனிலிருந்து 2014இன் இறுதியில் உள்ளவாறு ஐ.அ.டொலர் 4.2 பில்லியனுக்கு அதிகரித்தன. பன்னாட்டு நாணய நிதியத்தின் துணைநில் ஒழுங்குவிதி நிகழ்ச்சித்திட்ட கடன் வசதிகளின் தொடர்ச்சியான மீள் செலுத்தல்கள் மூலம் 2014இன் இறுதியில் உள்ளவாறான வெளிநின்ற நிலைமை 2014இன் இறுதியில் ஐ.அ.டொலர் 1.2 பில்லியனுக்கு குறைந்தது.

#### வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள்

**வர்த்தக கொடுகடன் மற்றும் வழங்கப்பட்ட முற்பணங்களின் வெளிநின்ற நிலைமை அதிகரித்த வேளையில் 2014இன் இறுதியில் பெறப்பட்ட வர்த்தக கொடுகடன் வீழ்ச்சியடைந்தது.** ஏற்றுமதியாளர்கள் தங்கள் கொடுகடன் வசதிகளை தொடர்ச்சியாக வதிவற்றோருக்கு வழங்கியதன் மூலம் இலங்கை கம்பனிகளால் வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் 2014 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு ஐ.அ.டொலர் 558 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தது. அதேவேளை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வர்த்தக கொடுகடன்கள், வர்த்தக கொடுகடனின் மொத்த வெளிநின்ற நிலைமையினை 2013 இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 2,089 மிலிலயனுடன் ஒப்பிடுகையில் 2014இன் இறுதியில் ஐ.அ.டொலர் 1,681 மில்லியன் வீழ்ச்சியை தோற்றுவித்தது.


#### பெறத்தக்க/ கொடுபடத்தக்க ஏனைய கணக்குகள் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள்

**2014இன் இறுதியில் உள்ளவாறு பெறத்தக்க மற்றும் கொடுபடத்தக்க ஏனைய கணக்குகளின் வெளிநின்ற நிலைமை அதிகரிப்பை பதிவுசெய்தது.** வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் குறுங்கால நிலுவைகளை முக்கியமாக உள்ளடக்கியிருந்த ஏனைய பெறத்தக்க கணக்குகள் 2014இன் இறுதியில் அதிகரித்தது. மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் வெளிநின்ற குறுங்கால பொறுப்புக்களின் நிலுவையினை முக்கியமாக உள்ளடக்கியிருந்த கொடுபடத்தக்க ஏனைய கணக்குகள் 2013இன் இறுதியில் ஐ.அ.டொலர் 285 மில்லியனிலிருந்து 2014இன் இறுதியில் ஐ.அ.டொலர் 437 மில்லியனுக்கு அதிகரித்திருந்தது. அதேவேளை, நாணயமாற்று வீத மாற்றங்களினால் இலங்கையின் சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் வெளிநின்ற பொறுப்பு நிலைமை சிறிதளவால் மாற்றமடைந்து 2014இன் இறுதியில் ஐ.அ.டொலர் 573 மில்லியன் பெறுமதியைக் காட்டியது.

### 5.9.4 ஒதுக்குச் சொத்து நிலைமை

**வெளிநாட்டு நாணய ஒதுக்குகள், தங்க நிலுவைகள், பன்னாட்டு நாணய நிதியத்தின் ஒதுக்கு நிலைமைகள், சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடமைகள் மற்றும் ஏனைய ஒதுக்குச் சொத்துக்களை உள்ளடக்கியுள்ள மத்திய வங்கி மற்றும் அரசாங்கத்தின் ஒதுக்குச் சொத்துக்கள் 2014இன்**

**வரைபடம் 5.11 காலாண்டுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும்**




**இறுதியில் உள்ளவாறு ஐ.அ.டொலர் 8.2 பில்லியனாக விளங்கின.** 2014 ஆண்டுகாலப்பகுதியில் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் கணக்கு மற்றும் பன்னாட்டு நாணய நிதிய துணைநில் ஒழுங்குகள் கொடுப்பனவுகள் என்பவற்றிற்கான வெளிப்பாய்ச்சல்களுக்கு மத்தியிலும் 2014 சனவரி மற்றும் ஏப்பிறலின் நாட்டுக்கான முறிவழங்கல்களின் வருவாய்கள், வெளிநாட்டு நிதிய திட்டங்களின் கீழான பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் வெளிநாட்டு செலாவணி சந்தையின் மிகை திரவத்தன்மையின் தேறிய உள்ளீர்ப்பு என்பன ஒதுக்கு சொத்துநிலை மேம்பட உதவின. அதேவேளை வைப்புக்கள் பெறும் கூட்டுத்தாபனத்தின் ஒதுக்குச் சொத்துக்கள் மற்றும் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களை உள்ளடக்கியுள்ள மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் 2014இன் இறுதியில் ஐ.அ.டொலர் 9.9 பில்லியனுக்கு அதிகரித்தன.

2014 **இறுதியிலுள்ளவாறு மத்திய வங்கி மற்றும் அரசாங்கத்தின் ஒதுக்கு சொத்து நிலைமை பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 3 மாத இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் 5.1 மாத பொருட்களின் இறக்குமதிக்கும் 4.3 மாத பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிக்கும் சமனாக காணப்பட்டது.** மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் 6.1 மாத இறக்குமதிப் பொருட்களுக்கும் மற்றும் 5.1 மாத இறக்குமதிப் பொருட்கள் மற்றும் பணிகளுக்கும் சமனாக காணப்பட்டது. அதேவேளை, 2014இன் இறுதியில் ஒதுக்குச் சொத்துக்களின் நிலைமை நாட்டின் குறுங்கால படுகடன் மற்றும் பொறுப்புக்களின் 2013ன் இறுதியுடன் ஒப்பிடுகையில் 64 சதவீதத்தை உள்ளடக்கியிருந்தது.

**அட்டவணை 5.11 மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் ஒட்டுமொத்த மீதி**

கால இறுதியிலான நிலை

| | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா.மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 (அ) | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 (அ) |
| 1. அரசின் வெளிநாட்டு சொத்து | 88 | 615 | 631 | 465 | 635 | 9,747 | 70,088 | 80,209 | 60,857 | 83,262 |
| 2. மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்து | 7,109 | 6,134 | 6,475 | 7,030 | 7,573 | 788,722 | 698,666 | 823,375 | 919,171 | 992,438 |
| 3. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2) | 7,196 | 6,749 | 7,106 | 7,495 | 8,208 | 798,469 | 768,754 | 903,584 | 980,028 | 1,075,700 |
| 4. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டு சொத்து | 1,424 | 1,241 | 1,480 | 1,078 | 1,676 | 158,031 | 141,394 | 188,195 | 141,008 | 219,641 |
| 5. மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (3+4) (ஆ) | 8,621 | 7,991 | 8,586 | 8,574 | 9,884 | 956,500 | 910,148 | 1,091,779 | 1,121,036 | 1,295,342 |
| 6. ஒதுக்குக்கடன் தொடர்புடைய பொறுப்புக்கள் (இ) | 2,125 | 2,737 | 2,943 | 2,347 | 1,691 | 235,770 | 311,769 | 374,185 | 306,825 | 221,593 |
| 7. தேறிய பன்நாட்டு ஒதுக்குகள் (3-6) | 5,071 | 4,012 | 4,163 | 5,149 | 6,517 | 562,701 | 456,985 | 529,399 | 673,203 | 854,107 |
| 8. ஒட்டுமொத்த நிலுவை (ஈ) | 921 | -1,059 | 151 | 985 | 1,369 | 87,974 | -105,716 | 72,414 | 143,804 | 180,904 |
| 9. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மாதங்களின்படி | | | | | | | | | | |
| 9.1 பொருட்களின் இறக்குமதிகள் | 6.4 | 4.0 | 4.4 | 5.0 | 5.1 | | | | | |
| 9.2 பொருட்கள், பணிகளின் இறக்குமதிகள் | 5.7 | 3.6 | 3.9 | 4.2 | 4.3 | | | | | |
| 10. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின்படி | | | | | | | | | | |
| 10.1 பொருட்களின் இறக்குமதிகள் | 7.7 | 4.7 | 5.4 | 5.7 | 6.1 | | | | | |
| 10.2 பொருட்கள், பணிகளின் இறக்குமதிகள் | 6.8 | 4.3 | 4.7 | 4.8 | 5.1 | | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) 'வெளிநாட்டில் நேரடி முதலீடு' மற்றும் 'வழங்கப்பட்ட வர்த்தகக்கடன் மற்றும் முற்பணங்கள்' வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக
(இ) வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நீங்கலாக மத்திய வங்கியின் மொத்த வெளிநின்ற படுகடன்
(ஈ) ஆண்டுக்காலப்பகுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலைமையின் மாற்றம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**குறிப்பு: பிபீஎம் 6இன் பின்பற்றுதலின் பின்னர் திரண்ட நிலுவையினை கணிப்பிடல்**

2013இல் பிபீஎம் 6இன் பின்பற்றுதலுடன், திரண்ட நிலுவையானது தேறிய பன்னாட்டு ஒதுக்க நிலைமையின் மாற்றத்திலிருந்து மாத்திரம் பின்வரும் முறையில் கணிப்பிடப்படும்.

திரண்ட நிலுவை = தேறிய பன்னாட்டு ஒதுக்கிலான மாற்றம்

= காலத்தில் இறுதியிலான தேறிய ஒதுக்குச் சொத்து நிலை ஆரம்ப காலப்பகுதியிலான தேறிய ஒதுக்கு சொத்து நிலை

தேறிய ஒதுக்கு சொத்து நிலைமையானது ஒதுக்கு சொத்து நிலை மற்றும் ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்பு நிலை என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடு என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. இதன்படி, திரண்ட நிலுவை நிலமையானது சென்மதி நிலுவையிலிருந்து இனிமேல் கணிப்பிடப்படமாட்டாது என்பதுடன் ஆண்டறிக்கை 2014இன் அட்டவணை 5.11: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை என்பதன் கீழும் இதற்கும் பின்னரான தொடர்ந்தான பதிப்புக்களுடன் விரிவாக தரப்படும்.

ஒதுக்கு சொத்துக்கள் முன்னேற்றமடைந்தமைக்கு மத்தியிலும் குறுங்கால படுகடனை அதிகரிப்பு ஒதுக்கு போதுமான தன்மை விகிதத்தின் மிதப்படுத்தலை தோற்றுவித்தது. அதேவேளை ஒரு ஆண்டின் பின் முதிர்ச்சியை உடைய திறைசேரி முறிகள் நீங்கலான குறுங்கால படுகடனுக்கான ஒதுக்குச் சொத்துக்கள் 2013இன் இறுதியின் 85 சதவீதத்திலிருந்து 2014 இறுதியில் 84 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

## 5.10 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவு

### 5.10.1 வெளிநாட்டுப் படுகடன்

**நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் இருப்பு 2014இன் இறுதியில் அதிகரித்தது.** இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2013இன் இறுதியிலுள்ளவாறான ஐ.அ.டொலர் 39.9 பில்லியனிலிருந்து 2014இன் இறுதியில் 43.0 பில்லியனாக அதிகரித்தது. இதற்கு ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் ஆறாவது மற்றும் ஏழாவது வழங்கல், சிறிலங்கன் எயார்லைன்ஸ் (ஐ.அ.டொலர் 175 மில்லியன்) தேசிய சேமிப்பு வங்கியின் (ஐ.அ.டொலர் 250 மில்லியன்) பன்னாட்டு முறி வழங்கல் போன்றன அரசாங்கம், அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகள், தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் நீண்ட கால வெளிநாட்டுக் கடன்கள் வடிவிலான தேறிய உட்பாய்ச்சல்கள் முக்கிய காரணங்களாகும். எனினும் மொத்த வெளிநாட்டுப் படுகடன் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2013இன் இறுதியில் 59.2 சதவீதத்திலிருந்து 2014இன் இறுதியில் 57.4 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. இதற்கு மொ.உ.உற்பத்தி வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் உயர்ந்த வீத அதிகரிப்பு காரணமாக விளங்கியது.

**நீண்டகால வெளிநாட்டுக் கடன்களை முக்கியமாக உள்ளடக்கியுள்ள இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியல் 2014 இறுதியில் மொத்தப் படுகடன் இருப்புக்களில் 83.1 சதவீதமாக விளங்கியது.** வர்த்தக வங்கிகளின் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு வடிவிலான வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் தனியார்துறை கம்பனிகளின் வர்த்தகக் கொடுகடன் என்பவற்றை முக்கியமாக உள்ளடக்கியுள்ள குறுங்கால வெளிநாட்டுப் படுகடன் 2014 இறுதியில் மொத்த வெளிநாட்டுப் படுகடனில் 16.9 சதவீதமாகவும் ஐ.அ.டொலர் 7.3 பில்லியனாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமைகளில் 59.2 சதவீதம் வெளிநாட்டுக் கடன்கள், 25.0 சதவீதம் படுகடன் பிணையங்கள் 5.9 சதவீதம் நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன்கள், 4.9 சதவீதம் வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் 3.7 சதவீதம் நாணயம்


**அட்டவணை 5.12 வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலை (பீபிஎம் 6 வெளிப்படுத்துகை கட்டமைப்பு)**

ஐ.அ.டொ.மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

| வகை | 2013 (அ) | 2014 (ஆ) |
|---|---|---|
| **மத்திய அரசாங்கம்** | **22,290** | **24,051** |
| **குறுங்காலம்** | **507** | **399** |
| படுகடன் பிணையங்கள் | 507 | 399 |
| திறைசேரி உண்டியல்கள் (இ) | 507 | 399 |
| **நீண்ட காலம்** | **21,783** | **23,651** |
| படுகடன் பிணையங்கள் | 5,968 | 7,890 |
| திறைசேரி முறிகள் (இ) | 2,483 | 2,603 |
| நாட்டுக்கான பன்நாட்டு முறிகள் (ஈ) | 3,485 | 5,287 |
| கடன்கள் | 15,814 | 15,762 |
| **மத்திய வங்கி** | **2,956** | **2,264** |
| **குறுங்காலம்** | **291** | **443** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 6 | 6 |
| கொடுக்கவேண்டிய ஏனைய கணக்குகள் | 285 | 437 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் | 285 | 437 |
| **நீண்ட காலம்** | **2,665** | **1,821** |
| சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்குகள் | 609 | 573 |
| கடன்கள் | 2,056 | 1,248 |
| ப.நா.நி உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | 2,056 | 1,248 |
| துணைநில் ஒழுங்குகள் (ப.நா.நி- து.நில் வசதி) | 2,056 | 1,248 |
| **வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்** | **6,758** | **8,133** |
| **குறுங்காலம்** | **3,884** | **4,747** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் (உ) | 1,880 | 1,587 |
| வர்த்தக வங்கிகள் | 1,880 | 1,587 |
| கடன்கள் | 2,003 | 3,159 |
| வர்த்தக வங்கிகள் | 2,003 | 3,159 |
| **நீண்ட காலம்** | **2,875** | **3,386** |
| படுகடன் பிணையங்கள் (ஈ) | 1,954 | 2,263 |
| வர்த்தக வங்கிகள் | 990 | 1,037 |
| வைப்புக்களை ஏற்கும் ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 964 | 1,226 |
| கடன்கள் | 921 | 1,123 |
| வர்த்தக வங்கிகள் | 825 | 1,064 |
| வைப்புக்களை ஏற்கும் ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 96 | 59 |
| **ஏனைய துறைகள் (ஊ)** | **5,801** | **6,014** |
| **குறுங்காலம்** | **2,089** | **1,681** |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் (எ) | 2,089 | 1,681 |
| **நீண்ட காலம்** | **3,713** | **4,333** |
| படுகடன் பிணையங்கள் (ஈ) | - | 174 |
| கடன்கள் | 3,713 | 4,159 |
| தனியார் துறை கூட்டுத்தாபனங்கள் | 1,410 | 1,542 |
| அரசிற்கு சொந்தமான நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | 2,303 | 2,618 |
| **நேரடி முதலீடு : கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஏ)** | **2,100** | **2,527** |
| **மொத்த வெளிநாட்டு படுகடன் நிலமை** | **39,905** | **42,988** |
| **மொ.உ.உ. சதவீதமாக** | | |
| மொத்த வெளிநாட்டு படுகடன் | 59.4 | 57.4 |
| குறுங்கால படுகடன் | 10.1 | 9.7 |
| நீண்டகால படுகடன் | 49.3 | 47.7 |
| **மொத்த வெளிநாட்டு படுகடனின் சதவீதமாக** | | |
| குறுங்கால படுகடன் | 17.0 | 16.9 |
| நீண்டகால படுகடன் | 83.0 | 83.1 |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | |
| **படுகடன் பிணையங்கள்-முகப்பெறுமதியில் துறைவாரியான பகுப்பாய்வு** | **9,001** | **10,764** |
| மத்திய அரசாங்கம் | 7,151 | 8,489 |
| திறைசேரி உண்டியல்கள் | 565 | 424 |
| திறைசேரி முறிகள் | 3,086 | 3,065 |
| நாட்டுக்கான பன்நாட்டு முறிகள் | 3,500 | 5,000 |
| மத்திய வங்கி தவிர்ந்த, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனம் | 1,850 | 2,100 |
| வர்த்தக வங்கிகள் | 1,000 | 1,000 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 850 | 1,100 |
| ஏனைய துறைகள் | - | 175 |

(அ) திருத்தப்பட்டது — மூலம் : இலங்கை மத்திய வங்கி
(ஆ) தற்காலிகமானது
(இ) புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(ஈ) சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டது
(உ) வெளிநாட்டு நாணயங்களை வைத்திருக்கும் வதிவற்றோரின் வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது
(ஊ) தனியார் துறை மற்றும் அரசசார் தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது
(எ) இலங்கை பெற்றோழிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தக கொடுகடனை உள்ளடக்கியுள்ளது
(ஏ) முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பணிகள் மீது கம்பனிகளுக்கிடையிலான கடன் பெறுகைகள் மற்றும் பங்குதாரர் முற்பணங்கள் உள்ளடங்கலாக

வரைபடம் 5.12 வெளிநாட்டுப் படுகடன்




மற்றும் வைப்புக்கள் மற்றும் எஞ்சியவை செலுத்த வேண்டிய கணக்குகளையும் உள்ளடக்கியுள்ளன. 2014 இறுதியில் அரசு மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் இரண்டும் நடைமுறையில் வைத்திருக்கும் முறையே ஐ.அ.டொலர் 5 பில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 2.1 பில்லியன் முகப்புப் பெறுமதியுடன் கூடிய வெளிநிற்கும் பன்னாட்டு முறிகளுடனான அவற்றின் வெளிநாட்டு நிதியிடல் தேவைகளுக்கான படுகடன் பிணைய வழங்கலின் மீது குறிப்பிடத்தக்களவில் தங்கியுள்ளன.

## 5.10.2 வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

2014இல் கடன் தீர்ப்பனவு மற்றும் வட்டிக் கொடுப்பனவு என்பவற்றை உள்ளடக்கியுள்ள மொத்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் குறைவடைந்தன. பெயரளவு நியதிகளில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மீள்கொடுப்பனவுகள் 2013இன் ஐ.அ.டொலர் 3,540 மில்லியனில் இருந்து 2014இல் ஐ.அ.டொலர் 3,386 மில்லியனுக்கு குறைவடைந்தமைக்கு திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மீள்கொடுப்பனவில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அரசின் நீண்ட காலக் கடன்கள் தொடர்பிலான மூலதனக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்தமையுமே காரணமாகும். மொத்த மூலதன மீள்கொடுப்பனவுகள், ஐ.அ.டொலர் 793 மில்லியன் கொண்ட அரசின் நீண்டகாலக் கடன்பாடுகளின் மீள் கொடுப்பனவுகள், ஐ.அ.டொலர் 719 மில்லியன் கொண்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் மீள்கொடுப்பனவுகள், ஐ.அ.டொலர் 503 மில்லியன் கொண்ட முதிர்ச்சியடைந்த அரச பிணையங்கள் மற்றும் ஐ.அ.டொலர் 215 மில்லியன் கொண்ட தனியார் துறையின் கடன் பொறுப்புக்களின் மீள் கொடுப்பனவுகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. திறைசேரி உண்டியல்கள்

அட்டவணை 5.13 வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

| வகை | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா.மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013 (அ) | 2014 (ஆ) | 2010 | 2011 | 2012 | 2013 (அ) | 2014 (ஆ) |
| **1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | **1,853** | **1,798** | **2,672** | **3,540** | **3,386** | **208,984** | **199,233** | **334,592** | **456,095** | **441,972** |
| **1.1 கடன் தீர்த்தல்** | **1,234** | **1,092** | **1,791** | **2,481** | **2,230** | **138,941** | **121,246** | **222,916** | **319,749** | **291,003** |
| (i) பன்னாட்டு நாணய நிதியத்திற்கு | 46 | 11 | 57 | 453 | 719 | 5,238 | 1,238 | 7,413 | 57,683 | 93,904 |
| (ii) ஏனையவற்றிற்கு | 1,188 | 1,081 | 1,734 | 2,028 | 1,510 | 133,703 | 120,008 | 222,828 | 262,065 | 197,100 |
| அரச, நடுத்தர மற்றும் நீண்டகாலம் | 665 | 789 | 862 | 836 | 793 | 74,932 | 87,754 | 110,412 | 107,861 | 103,510 |
| அரச பிணையங்கள் | 92 | 95 | 628 | 719 | 503 | 10,406 | 10,406 | 80,991 | 92,610 | 65,516 |
| அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் துறை | 431 | 197 | 244 | 474 | 215 | 48,365 | 21,848 | 31,425 | 61,594 | 28,073 |
| **1.2 வட்டிக்கொடுப்பனவுகள்** | **619** | **706** | **881** | **1,059** | **1,157** | **70,043** | **77,987** | **111,676** | **136,346** | **150,969** |
| (i) பன்னாட்டு நாணய நிதியத்திற்கு | 7 | 10 | 36 | 33 | 20 | 803 | 1,081 | 4,639 | 4,298 | 2,546 |
| (ii) ஏனையவற்றிற்கு | 612 | 697 | 845 | 1,026 | 1,137 | 69,240 | 76,905 | 107,036 | 132,047 | 148,423 |
| மூலதனம் | | | 437 | 402 | 379 | | | 55,743 | 51,920 | 49,454 |
| படுகடன் பிணையங்கள் | | | 408 | 624 | 758 | | | 51,293 | 80,128 | 98,969 |
| **2. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள்** | **11,100** | **13,643** | **13,573** | **15,079** | **16,735** | | | | | |
| **3. பொருட்களின் ஏற்றுமதிகள், பணிகள், வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்களிலிருந்தான பெறுகைகள்** | **15,592** | **19,314** | **19,754** | **21,639** | **23,934** | | | | | |
| **4. படுகடன் பணி விகிதம்** | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) ஒட்டு மொத்த விகிதம் | 16.7 | 13.2 | 19.7 | 23.5 | 20.2 | | | | | |
| (ii) ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 16.2 | 13.0 | 19.0 | 20.3 | 15.8 | | | | | |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) ஒட்டு மொத்த விகிதம் | 11.9 | 9.3 | 13.5 | 16.4 | 14.1 | | | | | |
| (ii) ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 11.5 | 9.2 | 13.1 | 14.1 | 11.1 | | | | | |
| **5. அரசபடுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 1,219 | 1,474 | 2,191 | 2,386 | 2,172 | | | | | |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 65.8 | 82.0 | 82.0 | 67.4 | 64.1 | | | | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பன்னாட்டு நாணய நிதிய கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி

மற்றும் திறைசேரி முறிகளின் மீதான வட்டி கொடுப்பனவுகளை உள்ளடக்கியுள்ள அரசின் நடுத்தர மற்றும் நீண்ட கால வெளிநின்ற படுகடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்தமைக்கு அரசாங்கம் மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களால் வழங்கப்பட்ட பன்னாட்டு முறிகள் மீதான அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகளே காரணமாகும். குறைவடைந்த மூலதன மீள்ளிப்புக்கள் மற்றும் பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளின் அதிகரித்தமையின் முக்கிய காரணத்தால் பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளின் படுகடன் தீர்ப்பனவுகள், தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் சதவீதமாக 2013இன் 23.4 சதவீதத்திலிருந்து 2014இல் 20.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

## 5.11 செலாவணி வீத அசைவுகள்

**2014இல் செலாவணி வீதக் கொள்கையானது செலாவணி வீதத்தின் குறுங்கால தளம்பலினைச் சுமூகப்படுத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்தியதன் மூலம் வெளிநாட்டு செலாவணி சந்தையின் உறுதிப்பாட்டினைப் பேணியது.** கடுமையாக உயர்வடைதலைத் தடுப்பதற்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட உத்தரவாதத் தலையீடுகள் சிலவற்றினால் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராகத் உயர்வடைந்திருந்தது. ஏற்றுமதி வருவாய்கள், தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள், அரச பிணையங்கள் அரசிற்கான வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் தனியார் துறை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள வெளிநாட்டு முதலீடுகள் என்பனவற்றின் பேரிலான ஏனைய நிதியியல் உட்பாய்ச்சல்கள் போன்றவற்றின் வடிவிலான வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட அதிகரிப்பே உயர்வடைதல் அழுத்தத்துக்கான முக்கிய காரணமாகும். அதன்படி 2014இன் மூன்றாவது காலாண்டு இறுதியில் ரூபா ஐ. அ. டொலருக்கெதிராக 0.29 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது. எனினும் 2014இன் இறுதி காலாண்டில் அதிகரித்த இறக்குமதி கேள்வி மற்றும் அரச பிணைய சந்தைகளின் இணைந்த தேறிய வெளிப்பாய்ச்சல்கள் அதிகரித்தமையால் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 0.47 சதவீதத்தால் தேய்வடைவதற்கு இலங்கை ரூபா மீதான அழுத்தத்தை அதிகரித்தது. இது 0.23 சதவீத திரண்ட ஆண்டு தேய்வொன்றினை தோற்றுவித்தது. இதன்படி ஐ. அ. டொலருக்கெதிராக ஆண்டிறுதி மற்றும் சராசரி செலாவணி வீதங்கள் முறையே ரூபா 131.05 மற்றும் ரூ 130.56 ஆக விளங்கியது.

**2014இல் ஏனைய அனைத்து முக்கிய நாணயங்களுக்கும் எதிராக இலங்கை ரூபா உயர்வடைந்திருந்தது.** ரூபா, யப்பானிய யென் (13.48 சதவீதம்), யூரோ (13.19 சதவீதம்), ஸ்ரேலிங் பவுண் (5.65 சதவீதம்) மற்றும் இந்திய ரூபா (2.13 சதவீதம்) என்பவற்றுக்கெதிராக உயர்வடைந்து பன்னாட்டு சந்தைகளில் ஐ. அ. டொலருக்கு எதிரான குறுக்கு நாணய செலாவணி வீதங்களின் அசைவுகளை தோற்றுவித்தது, இதன்படி 2014 இறுதியில் ரூபா சிறப்பு எடுப்பனவு உரிமைக்கு எதிராகவும் 6.05 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது.

அட்டவணை 5.14 செலாவணி வீத அசைவுகள்

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கான ரூபா | | | | | | முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி வீதம் | | | ஆண்டுச் சராசரி வீதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2012 | 2013 | 2014 | 2012 | 2013 | 2014 | 2013 | 2014 | 2013 | 2014 |
| யூரோ | 168.13 | 180.45 | 159.42 | 164.01 | 171.51 | 173.47 | -6.83 | 13.19 | -4.37 | -1.13 |
| இந்திய ரூபா | 2.33 | 2.11 | 2.07 | 2.39 | 2.21 | 2.14 | 10.16 | 2.13 | 8.22 | 3.28 |
| யப்பானிய யென் | 1.48 | 1.25 | 1.10 | 1.60 | 1.32 | 1.24 | 18.78 | 13.48 | 20.74 | 7.17 |
| ஸ்டேர்லிங் பவுண் | 205.47 | 215.58 | 204.04 | 202.28 | 202.08 | 215.16 | -4.69 | 5.65 | 0.10 | -6.08 |
| ஐ.அ.டொலர் | 127.16 | 130.75 | 131.05 | 127.60 | 129.11 | 130.56 | -2.75 | -0.23 | -1.17 | -1.11 |
| சி.எ.உ. | 195.31 | 201.36 | 189.86 | 195.38 | 196.19 | 198.35 | -3.00 | 6.05 | -0.42 | -1.09 |
| பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதச் சுட்டெண்கள் (ஆ) (இ) (2010=100) | ஆண்டிறுதி சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | | | முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம் | | | |
| | | | | | | | ஆண்டிறுதி சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | |
| | 2012 | 2013 | 2014 | 2012 | 2013 | 2014 | 2013 | 2014 | 2013 | 2014 |
| பெ.ப.நா.வீ - 24 நாணயங்கள் | 90.33 | 90.97 | 96.44 | 90.44 | 91.39 | 91.99 | 0.71 | 6.02 | 1.05 | 0.66 |
| மெ.ப.நா.வீ - 24 நாணயங்கள் | 97.85 | 100.31 | 106.30 | 95.80 | 100.61 | 101.94 | 2.51 | 5.97 | 5.02 | 1.32 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) இலங்கை ரூபாவிற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. + / - அடையாளங்கள் ஒவ்வொரு நாணயங்களுக்கும் எதிராக முறையே பெறுமதி உயர்வு / தேய்வை குறிப்பிடுகின்றது.


(ஆ) பெ.ப.நா. வீதமென்பது 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் நாணயமாற்று வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் ஒப்பீட்டு முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கும் வர்த்தகப் பங்குகளின் அடிப்படையில் நிறையிடப்பட்டது. நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் தொடர்பின் கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்ட நாடுகளின் பணவீக்கம் வேறுபாடுகளுக்காக பெயரளவுத் பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதங்களை சீராக்குவதன் மூலமாக உ.ப.ந.வீதம் கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உண்மை தாக்கமுள்ள நாணயமாற்று வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்பட்டது.

(இ) நாணயமாற்று வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதி தேய்வு என்பது பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியல் நேரடியாக பிரதிபலித்தது.

குறிப்பு: பெ.ப.நா.வீ = பெயரளவு பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதம்
உ.ப.நா.வீ = உண்மை பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதம்

வரைபடம் 5.13 செலாவணி வீத அசைவுகள்





## 5.11.1 பெயரளவு மற்றும் உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 2014இல் மேலும் உயர்வடைந்தன.** 5 நாணயம் மற்றும் 24 நாணயக் கூடைகள் இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதமானது 6.02 சதவீதத்திற்கு சமமாக உயர்வடைந்து, நாணயக்கூடைகளிலுள்ள முக்கியமான நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெயரளவு உயர்வினைப் தோற்றுவித்தது. இலங்கை மற்றும் அதன் வர்த்தக பங்களர்களை கவனத்தில் கொண்டு பணவீக்க வேறுபாடுகளை கவனத்தில் எடுக்கின்ற உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமானது 5 நாணயம் மற்றும் 24 நாணயக் கூடைகளில் முறையே 6.47 சதவீதத்தினாலான மற்றும் 5.97 சதவீதத்தினாலான உயர்வினைக் காட்டின. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தின் இந்த உயர்வானது பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீத உயர்வுக்கும் அத்துடன் இலங்கையின் வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் ஓரளவு உயர்ந்த உள்நாட்டு பணவீக்கத்திற்கும் பங்களிப்பு செய்திருக்க முடியும்.

## 5.11.2 உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தி

**2014இல் உள்நாட்டு செலாவணிச் சந்தையில் கொடுக்கல்வாங்கல்களினுடைய அளவு அதிகரித்தது.** பன்னாட்டு வியாபாரத்தின் விரிவு, தொழிலாளர்களின் பணவனுப்பல்கள், சுற்றுலா பயணிகளின் வருவாய்கள் அதேபோல் சென்மதி நிலுவையினுடைய நிதியியல் கணக்குகளில் கொடுக்கல்வாங்கல்கள் என்பன உள்நாட்டு செலாவணிச் சந்தையின் உள்நோக்கிய அளவுகளின் அதிகரிப்புக்குப் பங்களித்தன. இதன்படி, உடன் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2013இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8,332 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ஐ.அ.டொலர் 8,804 மில்லியனுக்கு (மொத்த கொடுக்கல்வாங்கல்களில் 56.9 சதவீதம்) அதிகரித்தது. மேலும் முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2013இன் ஐ.அ.டொலர் 5,373 மில்லியனிலிருந்து 2014இல் ஐ.அ.டொலர் 6,672 மில்லியனுக்கு அதிகரித்தது. ஒட்டுமொத்தமாக வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2013இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 13,706 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014 ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 15,475 மில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, 2014 ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு, செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு சந்தையில் உறுதிப்பாட்டை பேணுவதற்கு கருவியாகவிருந்தது. இதன்படி, மத்தியவங்கி உள்நாட்டு வெளிநாட்டு நாணய மாற்றுச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 1,407 மில்லியனை உள்ளீர்த்ததுடன் ஐ.அ.டொலர் 862 மில்லியனை வழங்கியதன் விளைவாக ஐ.அ.டொலர் 545 மில்லியன் தேறிய உள்ளீர்ப்பைத் தோற்றுவித்தது.

வரைபடம் 5.14 வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல் அளவுகள்



5



**2014 ஆண்டு காலப்பகுதியில் சராசரியாக, ஒரு மாத, மூன்று மாத மற்றும் ஆறு மாதங்களுக்கான முன்னோக்கிய மிக இலாபங்களுடன் ஒப்பந்தங்களுக்கான முன்னோக்கிய மிகை மதிப்பு குறைவானதாகக் காணப்பட்டதுடன் இது குறுகிய காலத்தில் வெளிநாட்டு நாணயமாற்று சந்தையினுள் மேலும் உட்பாய்ச்சல் ஏற்படுத்துவதற்கான சந்தை எதிர்பார்ப்பைக் சுட்டிக்காட்டியது.** எனினும் ஆண்டின் இறுதி மாதத்தில் ஒரு மாத முன்னோக்கிய மிகை மதிப்பு ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமைக்கு பதிலிறுத்தும் விதத்தில் அதிகரித்து காணப்பட்டது. அதேவேளை, 2014இன் பல பகுதிகளில் வர்த்தக வங்கிகள் அவற்றின் தேறிய ஆரம்ப நிலைமைகளை சராசரியாக ஆகக் குறைந்த மட்டத்தில் ஆனால் எதிர்க்கணிய மட்டத்தில் பேணின. எனினும், 2014இன் இறுதிக் காலாண்டுப் பகுதியில் தேறிய திறந்த நிலைமை நேர்க்கணியமாக மாற்றமடைந்து சராசரியாக ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா பெறுமதி தேய்வடையுமென்ற சந்தை எதிர்பார்ப்பைக் குறித்துக்காட்டியது.